
திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# ஸப்தகிரி

## சமய மாத இதழ்

ஜூலை 2021, விலை ரூ.5/-



திருமலையப்ப ஸ்வாமி ஆனிவர ஆஸ்தானம்
16 ஜூலை 2021

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

## திருமலையப்ப ஸ்வாமிக்கு 2021, ஜூன் 22 முதல் 24 வரை நடைபெற்ற ஜ்யேஷ்டாபிஷேகத் திருக்காட்சிகள்





*ஏவமுக்தோ ஹ்ருஷீகேசோ*
*கு$_3$டா$_3$கேசேந பா$_4$ரத |*
*ஸேநயோருப$_4$ யோர்மத்$_4$யே*
*ஸ்தா$_2$பயித்வா ரதோ$_2$த்தமம் ||*

**ஸஞ்சயன் கூறுகிறார்.**
**திருதராஷ்டிரரே! அர்ஜுனனின்**
**வேண்டுதலுக்கிணங்க ஸ்ரீகிருஷ்ணன்**
**இரதத்தை இரண்டு படைகளுக்கும்**
**இடையில் நிறுத்தினார்.**

*– ஸ்ரீமத் பகவத் கீதை 1–24*

*நாராயணதே நமோ நமோ*
*நாரத$_3$ சன்னுத நமோ நமோ*

*முரஹர ப$_4$வஹர முகுந்த$_2$ மாத$_4$வ*
*க$_3$ருடக$_3$மன பங்கஜ நாப$_4$*
*பரம புருஷ ப$_4$வ ப$_3$ந்த$_4$ விமோசன*
*நரம்ருக$_3$ சரீர நமோ நமோ*

*ஜலதி$_4$சயன ரவிசந்த்$_3$ர விலோசன*
*ஜலருஹ ப$_4$வனுத சரணயுக$_3$*
*ப$_3$லி ப$_3$ந்த$_4$ன கோ$_3$பவதூ$_4$ வல்லப$_4$*
*நலினோத$_3$ர தே நமோ நமோ*

*ஆதி$_3$தே$_3$வ சகலாக$_3$ம பூஜித*
*யாத$_3$வகுல மோஹன ரூப*
*வேதோ$_3$த்$_3$த$_4$ர ஸ்ரீவேங்கட நாயக*
*நாத$_3$ப்ரிய தே நமோ நமோ*



நாரதரால் புகழப்படும் நாராயணனே, முரனை அழித்தவனும், பிறவிப்பிணியை போக்குபவனும், மோட்சத்தை தர வல்லவனும், திருமகள் நாதனும், கருடனின் நடையழகும், பிரம்மனைத் தாங்கும் நாபிக்கமலம் உடையவனும், புருஷர்களிலே சிறந்தவனும், பிறப்பறுப்பவனும், நரசிம்ம வடிவில் அவதரித்தவனும், திருப்பாற்கடலில் பள்ளி கொண்ட சூரிய சந்திரர்களை கண்களாகக் கொண்ட திருமகள் வருடும் அழகிய மென்மையான பாதங்களையுடையவனும், பலிச்சக்கரவர்த்தியின் கர்வத்தை அடக்கியவனும், கோபிகாஸ்த்ரீகளின் காதல் நாயகனும், தாமரைக் கண்களையுடயவனும், முழுமுதற் கடவுளும், யாதவக்குலத் தோன்றலும், வேதச்சரீரனும், இசைவிரும்பியுமான திருமலை நாயகனே உனக்கே ஆட்செய்வோம்.

*- அன்னமய்யா கீர்த்தனை*



திருமலை திருப்பதி தேவஸ்தானம்

## "ஶ்ரீவேங்கடேஸ்வரா சர்வஸ்ரேயஸ்சு அறக்கட்டளை"

*"மானிட சேவையே மாதவன் சேவை" எனும் பெரும் நோக்கத்துடன் தி.தி. தேவஸ்தானம் பல்வேறு சமூக நலச் செயல்களை நிர்வகிக்கின்றது. இதில் ஒரு பகுதியாக ஆதரவற்ற சிறார்களுக்கு உதவிக்கரம் நீட்டும் நோக்கத்துடன் 1943–ஆம் ஆண்டு ஶ்ரீவேங்கடேஸ்வரா பால மந்திரம் (திருப்பதி) அறக்கட்டளையை தி.தி.தே. நிறுவியது. இந்த ஶ்ரீவேங்கடேஸ்வரா பால மந்திரம் அறக்கட்டளையோடு ஶ்ரீவேங்கடேஸ்வரா ஜலநிதி திட்டம், கல்யாண மஸ்து திட்டம், ஶ்ரீவேங்கடேஸ்வரா தகவல் தொழில் நுட்ப அறக்கட்டளை போன்றவற்றை இணைத்து "ஶ்ரீவேங்கடேஸ்வரா சர்வஸ்ரேயஸ்சு அறக்கட்டளை" யாக வடிவமைக்கப்பட்டுள்ளது.*

### திட்டத்தின் நோக்கங்கள் :

1) ஆதரவற்ற சிறார்கள், முதியோர், ஆதரவற்றோர் பாக்கியமற்றோர், ஏழ்மையில் வாடும் தாழ்த்தப் பட்ட வகுப்பினர் போன்றோரின் வளர்ச்சி, பாதுகாப்பு நலனுக்காக தர்மசாலைகள், தங்கும் வசதி, இல்லங்கள் ஏற்படுத்துதல். பொருளாதாரத் தில் பின் தங்கிய மாணவ மாணவியர்க்கு பண உதவி அளித்தல்.

2) மாற்றுத் திறனாளிகளுக்கும், மனவளம் குன்றிய நோயாளிகளுக்கும் தகுந்த மருத்துவ உதவிகள் உண்டு பண்ணி அவர்களின் வாழ்வினை மேம் படுத்துவது, குலம், மதம், ஜாதி, வர்க்கம், வர் ணம் போன்ற வேறுபாடுகள் கடைப்பிடிக்காமல் அனைவரையும் சமமாகப் பார்ப்பது.

3) வெள்ளம், வறட்சி போன்ற இயற்கைச் சீற்றங் களின் போதும், தீப்பிடித்தல் போன்ற எதிர்பாராத சம்பவங்கள் நிகழும்போதும் விரைவான உதவி களை மேற்கொள்ளுதல்.

4) காது கேளாத, வாய் பேசாத குழந்தைகளுக்கும் மேற்படி குறைபாடுகளோடு பிறக்கும் சிசுக்களுக் கும் மறுவாழ்வு மையங்களை ஏற்பாடு செய்தல்.

5) மேற்குறிப்பிட்ட குறைபாடுகளோடு கிராமங்களில் உள்ள சிறுவர் சிறுமியர்களுக்குத் தேவையான கருவிகளை அளித்தலோடு, அவர்களுக்குக் கல்வி போதித்தல்.

6) மக்களுக்கு மிகவும் தேவையான குடிநீர் வச தியை ஏற்படுத்தித்தருதல், திருமலை பஞ்சா யத்து, திருப்பதி மாநகராட்சிக்குத் தேவையான நீர் வள ஏற்பாட்டிற்காக தடுப்பணைகளை ஏற்பாடு செய்வது, நீர் சேகரிப்பிற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

7) புத்தகங்களுடன் இணைய தளம் முதலான அதி நவீன தொழில் நுட்ப உதவிகளோடு நம் நாட்டு வரலாறு மற்றும் பண்பாட்டு கலாச்சார பாரம் பரியத்தை அடுத்தத் தலைமுறைக்கு அளிப்பது.

8) சமுதாய ஒழுக்கம், அற நெறிமுறைகளை வளர்த்து இளைஞர்களிடையே ஆன்ம நேய நம்பிக்கையை உண்டு பண்ணுதல்.

9) உதவிகரமான திருமண நிகழ்வுகள் மூலம் மண மக்களை கௌரவ அபிமானத்துடன், உயர் குடும்ப வாழ்க்கையை வாழும்படி செய்தல்.

10) மேற்குறிப்பிட்ட நோக்கங்களுக்கு ஊக்கமளித்திட தனி நபர்களுக்கும், நிறுவனங்களுக்கும் உதவி அளிப்பது.

11) மேலே விவரித்த இலட்சிய சாதனங்களில் இலா பம் ஈட்டுவதற்கு வாய்ப்பு இல்லாமல் பார்ப்பது.

### ஶ்ரீவேங்கடேஸ்வரா சர்வஸ்ரேயஸ்சு அறக்கட்டளை நன்கொடையாளர்களுக்கு :

1) இத்திட்டத்திற்கு குறைந்தபட்ச நன்கொடை ரூ.1,000/-

2) ரூ.1,000/-க்கு குறைவாக நன்கொடையளித்தால் எவ்விதத் தகவலும் இன்றி ஶ்ரீவாரி உண்டிக்கணக்கில் செலுத்தப் படும். பெறப்படும் நன்கொடைகளை தேசிய மயமாக்கப்பட்ட வங்கியில் இருப்பு வைத்து அதிலிருந்து கிடைக்கும் வட்டியை இத்திட்டத்திற்கு உபயோகப்படுத்தப்படும். இத்திட்டத்திற்கான நன்கொடையை வழங்குபவர்கள் – "செயலாட்சித் தலைவர், ஶ்ரீவேங்கடேஸ்வரா சர்வஸ்ரேயஸ்சு அறக்கட்டளை, தி.தி.தேவஸ்தானம், திருப்பதி" எனும் பெயரில் காசோலை / வங்கி கேட்பு வரைவோலையை "பிரதான கணக்காளர், தி.தி.தேவஸ்தானம், திருப்பதி - 517 507" எனும் முகவரிக்கு அனுப்பவும்.




வேங்கடமே விண்ணோர் தொழுவதுவும் மெய்ம்மையால்
வேங்கடமே மெய்வினைநோய் தீர்ப்பதுவும்

# ஸப்தகிரி

சமய மாத இதழ்

## ஜுலை 2021

மலர் 52

இதழ் 02


## உள்ளுறை


பக்கம்

| | |
|---|---|
| **திருமலையில் ஆனிவர ஆஸ்தானம்** - திருமதி டி.கே.லக்ஷ்மி கிருஷ்ணஸ்வாமி, திருப்பதி. | 7 |
| **திங்கள் தோறும் ஒரு திருவேங்கடப் பாசுரம் : கேட்டதும் கொடுக்கும் கிருஷ்ணனே மலையப்பன்** - பேராசிரியர் எஸ். கோகுலாச்சாரி, புவனகிரி. | 10 |
| **தாஸ சாகித்யத்தில் திருவேங்கடவன்** - திரு. வி. வேங்கடரமணா, திருப்பதி. | 13 |
| **ஸ்ரீராமனின் திருக்கல்யாண குணங்கள் : தர்மஜ்ஞன்** - திரு. உ.வே. வேளுக்குடி கிருஷ்ணன் ஸ்வாமி, சென்னை. | 16 |
| **ஆடி மாதத்தில் வேப்ப மர வழிபாடு** - திரு. பரிமளரெங்கன், ஸ்ரீரங்கம். | 19 |
| **நாலாயிரம் பெற்ற நாதமுனிகள்** - திரு. எஸ்.ஸ்ரீதுரை, வேலூர். | 18 |
| **ஜோதிட சாஸ்திரம் : பஞ்சாங்கமும் சூட்சும பொருளும்** -முனைவர் ஆ.முத்து கிருஷ்ண ஆச்சாரி, திருவல்லிக்கேணி. | 21 |
| **புண்ணியம் அருளும் பூரி ஜெகன்நாதர்** - அறந்தாங்கி சங்கர், சென்னை. | 24 |
| **வீடுகள்தோறும் துளசி வளர்ப்போம்** - திரு. ப.சரவணன், கும்பகோணம். | 31 |
| **யோக சாஸ்திரம் : பதஞ்சலியின் ஆரோக்கிய ஆசனங்கள்** - டாக்டர் கி.ஜ. நிகிலாவெங்கட், கோயம்பத்தூர். | 32 |
| **பூர்வாசார்ய ஸ்தோத்ரங்கள் : ஸ்ரீஸூதர்சநாஷ்டகம்** - உ.வே. டாக்டர். அனந்தபத்மநாபாசாரியார் ஸ்வாமி, சென்னை. | 35 |
| **108 திவ்யதேச வைபவம் : திருமோகூர்** - திரு. உருப்பட்டூர் சௌந்தரராஜன், சென்னை. | 38 |
| **அப்பிள்ளை அருளிய ஆழ்வார் ஆசார்யர்கள் வாழித் திருநாமமும் உரையும்** - உ.வே. டாக்டர். மாடபூசி வரதராஜன் ஸ்வாமி, சென்னை. | 41 |
| **ஆயுர்வேதம் : தேங்காய்** - திருமதி உஷா, திருப்பதி. | 43 |
| **ஸ்ரீமத் பகவத்கீதை** - டாக்டர் சி.கோவிந்தசாமி, புத்தூர். | 45 |
| **அலசுவோம் அறிவோம் ஆதிகாவிய நாயகர்களை : வேதவியாசர்** - திரு. சத்யதாரா, சென்னை. | 47 |
| **நீதிக்கதைகள் : மனம் ஒரு தெய்வக்கருவூலம்** - திருமதி கே.சுப்புலெட்சுமி, பரமகுடி.. | 51 |
| **சித்திரக்கதை : வேத வியாசர்** | 52 |


### அட்டைப்பட விளக்கம்

முன்னட்டை : திருமலையப்ப ஸ்வாமி ஆனிவர ஆஸ்தானம், திருமலை.

பின்னட்டை : ஸ்ரீகல்யாணவேங்கடேஸ்வர ஸ்வாமி, ஸ்ரீநிவாசமங்காபுரம்.


சிறப்பு ஆசிரியர் :
Dr. K.S. ஜவஹர் ரெட்டி, ஐ.ஏ.எஸ்.,
செயலாட்சித் தலைவர், தி.தி.தே.
பிரதான ஆசிரியர் :
பேராசிரியர் K. ராஜகோபாலன், பி.எச்டி.,
ஆசிரியர் :
Dr. V.G.சொக்கலிங்கம், எம்.ஏ., பி.எச்டி.,
அச்சிடுபவர் :
திரு. பி.ராமராஜு, எம்.ஏ.,
சிறப்பு அலுவலர்
(பதிப்பகம் மற்றும் அச்சகம்),
தி.தி.தேவஸ்தான அச்சகம், திருப்பதி.
டி.டி.பி.
பிரதான ஆசிரியர் அலுவலகம்,
தி.தி.தே. திருப்பதி.
புகைப்படங்கள் :
திரு. P.N. சேகர்
திரு. B. வெங்கடரமணா



பிரதிகளுக்கு:
THE CHIEF EDITOR,
"Sapthagiri", T.T.D., Tirupati-517 507.
0877- 2264543, 2264359
ஆசிரியர் : 2264360


நீங்கள் ஸப்தகிரி இதழை www.tirumala.orgயில் பார்த்து, படித்து மகிழலாம். ஆலோசனைகள்/ கருத்துக்கள்/புகார்களுக்கு sapthagiri_helpdesk@tirumala.org

| | |
|---|---|
| தனிப்பிரதி | ரூ.5/- |
| வருடச்சந்தா | ரூ.60/- |
| ஆயுள் சந்தா | ரூ.500/- |
| அயல்நாட்டு வருடச்சந்தா | ரூ.850/- |


இதழில் வெளியாகும் கட்டுரைகளுக்கும், கருத்துகளுக்கும் அவ்வவ்வாசிரியப் பெருமக்களே பொறுப்பாவர் -பிரதான ஆசிரியர்



உங்களுடன்...

# குருவே தெய்வம்!

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்". அத்தகு கண்களை நாம் நம் வாழ்க்கையில் பெற வழிகாட்டுபவரே "குரு" வாவார். குருவின் வழிகாட்டுதலினால் தான் மனிதன் முழுமை பெறுகிறான். "குரு கொடுப்பதை ஈசனும் கொடான்" என்பர். ஆதலால் தான் "ஆசார்ய தேவோ பவ" என்று ஆசாரியனை இறைவனுக்கு நிகராகப் போற்றி பெருமை செய்தனர்.

குருவின் அவசியத்தையும் அவரின் சிறப்பினையும் இவ்வுலகுக்கு எடுத்துக்காட்டவே கிருஷ்ணன் – சாந்தீபினியையும், இராமன்–வசிஷ்டரையும் தங்கள் குருவாகக் கொண்டனர். முக்கண்ணனும் பிரணவத்தின் பொருள் அறிய குகனையே தன் குருவாக ஏற்றார். அது மட்டுமின்றி தந்தை ஞானம் மிகுந்து திகழ்ந்தாலும் தம் பிள்ளைகளைத் தகுந்த குருவிடமே கல்வி பயில அனுப்பி வைத்துள்ளனர் என்பதை நமது இதிகாச, புராணங்கள் காட்டுவது குருவின் ஏற்றத்தை நாம் அறியவேயாகும்.

மனிதனிடம் உள்ள அறியாமை என்னும் பேரிருள் விலகிட வேண்டுமெனில் அவனுள் பேரொளி வீசிட வேண்டும். அவ்வொளியினை ஒளிரச் செய்யும் விளக்காக "குரு" அமைகிறார். மனித அறிவுக்கு ஆட்படாத பேரறிவினை அறிந்து கொள்ள நமக்கு வழிகாட்டிட, அறிவுறுத்திட "குரு" எனும் ஒரு வழிகாட்டி தேவை. ஆசையில்லாத, தன்னலமற்ற, தவறு செய்யாத, இரக்கமுள்ள, ஆன்ம அறிவு நிரம்பிய ஒருவரே உண்மையான குருவாவார். குருவின் திறமை புதியதை அறிந்து சொல்வதிலும், அறிந்ததைப் புதியதாக விளங்க வைப்பதிலும்தான் அடங்கியுள்ளது.

இத்தகு குருவின் பெருமை அவர் காட்டும் வழியில் அமையும்போது சீடனின் சிறப்பு அவன் நடக்கும் வழியில் திகழும். கற்றுத் தரும் ஆசிரியர் மீது மாணவனுக்கு இருக்கும் நம்பிக்கையும், நல்லுறவும் நல்ல சமுதாயத்தை உருவாக்கும். ஞானம் பெற ஆசிரியர் மாணவர் இடையே இன, இட வேறுபாடுகள் இன்றி இருத்தல் வேண்டும். அதே போன்று கற்கும் மாணவனுக்குக் கற்கும் ஆர்வமும், தன் ஆசிரியரிடத்தில் தளராத நம்பிக்கையும் இருத்தல் வேண்டும். சரியான குரு அமையாவிட்டால் நல்ல சீடனும் கெடுவான். நல்ல குரு அமைந்தாலும் நல்ல சீடன் அமையாவிட்டால் குருவும் கெடுவார்.

ஆனால், இன்றோ நமது சனாதன தர்மம் போற்றிய குரு–சீடர் பாரம்பரியத்தின் நிலை என்ன? கற்றதைக் காசாக்கத் துடிக்கும் பெரும்பான்மையான ஆசிரியர்களின் தரம் தாழ்ந்திடக் காரணமென்ன? கற்றதை காற்றினில் பறக்க விட்டு, கற்கக் கூடாததை கற்கத் துடிக்கும் பெரும்பான்மையான மாணக்கர்களின் நிலமை பரிதாபம் தானே. வளர்ந்திட்ட தொழில்நுட்ப காரணங்களால் மாணாக்கர்களிடையேயும் ஆசிரியர்களி டையேவும் ஒரு பிணைப்பு அற்ற நிலை காணப்படுகிறது.

இனியும் காலம் தாழ்த்தாமல் விழித்தெழுந்து பெற்றோர்களும் ஆசிரியர்களும் மாணவர்களும் பொறுப்புடனும் நேர்மையுடனும் சொல்லிலும் செயலிலும் சிறந்து விளங்குவார்களேயானால் அதுவே நாளை நம் நாடு ஒரு நல்ல மனித சமுதாயத்தை உருவாக்கிட வழி வகுக்கும்.

குருவை துதித்திடுவோம்! நல் சமுதாயத்தை உருவாக்கிடுவோம்!!

''க்ருதே நாரஸிம்ம மஸ்து திரேதாயாம் ரகு நந்தன:
த்வாபரே வாசுதேவஸ்து கலௌ வேங்கட நாயக:''

சாஸ்திரத்தில் கூறப்பட்டுள்ள வேத வாக்யம். கலியுகத் தெய்வம் சாக்ஷாத் திருவேங்கடவனே என்பது சத்தியமான வார்த்தை. ''வேங்கடவெற்பென விளங்கும் வேத வெற்பே'' என ஸ்வாமி தேசிகன் போற்றிய திருவேங்கடமலை மீது நின்ற கோலத்தில் கொலுவிருக்கும் திருவேங்கடத்து எம்பெருமானுக்கு நடைபெறுகின்ற நித்யோத்ஸவம், வாரோத்ஸவம், மாஸோத்ஸவம், வருடாந்திர உற்சவங்கள் பற்றி அனைவருக்கும் தெரிந்த விஷயமே. இத்துடன் வருடத்தில் நான்கு முறை எம்பெருமானுக்கு ஆஸ்தானங்கள் நடைபெறும். "ஆஸ்தானம்" என்றாலே "கொலுவிருத்தல்" என்று பொருள். சாதாரண மகாராஜாக்களுக்கே "கொலுவு" என்கிற தர்பார் நடைபெறும் போது, அகிலாண்ட கோடி பிரம்மாண்ட நாயகனான ராஜாதிராஜன் நமது திருவேங்கடத்து எம்பெருமானுக்கு "ஆஸ்தானங் கள்" நடைபெறுவது பொருத்தம்தானே.

புது வருடம் தொடக்கத்தில் யுகாதி ஆஸ்தானம். பின்பு தக்ஷிணாயணம் தொடங்கும் முதல் நாளில் "ஆனி வர ஆஸ்தானம்", ஐப்பசியில் தீபாவளி அன்று தீபாவளி ஆஸ்தானம், தனுர் மாத முடிவில் உத்தராயணம் தொடங்கும் மகர சங்கராந்தியன்று ஒரு ஆஸ்தானம் என மொத்தம் நான்கு ஆஸ்தானங்கள் ஸ்ரீவைகானச ஆகமப்படி நடைபெறுவது வழக்கமாக இருந்து வருகிறது. இவற்றுள் இந்த கட்டுரையில் நாம் பார்க்கப் போவது "ஆனி வர ஆஸ்தானம்".

ஆனி என்பது ஜேஷ்ட மாதம். ஜேஷ்டா என்றாலே பெரியது என்று பொருள். இந்த ஜேஷ்ட மாதத்தின் கடைசி நாளில் உத்தராயண புண்ய காலம் முடிவுற்று, "ஆடி" எனப்படும் "ஆஷாட" மாதத்தில் தக்ஷிணாயணம் தொடங்குகிறது. நமது ஸ்ரீநிவாசப் பெருமான் வைகுண்ட லோகத்தை விட்டு பரலோகம் இறங்கி வந்த கதையும் நாம் அறிவோம். பிருகு முனிவரின் செயலால் கோபம் கொண்டு, ஸ்ரீமகா விஷ்ணுவின் வக்ஷஸ்தலத்தில் அகலாது வீற்றிருக்கும் ஸ்ரீமஹாலக்ஷ்மி ஸ்ரீயைப் பிரிந்து வர, அவளைத் தேடிக் கொண்டு வந்த ஸ்ரீஹரி இந்த வராக க்ஷேத்திரத்திற்கு வந்ததும், வகுளாதேவியின் வளர்ப்பு மகன்

# திருமலையில் ஆனிவர ஆஸ்தானம்

திருமதி டி.கே. லக்ஷ்மி கிருஷ்ணஸ்வாமி,
திருப்பதி, 9440120758.





ஸ்ரீநிவாசன் ஆனதும், கானகத்தில் ஆகாசராஜனின் வளர்ப்பு மகளான, ஸ்ரீதேவித் தாயாரின் அம்சமான ஸ்ரீபத்மாவதி தேவியைக் கண்டு காதல் வயப்பட்டு, வகுளாதேவியின் மூலமாக ஆகாச ராஜனிடம் பெண் கேட்டு, பின்பு ஸ்ரீபத்மாவதி ஸ்ரீநிவாசனின் திருக்கல்யாணம் கோலாகலமாக நடைபெற்றதையும் நாம் அறிவோம். இந்த சமயத்தில் பிறந்தது தான் இன்னொரு கதை. வகுளா தேவியோ ஆசிரமத்தில் இருக்கும் ஒரு தவயோகி. ஆகாச ராஜனோ மகாராஜன். இவர்கள் இருவரும் சம்பந்தம் செய்து கொள்வது சாத்தியமா?

இந்த சமயத்தில்தான் நாரத மகரிஷியின் யோசனைப்படி, நமது ஸ்ரீநிவாசர் குபேரனிடம் தனது கல்யாண செலவுக்காக "கடன்" வாங்கினார். இங்கே "கடன்" என்று குறிப்பிடுவதைக் கவனியுங்கள். கடன் என்றாலே கூடவே வருவது வட்டி. ஆகவே குபேரனிடம் நமது பெருமாள் என்ன "பட்டயம்" எழுதி கொடுத்தார் தெரியுமா? இந்த கலியுகம் முடியும் வரை நான் வாங்கிய கடனுக்கு வட்டி செலுத்திக் கொண்டிருப்பேன்" என்று. பெருமாளுக்கு அந்த "வட்டி" எப்படி கிடைக்கிறது. பக்தர்கள் உண்டியலில் செலுத்தும் காணிக்கையினால் தானே. ஆகவே வருடாவருடம் இந்த ஆனி மாத முடிவில் அந்த வருடம் பெருமாளுக்கு கிடைத்த காணிக்கை முழுவதையும் வட்டியாக குபேரனுக்கு சமர்ப்பித்து விட்டு, மீண்டும் "புது கணக்கு" தொடங்குவதாக அர்த்தம். அதுவே ஆனிவர ஆஸ்தானம்.

அன்று பழைய உண்டியலை எடுத்து விட்டு, உண்டியலுக்கு புது வஸ்திரம் கட்டி வைப்பார்கள். மலையப்ப ஸ்வாமியை உபய நாச்சிமார்களோடு, புத்தம் புதிய பட்டு பீதாம்பரத்தோடு, சகல திவ்யாபரணங்களோடு திருமார்பில் "கௌஸ்துபம்" துலங்க, "கண்டா மண்டபத்தில்" எழுந்தருளப் பண்ணுவர். ***"கஸ்தூரி தலம், செல்லாட பலகே, வக்ஷஸ்தலே கௌஸ்துபம், நாஸாக்ரே நவமௌதிகம், கரதலே வேணும், கரே கங்கணம் ஸர்வாங்கே ஹரி சந்தனம் சகலயம், கண்டேச முக்தாலனிம் சோபஸ்திரீ பரிவேஷ்டிதோ விஜயதே கோபால சூடாமணி:"*** என்பதற்கேற்ப சர்வாலங்கார பூஷிதனாக, லீலா மானுஷ விக்ரகமாக பெருமாள் எழுந்தருளிருப்பார். பெரிய ஜீயர் ஸ்வாமிகள், சின்ன ஜீயர் ஸ்வாமிகள், ஆசார்ய புருஷர்கள், அர்ச்சக பெருமக்களோடு, தேவஸ்தான நிர்வாக அதிகாரி இவர்களோடு அத்தனை ஆலய அதிகாரிகளும் அந்த மண்டபத்தில் அமர்ந்திருப்பார்கள்.

கோயில் சாவி முதல் பண்டக சாவி, வஸ்திராபரணங்கள் வைத்திருக்கும் பெட்டக சாவி, மடப்பள்ளி சாவி என அனைத்து சாவிகளுடன் எம்பெருமானின் திருவடிகளில் வைக்கப்பட்டிருக்கும். முடிவில் அந்த சாவிகள் ஜீயர் ஸ்வாமிகளிடமும், அதிகாரிகளிடமும் ஒப்படைக்கப்படும். பெருமாளுக்கும் தேவிகளுக்கும் முதல் ஆரத்தி ஆனதும் அங்கே அமர்ந்திருப்பவர்கள் அனைவரும் தங்களால் இயன்ற காணிக்கையைத் தட்டில் போட, அந்த பணத்தைப் பெருமாள் திருவடியில் வைத்து விட்டு பின்பு புது வஸ்திரம் கட்டப்பட்ட உண்டியலில் சேர்த்து "புது கணக்கு" தொடங்குவார்கள். பின்பு "தளிகை" பெருமாளுக்கு நிவேதனம் ஆனதும் மீண்டும் ஒரு முறை கற்பூர ஆரத்தி நடைபெற்று அனைவரும் "கோவிந்தா கோவிந்தா"



என்று கோஷமிட ஆனிவர ஆஸ்தானம் நிறைவு பெறும். இவை மட்டுமின்றி இன்னொரு வேடிக்கையான விஷயமும் உள்ளது.

இந்த ஆனிவர ஆஸ்தானத்தின் போது வருடா வருடம் பெருமாளின் திருக்கரத்தில் ஒரு தங்க கொலுசு (நமது தமிழில் காப்பு) அணிவிக்கப்படுகிறது. இது எதற்காக என்றால் பெருமாள் குபேரனுக்குத் தருகின்ற இந்த வட்டி முடியும் வரை அவர் இந்த திருமலையை விட்டு நகரக் கூடாதாம். இது உண்மையாக இருந்தாலும், பக்தர்களுக்கு இது ஒரு நற்செய்தி தானே.

நமது திருவேங்கடத்து எம்பெருமான் நம் போன்றவர் களின் குறைகளைத் தீர்க்க இந்த கலியுகம் முடியும் வரை யில் இந்த திருமலையிலேயே எழுந்தருளி நாம் கேட்கும் வரங்களைத் தருவார் என்பது நற்செய்தி தானே.

"வேண்டிய வரங்களைத் தரும் வேங்கடேசன் நின்றி ருக்க ஏது குறை நமக்கு?" இந்த ஆனிவர ஆஸ்தானத்தை



நேரில் தரிசிக்கும் வாய்ப்பு நமக்கு இல்லாமல் போனாலும் இந்த கட்டுரையின் மூலம் அதைத் தெரிந்து கொண்டு எம்பெருமானை நமது உள்ளமாகிய ஆனந்த நிலையத்தில் இருத்தி சேவிப்போம். கோவிந்த நாமஸ்மரணை செய்வோம்.

*"கோவிந்தா நாம ஸ்மரணம் ஸர்வ பாப ஹரணம்"*

## ஸ்ரீரங்கம் ஸ்ரீரங்கநாத ஸ்வாமியிடமிருந்து...

**சமீப காலமாக ஒரு வழக்கம் ஏற்பட்டிருக்கிறது. தமிழகத்தின் தென் கோடியில் ஸ்ரீரங்கம் திவ்ய க்ஷேத்திரத்தில் சயன கோலத்தில் தரிசனம் தருகின்ற ஸ்ரீரங்கநாதப் பெருமாளின் சார்பாக நமது திருமலையானுக்கு இந்த ஆனிவர ஆஸ்தானம் சமயத்தில் பட்டு வஸ்திரம் அனுப்பி வைப்பது வழக்கமாகி உள்ளது. அந்நியர்கள் படையெடுப்பின்போது ஸ்ரீரங்க நாதப் பெருமாளின் உற்சவ மூர்த்தியை சுமார் 40 வருட காலம் நமது திருமலையில் ரங்க நாயகி மண்டபத்தில் எழுந்தருளப் பண்ணியிருந்தார்கள்.**

**திருவேங்கடவனுக்கும், திருவரங்க நாதனுக்கும் ஏற்பட்டிருக்கும் அந்த அபூர்வமான பந்தத்தின் தொடர்பாக இது போல திருவேங்கடவனுக்கு நடைபெறும் விசேஷங்களின் போது திருவரங்கத்திலிருந்தும், திருவரங்க நாதனுக்கு நடைபெறும் விசேஷங்களின் போது திருமலையிலிருந்து திருவேங்கடமுடையான் சார்பில் திருவரங்கத்திற்கும் வஸ்திரம் அனுப்பி வைப்பது ஒரு நல்ல கலாசாரமாகவும், நாங்கள் இருவரும் ஒருவரே என பக்தர்களுக்குத் தெரிவிக்கும் வண்ணமாகவும் அமைந்திருக்கிறது. அவ்வாறு கொண்டு வரும் பட்டு வஸ்திரத்தைச் சகல ஆலய மரியாதைகளுடன் தேவஸ்தானம் சார்பில் ஏற்றுக் கொள்ளப் படுகிறது. பின்பு மூல மூர்த்திக்கும், உற்சவ மூர்த்திக்கும் இந்த ஆனிவர ஆஸ்தானத்தின் போது சமர்ப்பிக்கப்படுகிறது.**








# கேட்டதும் கொடுக்கும் கிருஷ்ணனே மலையப்பன்


பேராசிரியர் எஸ். கோகுலாச்சாரி,
புவனகிரி, 94434 39963


சங்கத்தமிழ் பாடிய ஆண்டாள் தான் யாரை மணக்கப் போகிறேன் என்பதை வெகு நேர்த்தியாகத் தெரிவித்துப் பாடும் பாசுரம் தான் நாச்சியார் திருமொழியில் முதல் பாசுரம்.

*"தையொரு திங்களும் தரைவிளக்கித்*
*தண்மண் டலமிட்டு மாசிமுன்னாள்,*
*ஐயநுண் மணற்கொண்டு தெருவணிந்து*
*அழகினுக் கலங்கரித் தனங்கதேவா,*
*உய்யவு மாங்கொலோ வென்றுசொல்லி*
*உன்னையு மும்பியை யும்தொழுதேன்*
*வெய்யதோர் தழலுமிழ் சக்கரக்கை*
*வேங்கட வற்கென்னை விதிக்கிற்றியே...*

ஆண்டாள் இரண்டு பிரபந்தங்களை அருளிச் செய்திருக்கிறாள். 1. திருப்பாவை 2.நாச்சியார் திருமொழி.

திருப்பாவை மார்கழி மாதத்தில் பாட ஆரம்பித்தாள். *"மார்கழித் திங்கள்"* என்று மாதத்தின் பெயரைச் சொல்லித் தொடங்கினாள். அதைப் போலவே நாச்சியார் திருமொழியை தை மாதத்தில் பாடியதால் *"தையொரு திங்களும்"* என்று மாதத்தின் பெயரிட்டு முதல் பாசுரத்தைத் தொடங்கினாள். இந்த அமைப்பு வேறு ஆழ்வார்கள் பாசுரங்களில் இல்லை என்பது ஆண்டாளின் பாசுரத்திற்குச் சிறப்பு.

அக்காலத்தில் அமாவாசைக்கு அமாவாசை ஒரு மாதகாலம் எனக்கொண்டு சந்திரனுடைய தொடர்பினால் காலத்தை வரையறுத்தனர். இதற்கு சாந்திரமானம் என்று பெயர். சந்திரனுக்கு திங்கள் என்று பெயர் அல்லவா.

**பண்பாட்டு ஆடை**

- ⇨ திருமலையானின் வி.ஜ.பி. தரிசனத்திற்கும் மற்றும் ஆர்ஜித சேவைக்கு வரும் பக்தர்கள் பாரத பண்பாட்டு ஆடைகளையே அணிந்து வர வேண்டும்.
- ⇨ ஆண்கள் : வேட்டி, மேற்துண்டு அல்லது குர்தா பைஜாமா.
- ⇨ பெண்கள் : புடவை, இரவிக்கை/பாவாடை, தாவணி/ பஞ்சாபி டிரஸ்–சுடிதார்.

ஆண்டாளும் திருப்பாவையில் ''மார்கழி திங்கள்'' என்றும், நாச்சியார் திருமொழியில் ''தையொரு திங்களும்'' என்றும் சொல்லித் துவங்கும் நயத்தை நாம் காணலாம்.

இந்த இரண்டு பிரபந்தங்களின் நோக்கமும் எம்பெருமானாகிய கண்ணனை அடைவதுதான். அவளுக்கு கண்ணன் தான் நான்கு வித புருஷார்த்தங்களும். கண்ணன் தான் தர்மம். கண்ணன் தான் அர்த்தம். கண்ணன் தான் காமம். கண்ணன் தான் மோட்சம்.

''கண்ணனுக்கே ஆம் அது காமம்'' என்பதுதான் அவளுடைய திண்ணமான நிலை.

எனவேதான் அவள் ''மானிடவர்க்கென்று பேச்சுப்படில் வாழகில்லேன்'' என்றும், ''அவரைப் பிராயம் தொடங்கி ஆதரித்து எழுந்த என் தடமுலைகள் துவரைப் பிரானுக்கே சங்கற்பித்து தொழுது வைத்தேன்'' என்றும் பாட முடிந்தது.



எம்பெருமானுக்காக உள்ளது தான் அவளுடைய உடலும் உயிரும் என்பதை ''வானிடை வாழும் அவ் வானவர்க்கு மறையவர் வேள்வியில் வகுத்த அவி கானிடைத் திரிவதோர் நரி புகுந்து கடப்பதும் மோப்பதும் சரியோ?'' எனப்பாடுகிறாள். மற்ற காமங்கள் அவளுக்கு இல்லை.

எனவேதான் திருப்பாவையில் ''மற்றை நம் காமங்கள் மாற்று'' என்று அவள் சொன்னாள்.

**திருப்பதியில் ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி ஆலயத்தில் போகி பண்டிக்கைக்கு முந்தைய தினம் முடியும் விதத்தில் ஆண்டாள் நீராட்டோத்ஸவம் வெகு விமரிசையாக வருடந்தோறும் நடைபெறும்.**

**போகி பண்டிகை அன்று போகித்தேர் நடைபெறும்.**

**பொங்கல் மறுநாள் (கனும) அன்று "கோதா பரிணயம்" என்ற பெயரில் ஆண்டாள் திருக்கல்யாணம் மிகச் சிறப்பாக நடைபெறும்**

இதில் அழுத்தமான ஒரு வைணவத் தத்துவமும் இருக்கிறது. இதற்கு பாதித்ரவியம் என்று பெயர். எம்பெருமான் நம்மை ஆட்கொண்டாலும், ஆட்கொள்ளாவிட்டாலும் அவனே நமக்கு துணை. அவனைத் தவிர வேறு யாரும் இல்லை என்கிற நிலைக்கு சமயக் கற்பு என்று பெயர்.

கண்ணன் இடத்திலே காமம் கொள்வது என்பது கூட இரண்




டாம் பட்சம். ஆனால் மற்ற தெய்வங்களிடத்திலே காமம் கொள்வது தகாது என்பதுதான் வைணவத்தின் நிலை.

இந்த உறுதி நிலை கொண்ட ஆண்டாள், மார்கழி நோன்பு முடிந்தும், கண்ணனை அடையும் முடிவு தெரியாததால், தை மாதத்திலே எப்படியாவது எம்பெருமானாகிய வேங்கடவனை அடைந்தே தீர வேண்டும் என்பதற்காக காமன் நோன்பு நோற்கிறாள்.

தரையைத் தூய்மைப்படுத்தி குளிர்ந்த நீர் தெளித்த மண் தரையில் அழகிய நுண்ணிய மணல் கொண்டு கோலம் இட்டு அலங்கரித்து காம தேவனை தொழும் காட்சி தான் மேற்படி பாசுரம்.

இனி இதன் நயங்களை ரசிப்போம்.

1) மார்கழி முழுக்க நோன்பு இருந்தும், கண்ணன் வந்து சேர



வில்லை. இனி வருவானோ என்றும் தெரியவில்லை.

பாழும் பெண் மனது பரந்தாமனை நினைத்து பாடாய்ப்படுத்துகிறது. ஒரு வேளை காமனைத் தொழுதால் வந்து சேருவானோ என்று ஒரு நப்பாசை. காரணம் மன்மதன் அதற்காகவே உள்ள தேவதையல்லவா.

2) *"அனங்க தேவா!"* என்று அழைக்கிறாள். இந்தக் காதல் பிரச்சனையில் நீ உன் உடம்பை இழந்தும் பிரிந்தாரைக் கூட்டுவிக்கும் கடமை தவறாதவன் என்று பொருள்.

3) (நுண் மணல் கொண்டு) பெரிய மணல்களிருந்தால் காலில் உறுத்துமென்று நொய் மணல்களாக ஆராய்ந்து அலங்கரித்தாளாம்.

4) மன்மதனைத் தொழுவது சரி. பாசுரத்தில் **"உன்னையு மும் பியை யும் தொழுதேன்"** என்று வருகிறதே எனில், ஆண்டாள் திருப்பாவையில் கண்ணபிரானைப் பற்றும்போது, பலராமனை முன்னாகப் பற்றினளாதலால், அந்த முறைப்படி இங்கும் மன்மதனை உடன் பிறந்தானோடு கூட வணங்குகிறாள்.



5) சரி. இதற்கு என்ன காரணம்? அதுதான் பாசுரத்தில் ஈற்றடி ***"வெய்ய தோர் தழலுமிழ் சக்கரக்கை வேங்கட வற் கென்னை விதிக்கிற்றியே"***.

6) பரம பதத்தில் அயர்வறுமமரர்கட்குக் காட்சிக் கொடுத்துக் கம்பீரமாக வீற்றிருக்குமவன் ஸம்சாரிகளும் இப்பேற்றைப் பெற்று வாழ வேணும்" என்று இங்கு திருமலைக்கு வந்தான். அடியாருடைய விரோதிகளை ஒழிக்க வேண்டி திருவாழியாழ்வானைக் கையில் கொண்டான். அப்படி சங்கு சக்கரம் ஏந்தி நிற்கும் பெருமான் என்னையும் ஏந்தி நிற்க, என்னை அவனோடு சேர்த்து வைக்க வேண்டுமென்கிறாள்.

7) இங்கு ஒரு ஐயம். மணந்தது யாரை? மலையப்பனையா? அரங்கனையா?

8) அவளுக்கு உடனடி வைபவ அனுபவம் மலையப்ப சுவாமியுடன் தான். மற்ற திவ்ய தேசங்களில் திருவரங்கம் மற்றும் வில்லிபுத்தூரில் பங்குனி உத்திரம் ஆண்டாள் திருமணம் கொண்டாடுவார்கள்.

9) ஆனால், வேங்கடவன் அதற்கு முன்னதாகவே கோதைக்கு அருள் செய்கிறான். இன்றும் திருமலை –திருப்பதியில் தைத் திருநாளான பொங்கலில் தான் ஆண்டாள் திருமணம் (கோதைப்பரிணயம்) கொண்டாடப்படும்.

10) காலையில் மலையப்ப ஸ்வாமி பாரிவேட்டை நடத்தி வர, மாலை கோதையின் மாலையை வாங்கும் கோதா பரிணயம் நடைபெறும். ஆக, ஆண்டாள் எண்ணம் உடனடியாக நிறைவேற்றியது வேங்கட வாணன் தான்.

11) கேட்டதும் கொடுக்கும் கிருஷ்ணன் அல்லவா வேங்கடவாணன்.

*சென்ற இதழின் தொடர்ச்சி...*

*முன்ன அவபசரமனி பேயாளகே। அன்னபூர்ணெய நோடிதே।*
*சென்னாகி மன்ட பதோளு ஸ்ரீநிவாசன்ன மாருதிய நோடிதெ॥*

மேலும் உள் சென்று திருவேங்கடமுடையானின் மடை பள்ளி அறையைக் கண்டேன். அதன் பின் அன்னபூரணியான வகுளா தேவியையும், விமான மண்டபத்தில் உள்ள ஸ்ரீநிவாச மூர்த்தியையும் கண்டேன்.

*தொட்டல தீர்தவ கொண்டு ப்ரசாதவ! இட்டு மாருவுது நோடிதெ*
*இஷ்ட பக்தரு சம்முகதலலி! முட்டி பாடுவுது நோடிதெ!!*

ஸ்வாமியின் தீர்த்தத்தை பெற்று கொண்டு, அங்கே பிரசாதம் வழங்கும் இடங்களையும் கண்டேன். ஸ்வாமியின் பக்தர்கள் நம்பிக்கையுடன், பக்தியுடன் துதிப்பதையும் கண்டேன்.

*த்வார பாலகரிகெ சாஷ்டாங்கதலி நமஸ்காரவனு மாடிதெ।*
*போரனெ கடாஞ்ஜநத பல்குணி பங்கார பாகிலவ நோடிதெ॥*

துவார பாலகர்களான (ஜெய விஜய) இருவருக்கும் சாஷ்டாங்க நமஸ்காரம் செய்து, அதன்பின் ஸ்வாமியின் தங்க வாயிலைக் கண்டேன்.

*இந்து ரவி சத கோடி தேஜத - இந்திரேசவ பாதார*
*விந்த யுக்மவ புளிகோத்சஹா - திந்த சந்தரு சன வாமாடிதெ॥*

சதகோடி சந்திர சூரியனின் ஒளியால் பிரகாசிக்கக் கூடிய இந்திரேசனான திருவேங்கடமுடையானின் திருவடிகளைக் கண்டு மெய்மறந்து உத்சாகத்துடன் தரிசன பாக்கியத்தைப் பெற்றேன்.

*"இட்டித்த அந்திகெ*
*உட்டபீதாம்பர -*
*கட்டித்த..."*

திருவடிகளில் உள்ள சலங்கைகளையும், உடுத்தியிருந்த பீதாம்பரத்தையும், அதனைச் சுற்றி அணிந்திருந்த ஒட்டியாணத்தையும், கையில் கட்டியிருந்த கங்கணம் மற்றும் கஸ்தூரி திலகத்தையும் கண்டேன்.

*மாசத புவ்வு பூசித கந்த -*
*பூஷண நாநா பரிபரிவித!*
*ஏசு - பகெ யல்லிட்டி ஸ்ரீநி -*
*வாசவ ஸ்ருங்கார நோடிதெ!!*

மணம் மிக்க, அழகாக மலர்ந்துள்ள மலர்களாலும், சந்தனத்தாலும், ஜொலிக்கும் ஆபரணங்களாலும் அலங்கரிக்கப் பட்டுள்ள ஸ்ரீநிவாசனின் அழகைக் கண்டேன்.



# தாஸ சாகித்யத்தில் திருவேங்கடவன்

*ஜயஜய ஜகதீச ஜகன்னிவாசா |*
*ஜய ஜயலகுமி பரிதோஷ|*
*ஜய ஜய விஜய சர்வேச ஜயஜய |*
*சர்வேச ஜயவெந்து ஸ்தோத்ரவ மாடிதெ!*
*கேசக்கிதத்யோதள பரமான்ன தோசி பிசி பிசி மனோஹர!*
*லேசாகி சதுர்வித பிரசாதவன்னு ஈசு அவசர நோடிதெ!!*

தத்யோதன பரமான்னங்கள், தோசைகள் என வித விதமான பிரசாதங்களைக் கண்டேன்.

*கற்பூர தாருதி ஒப்பதிந்தலி தந்து!*
*தப்பிதெ பௌகோது நோடிதெ!*
*ரெப்பய ஹாகதெ மனதணியதி!*
*ம்மப்பன விக்ரஹ நோடிதெ!!*

கற்பூர ஆரத்தி செய்யும் போது எவ்வாறு கண் இமைக்காமல் பார்க்கிறோமோ அவ்வாறு அந்த திருமலை வாசனின் விக்ரகத்தைக் கண்டேன்.

*ஹிம ருது ப்ரதம மாசத தசமி! ஹிமகரவார தினதல்லி!*
*க்ரம திருதலி போகி பிம்ப மாருதிய! விமல சாரித்ரயவ நோடிதே!!*

இவ்வாறு "ஹேமந்தருது" (முன்பனி) காலத்தில் மார்கழி மாதம் தசமியன்று திங்கட்கிழமையில் ஸ்ரீநிவாசனின் திவ்ய மங்கள விக்ரகத்தைக் கண்டேன். *"சத அபராதவ மாடலு களெது கதிய நீவ இந்திரா-பதி விஜய விட்டல புரந்தரன - சங்கதி யல்லி சதத சாகித!!"*

நிறைய தவறுகளை செய்தவன் ஆனாலும், கடவுளை பக்தியுடன் வழிபட்டால் அவர்களுடைய பாவங்களை மன்னித்து அருள்புரியும் விஜய விட்டல னான புரந்தர தாசரின் அனுக்கிரகத்தால் திருவேங்கடமுடையானைக் கண்டேன்.

விஜயதாசர் திருவேங்கடவன் பெயர் கேட்டாலே மெய் மறந்து விடுவார். அந்த ஸ்வாமியின் நாமங் களைக் கேட்டாலோ, நினைத்தாலோ உடனே பக்தி பரவசத்துடன் கீர்த்தனைகளைப் பாடி துதித்து மகிழ்வார்.

பக்தி பிரியனான திருவேங்கடமுடையான் பக்தர்களுடன் விளையாடி மகிழ்வார் என்று ஆன்மீக நூல்கள் (வரலாற்று நூல்கள்) சொல்கிறது. புரந்தர தாசருக்கு நீரைத் தருதல், அவர் திருமலையில் நிகழ்த்திய அன்னதான சமாராதனையில் அப்பன்னா உருவத்தில் வந்து நெய் பரிமாறுதல் போன்றவை நமக்குத் தெரிந்தனவே. அவ்வண்ணம் விஜயதாசரு டன் விளையாடிய விளையாட்டினைக் காண்போம்.

ஸ்ரீ விஜயதாசர் திருமலைக்கு வந்தபோது ஸ்ரீநிவாசனின் தரிசனம் கிடைக்க வில்லை. அப்பொழுது பிரம்மோத்சவம் நிகழ்ந்து கொண்டி ருந்ததால் தரிசன பாக்கியம் கிட்டவில்லை. மனம் கலங்கி பரிதவித்தார். கன்று தன் தாய்ப்பசுவை காணாத போது எவ்வாறு பரிதவிக்குமோ அவ்வாறு மிக்க வருத்தத்துடன் அழைத்தார்.

*கூகிதரு "த்வனி கேளதே! சிர! பாகிதரு தயபாரதெ*
*போகி சயன புவனாதி பதே நின்ன! ஆகமன கதறிதிகெ ஆகுவது பிரபோ"!*

தலை தாழ்த்தி, வருத்தத்துடன் மனம் கலங்கி அழைத்தேனே. ஸ்வாமி! என் குரல் உம் காதில் விழவில்லையா? என் மேல் கருணை காட்ட மாட் டாயா? ஹே ஸ்வாமி! பாம்புப் படுக்கையில் பள்ளி கொண்ட சேஷ சயனா, புவனத்தை ஆள்பவனே! எப்பொழுது எனக்கு உம் தரிசனம் கிட்டும் என்று மனம் கலங்கினார்.

*பக்தரி கொலிதவ நீனுகரெ என்ன! அத்த நோடுவது உசிதவே!*
*சித்த வதான பராகு மஹாபிரபு! எத்தணரதவனு எத்தி பாவீடு!!*

பக்தர்களுக்கு அருள்பாலிக்கும் தெய்வமான நீ என்னைக் காணாமல் உம் பார்வையை வெவ்வேறு திசையில் செலுத்துகிறாயே? இது நியாயமா? மகாப் பிரபு! என்று எமக்கு உம் தரிசனம் கொடுத்து அருள் புரிவாய்?

ஸ்ரீநிவாசனின் தரிசனத்திற்காக வந்த விஜய தாசருக்கு எவ்வளவு நேரம் காத்திருந்தும் தரிசனம் கிடைக்கவில்லை. அப்பொழுது திருவேங்கடவனை நினைத்து மனம் வெறுத்து வருந்தி பாடுகின்றார்.

தெலுங்கு மூலம்:
திரு. எஸ். நாகராஜாசார்யுலு
தமிழாக்கம்:
திரு. வி. வேங்கடரமணா

தொடரும்...

# வைணவக் குறுக்கெழுத்துப் புதிர் - 59

**இடமிருந்து வலம் :**

1. பீமன் புதுப்பித்த தலம்....(7)
6. மும்மூர்த்திகளை சோதிக்க பிருகு மகரிஷி முதலில் சென்றது.....(7).
7. குருக்ஷேத்திரப் போரில் அர்ச்சுனனுக்கு கிருஷ்ணன் வழங்கிய அறிவுரைகளே ....(6)
9. ...(6)வாமனருக்கு தானம் செய்த மகாபலி பரம்பரையைச் சேர்ந்தவர்.
15. ...(4) மாத ஏகாதசி விரதம் வைகுண்ட பதவிக்கு வழி வகுக்கும்.
17. தசாவதாரத்தில் 8வது அவதாரம்..(9)
21. ஐந்து கோலங்களில் பெருமாள் காட்சியளிக்கும் தலம்....(8)
22. கண்ணனின் சகோதரி......(4)

**வலமிருந்து இடம் :**

2. விஷ்ணுவுக்கு உகந்த தினம்....(4)
5. பானகம் பருகும் நரசிம்மர் ஆலயம் அமைந்துள்ள ஊர் .....(6)
8. ஸ்ரீராமாநுஜர் வரலாற்றில் முக்கிய நிகழ்வுகளை விவரிக்கும் நூலை இயற்றியவர்.....(6)
11. ஸ்ரீலக்ஷ்மி வராகப் பெருமாள் வீற்றிருக்கும் திவ்ய தேசம்....(6)
12. வைகுண்டத்தில் ஓடும் நதி.....(3)
13. இலங்கை சென்ற அனுமனை விருந்தினராக வந்து தங்க அழைத்த மலை.....(5)
18. ஏழு சிரஞ்சீவிகளுள் ஒருவர்.....(4)
19. சூரியனும், சந்திரனும் சேர்ந்து ஒரே ராசியில் தங்கும் நாள்.....(4)
20. இந்திரனின் தாய் வயிற்றில் பிறந்ததால் வாமனருக்கு ........(6) என பெயரிட்டனர்.
24. திருத்தொலைவில்லி மங்கலம் திவ்ய தேசம் .....(3) விமானம்.

**மேலிருந்து கீழ் :**

3. ஆண்டாள் பாடிய பாசுரம்....(5)
4. அஷ்ட லட்சுமிகளில் ஒருவர்....(6)

**கீழிருந்து மேல் :**

10. சாளக்கிராம கல்லினால் ஆன சுயம்பு மூர்த்தியாக பெருமாள் அருள்புரியும் எட்டுத் தலங்களில் ஒன்று....(5)
14. கம்சனால் ஏவப்பட்ட அரக்கி....(3)
16. அருளாளப் பெருமாள் எம்பெருமானார் என்பவர்........(7)
23. பெண் குழந்தை வேண்டுவோர்.....(4) அன்று கருட தரிசனம் காண வேண்டும்.

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | | | | | | 2 | 3 |
| ■ | ■ | 4 | ■ | ■ | | | | | | 5 | |
| ■ | 6 | | | | | | | ■ | ■ | ■ | |
| ■ | ■ | | | | 7 | | | | | | |
| | ■ | | | | | | | | | 8 | |
| | ■ | | | 24 | 9 | | | | | | ■ |
| | | | 10 | | | | | | 11 | | ■ |
| | | | ■ | | | | | 12 | ■ | | ■ |
| | | | ■ | | | ■ | | | | | 13 |
| | 23 | 14 | ■ | | 15 | | | | ■ | | ■ |
| 16 | 17 | | | 18 | 19 | | | | | 20 | ■ |
| 21 | | | | | | | | 22 | | | |

தொகுப்பு :
**திரு. எஸ். ராஜகுமார், தஞ்சாவூர், 81249 30259**

புதிருக்கு விடை அறிய 42ம் பக்கம் பார்க்கவும்...

திருமலை திருப்பதி தேவஸ்தானம்
**தலைக்கவசம்! உயிர் கவசம்!!**

திருப்பதி – திருமலை மலைவழிச்சாலையில் இருசக்கர வாகனங்களில் பயணம் செய்யும் பக்தர்கள் மலையை ஏறும் போதும், இறங்கும் போதும் தலைக்கவசம் (ஹெல்மெட்) அணிதல் அவசியமாகும்.
வாகனம் மலைவழிச் சாலையில் ஏறும் பொழுது 28 நிமிடமும் மலைவழிச் சாலையில் இறங்கும் பொழுது 40 நிமிடத்திற்கு முன்னதாக சென்றால் மீண்டும் மலைவழிச் சாலையில் செல்ல அனுமதிக்கப்படமாட்டாது.
– கண்காணிப்பு மற்றும் பாதுகாப்புத் துறை

**காகம் தலை தப்பியது**

சித்ரகூடத்தில் மந்தாகினி நதிக்கரையில் தனிமையில் சீதையின் மடியில் தலை வைத்து இராமன் உறங்கிக் கொண்டிருந்தான். அப்போது ஜயந்தன் எனும் அசுர இயல்வினன் காக்கை உருவம் கொண்டு லோகமாதாவான சீதையின் திருமார்பில் தன் அலகால் கொத்தினான். இரத்தம் உதிர்ந்தது. சீதை விரட்டினாலும் திரும்ப வந்து தொந்தரவு செய்தது காகம். பொறுக்கமாட்டாமல் சீதை இராமனை எழுப்பினாள். கண் விழித்த இராமன் நடந்ததை அறிந்து கோபமுற்று ஒரு தர்பைப் புல்லில் மந்திரத்தை உச்சரித்து காக்கை மேல் ஏவினான். காக்கை, அந்த அஸ்த்ரத்திலிருந்து தன்னைக் காத்துக் கொள்ள தேவர்களின் இல்லங்களில் அடைக்கலம் கேட்டது. மூவுலகும் திரிந்தோடி தோல்வியுற்று மீண்டும் இராமன் திருவடிகளிலே வந்து விழுந்தது. அப்போது காக்கையின் கால் இராமனின் திருவடிகளில் பட்டது. சீதை கருணையோடு காகத்தின் தலையைத் திருப்பி இராமன் திருவடிகளில் படும்படி செய்ய, கொல்லத்தக்க காக்கையை, சீதை அருகில் இருந்தபடியால் இராமன் கருணையோடு மன்னித்து விட்டான்.



தவற்றினை உணர்ந்தவர்களை மன்னிப்பதே சிறந்த தர்மம்.

**தொண்டர்களைக் காப்பது தலைவனுக்கு தர்மம்!**

வானரப் படையோடு ஸ்ரீராமன் கடற்கரையில் இறங்கியிருந்தான். கிஷ்கிந்தையிலிருந்து விரைந்து வந்த களைப்பால் குரங்குகள் உறங்கிவிட்டன. அப்போது வில்லும் கையுமாக இரவு முழுவதும் விழித்திருந்து அவர்களைக் காத்தான் ஸ்ரீராமபிரான். விழித்திருந்த விபீஷணனும் ஜாம்பவானும் ஆச்சரியப்பட்டு “ஸ்ரீராமச்சந்திரா! தொண்டர்களான நாங்களன்றோ விழித்திருந்து உன்னைக் காக்க வேண்டும். தலைவனான தாங்கள் ஓய்வெடுக்கலாமே!” என்றனர். “இக்ஷ்வாகு குலத்தில் பிறந்த மன்னர்களுக்கு ப்ரஜைகளை ரக்ஷிப்பதே தலையாய தர்மம்” என்று இராமன் உறுதியோடு கூறினான்.

தொண்டர்கள் தயவில் தலைவர்கள் இருப்பது லௌகிகம். தலைவன் தயவில் தொண்டர்கள் பயமின்றி இருப்பது வைதிகம்.

**கன்னிப் போர் கூடுமா!**

ஸ்ரீராமனையும் லக்ஷ்மணனையும், தான் செய்ய விருந்த யாகத்தைக் காப்பதற்காக விஸ்வா மித்ரர் அழைத்துப்போனார். வழியில் பெருத்த உருவத்தோடு தாடகை எனும் அரக்கி எதிர்த்தாள்.

# ஸ்ரீராமனின் திருக்கல்யாண குணங்கள்

3

## தர்மஜ்ஞன்

பொதுவான தர்மங்கள் மற்றும் சிறப்பான தர்மங்களை அறிந்தவனே தர்மஜ்ஞன். ஸ்ரீராமனைப் பொருத்தவரை கருணை, தயை ஆகிய சிறப்பான தர்மங்களே முக்கியம்.

திரு. உ.வே. வேளுக்குடி கிருஷ்ணன் ஸ்வாமி,
சென்னை.

கொடியவளான அவளைக் கொல்லும்படி விச்வாமித்ரர் ஆணையிட்டார். வில்லில் நாணேற்றிய இராமன் ஒரு கணம் தயங்கினான். "வஸிஷ்டரிடம் கல்வி கற்று முடித்தபின் முதன்முதலாக போர் புரியப் போகிறேன்; அதில் ஒரு பெண்ணைக் கொல்வது தகுமா?" என்று பொதுவான தர்மத்தின் வழி யோசித்தான். ஆனால் விச்வாமித்ரர் "உலகத்தையும் தர்மத்தையும் நாசம் செய்யும் இவளைக் கொல்வதில் குற்றமே இல்லை" என்று தெளிவு படுத்தினார். குருவின் சொல்படி கேட்பதே சிறப்பான தர்மம் என்று முடிவு செய்த இராமன் உடனே அவளை அழித்தான்.



மேலெழுந்தவாரியாகப் பார்த்தால் அதர்மம் போல் தோன்றும் சில நிகழ்வுகளை, ஆய்வுக் கொண்டு நோக்கினால் அதுவே தர்மமாக இருப்பதைக் காணலாம்.

**தவற்றினை உணர்ந்தவர்களை மன்னிப்பதே சிறந்த தர்மம். தொண்டர்கள் தயவில் தலைவர்கள் இருப்பது லௌகிகம். தலைவன் தயவில் தொண்டர்கள் பயமின்றி இருப்பது வைதிகம்.**
**அதர்மம் போல் தோன்றும் சில நிகழ்வுகளை, ஆய்வுக் கொண்டு நோக்கினால் அதுவே தர்மமாக இருப்பதைக் காணலாம்.**
**நம் பேச்சாலோ பரிந்துரையாலோ ஒருவருக்கு நன்மை ஏற்படுமானால் அதைத் தயங்காது செய்வதே சிறந்த தர்மம்.**

## இராமனையும் விஞ்சிய சீதை

தன் திருவடிகளைத் தஞ்சமாகப் பற்றிய காக்கை, குரங்குகள், விபீஷணன் ஆகியோரைக் காத்தான் இராமன். ஆனால் சீதையோ பத்து மாதங்கள் தன்னைத் துன்புறுத்திய அரக்கிகளை, அவர்கள் தன்னைத் தஞ்சமாகப் பற்றா விட்டாலும் காப்பாற்றினாள். இராவணன் மாண்ட பின் இராமனின் வெற்றிச் செய்தியை ஹனுமான் அசோகவனம் சென்று சீதையிடம் கூறினார். அவள் ஆனந்த கண்ணீரோடு "உமக்கு என்ன கைம்மாறு செய்வேன்" என்று நெகிழ்ந்து கை கூப்பினாள். உடனே ஆஞ்ஜநேயர் "தேவி! எனக்கு ஏதேனும் கைம்மாறு செய்ய விருப்பமானால் ஒரு அனுமதி கொடுத்தால் போதும்.



தங்களைப் பத்து மாதங்கள் துன்புறுத்திய ஏழு நூறு அரக்கிகளையும் என் கைகளால் நசுக்கிக் கொல்ல அனுமதிக்க வேண்டும்" என்றார். சீதை அவரது வேண்டுகோளை நிராகரித்து "அனுமனே! உலகில் யார் தான் குற்றம் புரியவில்லை? எய்தவன் இருக்க அம்பை நொந்து என்ன பயன்? என்று கூறி அரக்கிகளைக் காத்தாள். சீதையின் இச்செயலால் இராமனை விட சீதை உயர்ந்தாள்.

நம் பேச்சாலோ பரிந்துரையாலோ ஒருவருக்கு நன்மை ஏற்படுமானால் அதைத் தயங்காது செய்வதே சிறந்த தர்மம்.

*வளரும்...*



# ஸம்ஸ்க்ருதம் அறிவோம்

## नवमः पाठः பாடம்-9

1. देवः = கடவுள்
2. किमर्थम् = எதற்கு
3. करोति = செய்து கொண்டிருக்கிறான்
4. जनकः = தகப்பன்
5. एव = என்ன
6. करोषि = செய்து கொண்டிருக்கிறாய்
7. अग्रज = அண்ணன்
8. किल = விளையாட்டு (ஆட்டம்)
9. करोमि = செய்து கொண்டிருக்கிறேன்

### வினாக்கள்

1. देवः कुत्र अस्ति?
2. सः अत्र अस्ति।
3. अग्रजः किं करोति?
4. किं वा?
5. त्वं किं करोषि?
6. अहम् अत्रासम्।
7. यूयं किमर्थं तत्र स्थ?
8. ते एव तत्र आसन् किल।
9. यूयं तत्र किमर्थं नास्त?
10. अहं तत्रैव अस्मि।

1. கடவுள் ஓரிடத்தில் இருக்கிறார்.
2. அவர் பல இடங்களில் இருக்கிறார்.
3. நீங்கள் இப்போது எங்கு இருக்கிறீர்?
4. எவன் என்ன செய்து கொண்டிருக்கிறான்?
5. அவர்கள் அனைவரும் அங்கு இருக்க வேண்டும்.
6. நீயே என்ன செய்து கொண்டிருக்கிறாய்?
7. நாங்கள் இங்கு இருக்க வேண்டும்.
8. யார் இங்கு இல்லை?
9. நீ இங்கு இல்லையாம்.
10. நான் இங்கேயே இருக்கிறேன்.

### விடைகள்

1. கடவுள் எங்கு இருக்கிறார்?
2. அவர் (அவன்) இங்கிருக்கிறார்(ன்).
3. அண்ணன் என்ன செய்து கொண்டிருக்கிறான்?
4. என்ன?
5. நீ என்ன செய்து கொண்டிருக்கிறாய்?
6. நான் இங்கு இருந்தேன்.
7. நீங்கள் எதற்கு அங்கு இருந்தீர்கள்.
8. அவர்களே அங்கு இருந்தார்கள் அல்லவா!.
9. நீங்கள் அங்கு எதற்கு இருக்கவில்லை?
10. நான் அங்கேயே இருந்தேன்.

1. देवः एकत्र अस्ति।
2. सः अनेकत्र अस्ति।
3. युयं अधुना कुत्र स्त?
4. कः किं वा करोति?
5. ते सर्वे तत्र स्युः।
6. त्वमेव करोषि किम्?
7. वयमेव अत्र स्याम।
8. केवा अत्र न सन्ति।
9. त्वम् अत्र नासि किल।
10. अहमत्रैव अस्मि।

தெலுங்கு மூலம் : மகாமகோபாத்யாய காசி கிருஷ்ணாசாரி, தொகுப்பு : மகாமகோபாத்யாய சமுத்ரால லக்ஷ்மணய்யா
தமிழாக்கம் : டாக்டர் கே.கே.ஏ. ரங்கராஜன்

# ஆடி மாதத்தில் வேப்ப மர வழிபாடு





திரு. பரிமளரெங்கன், ஸ்ரீரங்கம், 97156 64450.

ஆடி மாதத்தில் செவ்வாய் மற்றும் வெள்ளிக் கிழமைகளில் வேப்ப மரத்திற்கு பூஜை செய்வதை இன்றும் கிராமப் புறங்களில் காணலாம். நகர் புறத்தில் தங்கள் வீட்டிற்கு அருகில் உள்ள வேப்ப மரத்திற்கு விவரம் தெரிந்த சுமங்கலிகள் பூஜை செய்கிறார்கள்.

மரங்கள் அனைத்தும் தெய்வாம்சம் பொருந்தியவைகள். அதில் வேப்ப மரமும் ஒன்று. இந்த வேப்ப மரம் தோன்றியது குறித்து புராணம் கூறும் தகவல்.

ஒரு சமயம் கைலாயத்தில் சிவபெருமானைப் பிரிந்து உமையவள் ஓரிடத்தில் தியானம் செய்து கொண்டிருந்தாள். இதனை அறிந்த தேவலோகப் பெண்ணொருத்தி சிவபெருமான் தனித்திருப்பதால், அவரை அடைவதற்கு திட்டமிட்டு அவர் தியானத்தில் அமர்ந்திருக்கும் இடம் நோக்கி புறப்பட்டாள். உமையவள் இல்லாததால் உமையவள் போல் உருமாறி, கைலாய நாதனை நெருங்கிக் கொண்டிருந்தாள், அந்த தேவலோக மங்கை.

திடீர் என்று ஏதோ ஒரு விரும்பத்தகாத வாசம் வருவதை உணர்ந்த சிவபெருமான், அந்த வாசம் வரும் திசை நோக்கிப் பார்த்தார். உமையவள் போல் தெரிந்த அந்த உருவினைக் கண்டார். அந்தப் பெண்ணிடமிருந்து வரும் கசப்புச் சுவையின் தன்மையையும் உணர்ந்தார். தன்னை உணர்ந்த ஈசன், “பெண்ணே, அங்கேயே நில். நீ யார் என்பதை அறிந்தேன். உனக்கு ஏன் இந்த விபரீத ஆசை. இதனால் நீ உமையவள் இடத்தைப் பிடித்து விடலாம் என்று எண்ணுகிறாயா?”

“சுவாமி, மன்னிக்க வேண்டும். தங்கள் அருகில் உமையவள் இருப்பது போல் சில வினாடிகள் தங்களிடம் அமர்ந்து மகிழ்ச்சியாக இருக்க விரும்பினேன்” என்றாள். பெண்மைக்குரிய வெட்கத்தை விட்டு “பெண்கள் எப்பொழுதும் கற்புடன் வாழ வேண்டும்” என்பது விதி. அது தடம் மாறினால் பல விபரீத விளைவுகளைச் சந்திக்க வேண்டி வரும். நீ மனதில் நினைத்த ஆசை தவறானது. அதன்



## ஆதிசங்கரர் அருளிய பஜகோவிந்தம் -26

*காமம் க்ரோதம் லோபம் மோஹம்*
*த்யக்த்வாத்மானம் பாவய கோஹம் ।*
*ஆத்ம ஜ்ஞான விஹீநா மூடா: தே*
*பஸ்யந்தே நரக நிகூடா: ॥*

**காமம், கோபம், பணத்தாசை, மயக்கம் (கவர்ச்சி) போன்ற குணங்களை விட்டு விட்டு "நான் யார்?" என்று தன்னைப் பற்றியே நினைத்துப்பார். இது போன்ற ஆத்ம ஞானம் (சுய பரிசோதனை) இல்லாதவர்கள்தான், நரகத்தில் மூழ்கி துன்பத்தையே அனுபவிக்கிறார்கள்.**

**- திரு. சீதாராமன், சென்னை.**

விளைவால் உன் உடலிருந்து கசப்புத் தன்மை வெளிப்பட்டு இந்த இடமே பாதிப்புக்கு உள்ளாகியிருக்கிறது.

"நான் தவறாக நடந்திருந்தால் மன்னித்து அருள வேண்டும்", உமையவள் போல் என்னையும் எல்லோரும் வழிபட வேண்டும்" என்ற விருப்பத்தால் தான் தங்களிடம் நெருங்கினேன்" என்றாள் கண்கள் கலங்க.

நீ செய்த தவறுக்கு கசப்புத் தன்மை கொண்ட உன் எண்ணத்திற்கு நீ பூலோகத்தில் மரமாக அவதரிப்பாய். அப்பொழுது உன்னை "வேப்ப மரம்" என்று அழைப்பார்கள். வேம்பு என்றும் அழைக்கப்படுவாய். நீ என்னை நோக்கி ஆடி... ஆடி... வந்ததால் இந்த மாதத்தினை "ஆடி மாதம்" என்று பூலோகத்தில் அழைப்பார்கள்.

"என்னை மரமாக சபித்து விட்டீர்களே, சுவாமி! இதிலிருந்து நான் விமோசனம் பெற வழி இல்லையா? என்று கண்ணீர் விட்டாள்.

"பெண்ணே கலங்காதே. நீ சிறப்புப் பெயர் பெற்றிருக்கிறாய். "ஆடி" என்ற பெயரும் உனக்கு சூட்டியுள்ளேன். அத்துடன் உன்னை பூலோகத்தில் ஆடி மாதத்தில் செவ்வாய் மற்றும் வெள்ளிக் கிழமைகளில் மக்கள் பூஜிப்பார்கள். உமையவள் இருப்பிடத்தில் நீ அமர விரும்பியதால், நீ உமையவள் போல் வழிபடப் படுவாய். நீ வேப்ப மரமாகி போவதால், நோய் எதிர்ப்பு சக்தியை மக்களுக்கு அளிப்பாய். உன்னை வழிபடும் பக்தர்கள் ஆரோக்கியமாகவும் தோஷங்கள் நீங்கியும் சுகமுடன் வாழ்வார்கள். இனி, நீ தேவ லோகத்தில் வசிக்க இடமில்லை. நீ பூலோகம் செல்" என்றார் ஈசன். இறைவனின் சாபமே அவளுக்கு "வரம்" ஆனது. அடுத்த வினாடி ஆடி மாதம் என்று சிறப்புப் பெயர் பெற்ற அந்தப் பெண், பூலோகத்தில் வேப்ப மரமாகத் தோன்றினாள்.

அந்த மரத்தின் இலைகளும், பூக்களும் அதிலிருந்து வெளிப்படும் காய்கள் கனியாக (வேப்பம் பழம்) மாறும்போது, அதன் வித்துக்களிலிருந்து கிடைக்கும் எண்ணெயும் பல விதங்களில் மக்களுக்கு இன்று பயன்படுகிறது. வேப்ப மரத்தின் காற்று சுற்றுச் சுழலையும் தூய்மைப்படுத்துகிறது.

தேவ லோகத்து பெண்ணின் விபரீத ஆசையே "ஆடி மாதம்" என்று பெயர் பெற்றதுடன் வேப்ப மரமாகித் திகழ்ந்து இன்று பூலோகத்தில் வாழும் மக்களுக்கு நல்வாழ்வு அளிக்கிறது. உமையவள் போல் அவள் ஆசைப்பட்டதால், அவள் ஆசை நிறைவேறியதுடன், வேப்ப மரத்தை அம்மனாகப் பாவித்து மக்கள் வழிபடுகிறார்கள். மேலும், வேப்ப மரத்தின் சக்தியை உணர்ந்த மக்கள் அந்த மரத்திற்கு அடிப்பகுதியில் அபிஷேகம் செய்து, மஞ்சள் பூசி குங்குமம் இட்டு, அதற்குரிய மஞ்சள் ஆடையை மரத்திற்கு அணிவித்து பூஜித்து பலன் பெறுகிறார்கள்.

எனவே, ஆடி மாதத்தில் செவ்வாய் மற்றும் வெள்ளிக் கிழமைகளில் வேப்ப மரத்தை வழிபட வாழ்வு நலம் பெறும். ஆரோக்கியம் கிட்டும். ஆடி மாதத்தில் மட்டுமல்ல, எல்லா நாட்களிலும் அதனை வழிபட்டால் என்றும் சுகமே.

# பஞ்சாங்கமும் சூட்சும பொருளும்



முனைவர் ஆ.முத்து கிருஷ்ண ஆச்சாரி,
சென்னை,
94443 92595.

ஜோதிட வல்லுனர் அனைவரும் பயன் படுத்தும் முக்கிய சூத்திர கணிதமே பஞ்சாங்கம் எனும் தமிழ் வருடாந்திர பதிப்பு ஆகும். பல்வேறு பஞ்சாங்க கணித மேதைகளால் கணிக்கப்பட்டு, கிரக பலாபலன்களை விவரித்து எழுதுவதே தமிழ் வருட பஞ்சாங்கப் புத்தகம் ஆகும். இது இரு வடிவில் அதாவது வாக்கிய/பாம்பு மற்றும் திருக்கணித முறைப்படி எழுதப்பட்டு வரப்படுகிறது. இன்றைய நாட்களில் பஞ்சாங்கம் முகூர்த்த பஞ்சாங்கம் வடிவிலும் வருகிறது. இருப்பினும் கால கணிதம் வேறுபடாது. இனி பஞ்சாங்கம் புத்தக – தனித் தன்மையினை வரும் பத்தியில் காண்போம்.

முதலில் பஞ்சாங்கம் என்பதை பிரித்து அறிகையில் ஐந்து அங்கங்கள் உள்ளடங்கிய ஒரு வான்வெளி மண்டல வருட கால கணித கணக்கீடு ஆகும். இதனை ஒவ்வொன்றாக கவனிக்க:

1) வாரம், 2) நாள், 3) திதி, 4) கரணம் 5)யோகம். இவை ஐந்தும் வான்வெளியில் சூரியன் மற்றும் சந்திரன் தூர இடைவெளியின் காலவேறுபாடுகளின் அடிப்படையில் கணக்கீடு செய்யப்படுகிறது. இனி இதன் விளக்கங்கள் பின்வருமாறு:

**1) வாரம் :**

வாரம் என்பது சூரியன் உதிக்கும் ஓரை திசையினை வார நாட்கள் என்பர். உதாரணமாக சூரியன் சந்திர ஓரையில் உதிக்கும் நாள் சோம வாரம்/திங்கட்கிழமை என்றழைப்பர். இது போன்று செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி மற்றும் ஞாயிறு ஓரையில் உதிக்கும் சூரியனை அன்றைய ஓரை நாட்களாக வரையறுக்கப்படுகிறது.

**2) நாள் :**

சூரியோதய ஓரை நாட்களான ஞாயிறு முதல் சனி வரை ஏழு நாட்கள் ஒரு வாரம் என்றழைப்பர்.

**3) திதி :**

வான்வெளிப்பாதையில் சூரியனுக்கும், சந்திரனுக்கும் இடைப்பட்ட தூரம் திதி என்ற வாக்யம் மூலம் கணக்கிடப்படுகிறது. சந்திரன் 360° பாகை சூரியனின் கதிரொளி சந்திரன் மேல் பட சுமார் 28 நாட்கள் அல்லது இரு பக்ஷம் எடுத்து கொள்கிறது. ஒரு பக்ஷத்திற்கு தேய்பிறை (ஒளிமறைவு பகுதி) அல்லது கிருஷ்ண பக்ஷம் என்றும், வளர்பிறை (ஒளி தோன்றும் பகுதி) அல்லது பூர்வ பக்ஷம் என்றும் இதில் ஒவ்வொரு பக்ஷத்திற்கும் 180° பாகை பிடிக்கும்.

இரு பக்ஷத்திற்கும் சேர்ந்து 360° பாகை கடந்தால் அதனை ஒரு மாதம் அல்லது திங்கள் என்பர். ஒவ்வொரு பக்ஷத்திற்கும் 14 திதிகளும் 15வது திதியினை அமாவாசை அல்லது பௌர்ணமி திங்கள் என்று கணக்கிட்டு வைத்துள்ளனர். முதல் திதி

பிரதமை முதல் அமாவாசை அல்லது பௌர்ணமி திதி என்று பதினைந்து திதிகளும் பெயரிடப் பட்டுள்ளது.

**இதன் சிறப்பியல்புகள் பின்வருவன:**

1. விரதங்கள், இறை அபிஷேகங்கள் மற்றும் முக்கிய நிகழ்வுகள் திதிகளின் அடிப்படையில் வேதவிற்பன்னர்கள் நடத்துவர்.
2. வியாபாரம் மற்றும் தொழிற்கான புதிய கணக் கினை எழுதுவதற்கு உகந்த திதியாக தசமி திதி கருதப்படுகிறது. காரணம் தசம ஸ்தானம் என்பது காலச்சக்கரத்தில் பத்தாம் இடமான கர்ம ஸ்தான மானதால் இத்திதியில் எழுத சுபலாபம் பெறும்.
3. சுப காரியங்களான திருமணம், சடங்குகள், புதுமனை புகு விழா போன்ற சுப நிகழ்வுகளுக்கு அஷ்டமி மற்றும் நவமி திதியினை விலக்கி விடுவது நன்று. ஏனெனில் இந்நாட்களில் சந்திரன் சூரியனுக்கு நேர்குத்து பாகையில் பயணிப்பதால் அதாவது 90° பாகையில் கடப்பதால் அன்றைய நாட்களில் கடல் மட்டங்கள் ஏற்ற இறக்கமாகவும், மேலும் அலை யெழுச்சியுடன் இருப்பதாலும் சந்திரன் மதி எனும் அறிவுக்கு தொடர்புடையதால் அன்றைய நாட்க ளில் சுப முடிவுக்கு குழப்பங்கள் ஏற்படும் என்ப தால் தவிர்க்கப்படுகிறது. ஏனென்றால் புவியீர்ப்பு சக்தியில் சற்று வேறுபட்டு காணப்படும். இந்நாட்களில் பல்வேறு இயற்கை சீற்றங்களான பூகம்பம், புயல் மற்றும் சுனாமி போன்ற பேரிடர்கள் ஏற்பட்டதற்கான சான்றுகள் உள்ளன. இவ்விரு திதிகளில் விஷ்ணு அவதாரமாக இருக்கும் இராமர் மற்றும் கிருஷ்ணர் பிறந்திருப்பது குறிப்பிடத்தக்கது. சித்திரை மாதம் வரும் நவமி திதி இராம நவமி எனவும், ஆவணி மாதம் வரும் அஷ்டமி திதி கிருஷ்ணாஷ்டமி எனவும், நாம் பண்டிகை கொண்டாடுகிறோம். இவ்விரு மாதங்களில் சூரியன் உச்சம் மற்றும் ஆட்சியுடன் இருப்பது குறிப்பிடத்தக்கது.
4. ஒரு மனிதன் தன் இறப்பு சம்பவிக்கும் நாளின் திதியினை வைத்து தான் வருடாந்திர நினைவு சடங்குகளை அவர்களது சந்ததியினர்கள் வழி வழியாக இல்லங்களிலோ அல்லது நீர் நிலைகளிலோ நடத்துவர்.


**4. கரணம் :**

இதன் காலக்கணக்கு திதியின் கால அளவில் சரி பாதியாகும். உதாரணமாக ஒரு திதியின் காள அளவு 30° பாகை எனில் 15° பாகை ஒரு கரணம் ஆகும். கர ணங்கள் மொத்தம் பதினொன் றாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவையாவன 1) பவ; 2)பாலவ; 3) கௌலவ; 4) தைதுளை; 5)கரசை; 6) வணிஜை; 7) பத்தரை; 8) சகுனி; 9) சதுஸ்பாதம்; 10) நாகவம்; 11) கிமஸ்துக்னம் என வரிசைப்படுத்த பட்டுள்ளது.

**5) யோகம் :**

வான்வெளிப் பாதையில் ஓர் குறிப்பிட்ட இராசி





மண்டலத்தில் உலவும் சூரிய, சந்திர சேர்க்கை யோகம் என்றழைக்கப்படுகிறது.

இங்கு, பொது மக்கள் இன்றைய நாள் நல்ல நாளா? இல்லையா? என்பதை ஜோதிடரிடம் வினவுவது உண்டு. அப்படி என்றால் ஒரு ஜாதகருக்கு தனது இராசிக் கட்டத்தில் ஒன்பதாம் வீட்டதிபதி யாரோ அவரே அந்த ஜாதகருக்கு நல்ல நாளாய் அமையும். உதாரணமாக, ஒருவருக்கு ஒன்பதாம் இடம் தனுசு இராசியானால் தனுசு ராசியின் அதிபதி வியாழன் ஆகும் எனில், வாரத்தில் வியாழக்கிழமை நல்ல நாளாய் அமையும். அந்நாட்கள் நற்காரியங்கள் செய்தால் தலைமுறை செழிக்கும்.

நாம் பயன்படுத்தும் தினசரி நாட்காட்டியில் யோகம் என்பதனை சித்த, மரண, அமிர்த யோகம் எனக் குறிப்பிட்டு இருப்பார்கள். இதன் விளக்கம் என்னவெனில் சில கிழமைகளில் சில நட்சத்திரங்கள் சேர்வதால் அது ஒவ்வாத நாட்களாகி விடும்.

உதாரணமாக,

ஞாயிறு : அவிட்டம், கார்த்திகை.
திங்கள் : அஸ்வினி, உத்திரட்டாதி.
செவ்வாய் : பூரம், ரோகிணி, விசாகம், திருவாதிரை.
புதன் : ஹஸ்தம்.
வியாழன் : கார்த்திகை, திருவாதிரை, உத்திரம், சதயம், அனுஷம்.
வெள்ளி : ரோகிணி, ஆயில்யம், மகம், திருவோணம்.
சனி : ஆயில்யம், பூராடம், சித்திரை, உத்திரம்.

மேற்கண்ட கிழமைகளில் இந்த நட்சத்திர சேர்க்கை இணைந்து வந்தால் அன்றைய நாள் மரணயோகம் எனக் குறிப்பிடப்படுகிறது. மரண யோகம் என்பது அன்றைய நட்சத்திர பலன் இழப்பு ஆகும். மேலும் மரண யோகத்தன்று திதி நன்றாக இருந்தாலும், சுப காரியங்களுக்கு உகந்ததல்ல. அன்றைய நாட்களில் ஒதுக்கப்பட வேண்டிய வேலைகள் செய்தால் பீடைகள் விலகும். இதற்கு மாறாக, அமிர்த யோகத்தன்று சுபகாரியங்கள் தொடங்க சாதகமான விளைவுகளை நாம் காணலாம்.

**அமிர்த யோக நட்சத்திர இணைவு**

ஞாயிறு : உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி, திருவோணம், பூசம், மூலம்.
திங்கள் : சுவாதி, புனர்பூசம், ரோகிணி, மிருகசீரிடம்.
செவ்வாய் : உத்திரம், மூலம்.
புதன் : உத்திராடம், பூரம், பூரட்டாதி, உத்திரம்.
வியாழன் : சுவாதி, மூலம்.
வெள்ளி : அஸ்தம், பூசம், அஸ்வினி, மூலம்.
சனி : மகம், சதயம், கார்த்திகை, சுவாதி.

இதைத் தவிர சுபாசுபயோகம், சித்தயோகம் ஆகிய நாட்கள் சுபகாரியங்களுக்கு உகந்தது. சில பஞ்சாங்கங்களில் மரண யோகத்தை, நாசயோகம், உற்பதயோகம், பிரபலா நிஷ்ட யோகம், திரிபுர புஷ்கர யோகம் எனக் குறிப்பிட்டு இருப்பார்கள். இவை அனைத்தும் அசுப நாட்கள் ஆகும்.

மேலும், எந்த தமிழ் மாதத்தில் இரு அமாவாசை அல்லது பௌர்ணமி வந்தாலும், எந்த மாதத்தில் அமாவாசை அல்லது பௌர்ணமி இல்லையோ அம்மாதத்தினை மல மாதம் / விஷ மாதம் எனக் குறிப்பிடப்படுகிறது. இந்த மாதங்களில் சுபகாரியங்கள் விலக்குவது நல்லது. சித்திரை, வைகாசி மாதத்திற்கு தோஷம் கிடையாது.

இதைத் தவிர நட்சத்திர யோகங்கள் 27 உள்ளன. அதனை வரும் தொடரில் காண்போம்.

# புண்ணியம் அருளும் பூரி ஜெகன்நாதர்

அருள்மிகு ஜெகந்நாதர் கோயில் இந்தியாவின் கிழக்குக் கடற்கரையில் ஒடிசா மாநிலத்தில் பூரி என்னும் கடற்கரை நகரத்தில் அமைந்துள்ள வைணவத் திருக்கோயிலாகும். இக்கோயில் ஜெகந்நாதர், பலபத்திரர், சுபத்திரை ஆகியோருக்கு அர்ப்பணிக்கப்பட்ட கோயிலாகும். முகம் மற்றும் கைகளை மட்டுமே காணும் வகையில் அமைந்த இக்கோயிலின் மூலவர்களான ஜெகந்நாதர், பலபத்திரர் மற்றும் சுபத்ரையின் திருமேனிகள் மரத்தால் ஆனவை. 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை இம் மூலத்திருமேனிகள் உரிய சடங்குகளுடன் புதிய மரத்தால் செதுக்கி அமைக்கப்படும்.

இக்கோயில் 12–ம் நூற்றாண்டில் கீழைக் கங்கர் குல அரசன் ஆனந்தவர்மன் சோடங்கனால் கட்டப்பட்டது. இக்கோயிலின் மூலவர்களான ஜெகந்நாதர், பலபத்திரர், சுபத்திரை தனித் தனியாக மூன்று தேர்களில் ஏறி திருவலம் வரும் நிகழ்வான ரத யாத்திரைத் திருவிழா ஆண்டிற்கு ஒருமுறை ஆடி பௌர்ணமி அன்று துவங்கி ஒன்பது நாட்கள் கொண்டாடப்படுகிறது. இத்திருவிழாவில் நாடெங்கிலிருந்தும் இலட்சத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் வந்து கலந்துக் கொள்கின்றனர். தேரோட்ட திருவிழாவை முன்னிட்டு 16 சக்கரங்கள் கொண்ட சிவப்பு, மஞ்சள் நிறத் தேரில் ஜெகந்நாதர், 14 சக்கரங்கள் கொண்ட சிவப்பு, பச்சை நிறத்தேரில் பலராமர், 12 சக்கரங்கள் கொண்ட சிவப்பு, கருப்பு தேரில் சுபத்ரா எழுந்தருள்வர்.

பாரம்பரிய வழக்கப்படி தேரோடும் ரத்னவீதியை தங்கத் துடைப்பத்தால் பூரி மன்னர் பெருக்கி சுத்தம் செய்வார். முதலில் பலபத்திரர் தேரும், அதன்பின்னர் சுபத்ரை தேரும் புறப்பட்ட பின்னர் இறுதியாக ஜெகந்நாதர் எழுந்தருளிய தேர் புறப்படும்.

குண்டிச்சா கோயிலை நோக்கிச் செல்லும் ரதயாத்திரையின் ஒரு பகுதியாக வழியிலுள்ள மவுசிமா கோயிலில் ஓய்வு எடுப்பார். பின்னர் தேர்கள் அங்கிருந்து புறப்பட்டு பூரி ஜெகந்நாதர் கோயிலை வந்தடையும். தேரோட்டத்திற்காக ஆண்டு தோறும் 45 அடி உயரமும் 35 அடி அகலமும் கொண்ட புதிய தேர் மரத்தால் செய்யப்படுகிறது.

## தல வரலாறு

ஜரா என்ற வேடன் எய்த அம்பு பட்டு கிருஷ்ணர் மரணத்தைத் தழுவினார். அவரது உடல் ஒரு பெரிய மரக்கட்டைப் போல ஆனது. பூரியை ஆட்சி செய்து வந்த இந்திரதுய்மன் என்னும் அரசன் கனவில் தோன்றிய பெருமாள் கடலில் மிதந்து வரும் ஒரு பொருளைக் கொண்டு சிலையை செதுக்குமாறு கூறினார். அதன்படி கடலில் ஒரு பெரிய மரக்கட்டை மிதந்து வந்தது. அதை காவலர்கள் எடுத்துச் சென்று அரசனிடம் ஒப்படைத்தனர். அரசன் அந்த பெரிய மரக்கட்டைக்கு பூஜைகள் நடத்தி தச்சர்களை அழைத்து பெருமாள் சிலை செய்யும்படி கூறினார். தச்சர்களின் தலைவர் மரத்தில் உளியை வைத்தவுடன் உளி உடைந்துவிட்டது. அப்பொழுது பெருமாள் அரசன் முன்பு ஒரு முதிய தச்சன் வேடத்தில் தோன்றி பேசினார். தான் 21 நாட்களில் இந்த வேலையை முடித்துத் தருவதாகவும், அதுவரை தான் வேலை



– அறந்தாங்கி சங்கர்
சென்னை, 9444160161.

செய்யும் இந்த அறையை யாரும் திறக்கக் கூடாது என்றும் கூறினார். அதை அரசன் ஒப்புக் கொண்டார். 15 நாட்கள் வரை அந்த அறையின் உள்ளிருந்து உளிச்சத்தம் கேட்டது. வேலை தீவிரமாக நடக்கிறது என்றெண்ணி அரசன் அதன்பின் அந்த அறைப்பக்கம் போகவேயில்லை. அதையடுத்து மூன்று நாட்கள் எந்த சப்தமும் வரவில்லை. இதனால் தச்சர் தூங்கிவிட்டாரோ என்றெண்ணி அரசன் அவசரப் பட்டு கதவைத் திறந்தான். இதனால் தச்சர் கோபம டைந்தார். மூன்று நாட்கள் சத்தம் வர வில்லை என்றதும் எனது கதவை திறந்து விட்டாய். எனவே இந்த கோயில் நீ ஸ்தாபிக்கும் சிலைகள் அரைகுறை யாகவே இருக்கும். அப்படி இருந்தாலும் பரவா யில்லை அப்படியே பிரதிஷ்டை செய்துவிடு. இந்த கோயிலுக்கு வருபவர்கள் சிலையைப் பார்த்து விட்டு பொறுமையை கடைபிடிக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் செல்வார்கள் என்று அருள் பாலித் தார். அந்த அறையில் முழுமை பெறாத நிலையில் ஜெகந்நாதர், பலபத்திரர், சுபத்திரை சிலைகள் இருந்தன. அந்த சிலைகளையே அரசர் பிரதிஷ்டை செய்தார்.

இந்திரதுய்மன் காலத்திற்குப்பிறகு அவர் கட்டிய பழைய கோயில் பழுதடைந்துவிட்டது. அதன் பிறகு அந்த இடத்தில் பல கோயில்கள் கட்டப்பட்டன. அவற்றையும் கடல் மூழ்கடித்து விட்டது. தற்போதைய கோயில் அனந்தவர்மனால் கி.பி. 1135ல் துவக்கப்பட்டு 1200ஆம் ஆண்டில் அவரது பேரன் அனங்காபி மாதேவ் என்ற அரசனால் கட்டி முடிக்கப்பட்டது. இவ்வாலயத்தின் மேற்கில் எட்டு உலோகக் கலவையால் செய்யப்பட்ட நீலச்சக்கரம் உள்ளது. ஆலய கொடிமரம் ஏழைகளுக்கு அருள் பவன் என்ற பொருளில் பதீதபவன் பாவனா என்ற ழைக்கப்படுகிறது. இவை இரண்டையும் வணங்கி னாலே ஜெகந்நாதரின் பூரண அருளைப் பெறலாம் என்கிறார்கள். இராமாயணத்தில் இராமபிரானும், மகாபாரதத்தில் பாண்டவர்களும் இங்கே வந்து வேண்டிக் கொண்டதாகப் புராணங்கள் கூறுகின்றது.

பூரியில் கருமாபாய் என்ற பக்தை வசித்தாள். அவளுக்கு சோதனைகள் பல வந்த போதும் தினசரி அதிகாலையில் ஆலயத்திற்கு வந்து ஜெகந்நாதப் பெருமாளை தரிசித்தப் பின்பே மற்ற வேலைகளை மேற்கொள்வாள். பாண்டுரங்க பக்தர் ஒருவர் கருமா பாயின் வீட்டிற்கு வந்தார். அவருக்கு அன்னமிடும் பாக்கியம் தனக்கு கிடைத்ததை எண்ணி அவள் மகிழ்ந்தாள். உங்களுக்கு நேர்ந்த துன்பங்கள் என்ன என்பதைக் கூறுங்கள், என்றார் வந்தவர்.

கருமாபாய், எனக்கு திருமணம் ஆகி குழந்தை பிறந்தது. ஆனால், தாய்மை அடைந்த சில மாதங் களிலேயே எனது கணவர் இறந்துவிட்டார். இருந் தாலும் வைராக்கியத்துடன் அவனை வளர்த்து ஆளாக்கினேன். அவனுக்கு திருமணமும் செய்து வைத்தேன். என் மகனும் ஒரு குழந்தைக்கு தந்தையா னான். அப்பொழுதுதான் விதி என் வாழ்க்கையில் விளையாடியது. பேரன் பிறந்த சில மாதங்களிலேயே மகனும் மருமகளும் விபத்தில் சிக்கி இறந்து விட்டனர். தலையில் இடி விழுந்தாற்போல அதிர்ந்து போனேன். மிகுந்த சிரமத்திற்கிடையே பேரனை வளர்த்து வந்தேன். அவனது பாழாய் போன விதி என்னை விடுவதாக இல்லை. அவனும் நோய்வாய்ப்பட்டு இறைவனிடமே சென்றுவிட்டான். செய்வதறியாமல் நடை பிணமாகி விட்டேன். இதுவே என் மன வேதனைக்குக் காரணம் என்று கூறி அழுதாள். இந்த



துக்க சம்பவங்களைக் கேட்ட பாண்டுரங்க பக்தர் அமைதியானார். இம் மண்ணில் பிறந்த உயிர் ஒருநாள் இறந்துதான் ஆக வேண்டும் என்பது விதி. இதிலிருந்து யாரும் தப்பிக்க முடியாது. கடவுள் கொடுத்த இப்பிறவியை பயனுள்ளதாக்க வேண்டியது நமது கடமை. அதனால் பாண்டுரங்கனைத் தவிர வேறெந்த




சிந்தனைக்கும் இடம் தராதீர்கள். உங்கள் கைகள் அவனுக்கே பணி செய்யட்டும். உங்கள் கால்கள் அவன் திருக்கோயிலை நாடட்டும். மனம் அந்த ரங்கனின் திருவடி தாமரைகளையே சிந்தித்திருக்கட்டும் என்று ஆறுதல் வார்த்தைகள் கூறியதுடன், தான் கொண்டு வந்திருந்த பால கிருஷ்ணனின் விக்ரகத்தை அவளிடம் கொடுத்து, அம்மா இந்த உலகில் நம்மோடு வரும் உறவுகளெல்லாம் தற்காலிகமானவை. இந்த நீலமேக சியாமள வண்ணனே நமது நிரந்தர உறவினன். அவனே தாயாக, தந்தையாக, பிள்ளையாக, நண்பனாக இருந்து எப்போதும் நம்மை காத்து கரை சேர்ப்பவன் என்றவர், ஒரு மந்திரத்தையும் உபதேசம் செய்து அதை தினமும் ஓதி மனச் சாந்தி பெறும்படி கூறி புறப்பட்டார்.

அன்றுமுதல் கருமாபாயும் சின்ன கண்ணன் நினைப்பிலேயே மூழ்கினாள். பாசம் மிக்க தாயாக அந்த கண்ணன் சிலையை மடியில் வைத்துக் கொள்வாள். காலையில் துயில் எழுந்ததும் கண்ணனை நீராட்டுவாள். பட்டுச் சட்டை அணிவித்து அலங்காரம் செய்வாள். கன்னத்தில் அன்போடு முத்தமிடுவாள். பால் அன்னம் வைத்து பாடி ஆராதனை செய்வாள். இதுவே அவளது அன்றாட பணியாக மாறியது. ஒருநாள் பொழுது புலர்ந்தது தெரியாமல் ஏதோ அசதியில் அயர்ந்து தூங்கி விட்டாள். கண் விழித்ததும் கண்ணன் ஞாபகம் வர குளிக்காமலேயே அடுப்படிக்குச் சென்று பால் காய்ச்ச தயாரானாள். அப்பொழுது தெரிந்த பெரியவர் ஒருவர் தற்செயலாக வந்து குளிக்காமல் அவள் பால் காய்ச்சுவதைப் பார்த்து பக்திக்கு குளியல் மிக முக்கியம் என்பது தெரியாதா, காலையில் குளித்த பின் தானே பகவானுக்கு பிரசாதம் செய்ய வேண்டும். இதுகூட தெரியாமல் பாவம் செய்கிறாயே என்றார்.

ஐயா எங்கள் வீட்டு குட்டிக் கண்ணன் எழும் நேரமாகி விட்டது. பாவம் குழந்தைக்கு பசிக்குமே என்று குளிக்காமலேயே அடுப்படிக்கு வந்து விட்டேன் என்றாள். கருமா பாயின் பக்தியை உலகிற்கு உணர்த்த ஜெகந்நாதர் திருவுளம் கொண்டார். அன்றிரவு கோயில் அர்ச்சகர் கனவில் தோன்றி இவ்வூரில் கருமாபாய் என்னும் பரமபக்தை ஒருத்தி இருக்கிறாள். அவளிடம் சென்று ஆச்சாரத்தைவிட பக்திதான் முக்கியம். குளிக்காமல் செய்தாலும் அவள் படைக்கும் பால் பிரசாதத்தை விருப்பத்தோடு நான் ஏற்று மகிழ்கிறேன் என்று தெரிவிக்கும் படி ஆணையிட்டார்.

பொழுது புலர்ந்ததும் அர்ச்சகர் கருமாபாயின் வீட்டிற்குப் புறப்பட்டார். தான் கனவில் கண்ட காட்சியை அவளிடம் தெரிவித்தார். இதைக் கேட்ட கருமாபாயின் கண்கள் குளமானது. பூஜை அறைக்குச் சென்று கண்ணனின் விக்ரகத்தை மார்போடு அணைத்துக் கொண்டாள். அப்பொழுது ஜெகந்நாதப் பெருமாள் சங்கு சக்கரத்தோடு காட்சி அளித்தார்.

பூரி ஜெகந்நாதர் கோயில் வளாகத்தில் தென்மேற்கு மூலையில் ரோகிணிகுண்ட் அருகே பிமலாதேவி சன்னதி உள்ளது. இது நான்கு முக்கியமான சக்தி பீடங்களில் ஒன்றாகும். இங்கு செல்வோர் தவறாமல் இந்த தேவியையும் வழிபடுகிறார்கள். 60 கிலோமீட்டர் தொலைவிலுள்ள இந்த நகரத்திற்குச் செல்ல முக்கிய நகரங்களிலிருந்து பேருந்து மற்றும் ரயில் வசதிகள் உள்ளன. ஒரு முறை பூரி திருத்தலம் சென்று ஜெகந்நாத பெருமாளை தரிசனம் செய்து வாழ்வில் புண்ணியம் பெற்று நலமும் வளமும் பெறுவோம்.



திருமலை நாராயணகிரியில் உள்ள
திருமலையப்பன் திருப்பாதங்கள்







திருச்சானூர் ஆலயத்தில் 2021, ஜூன் 29 முதல் ஜூலை 01 வரை
ஸ்ரீசுந்தரராஜ ஸ்வாமிக்கு நடைபெற்ற அவதாரோத்ஸவத் திருக்காட்சிகள்



திருப்பதி ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமிக்கு 2021, மே 26 அன்று நடைபெற்ற
பத்ர புஷ்ப யாகத் திருக்காட்சி

## திருமலையப்ப ஸ்வாமி பவித்ரோத்ஸவம்
## 2021, ஆகஸ்ட் 17 முதல் 20 வரை






ஜம்முவில் 2021, ஜூன் 13 அன்று வைபவமாக நடைபெற்ற திருவேங்கடமுடையான் ஆலயம் எழுப்புவதற்கான பூமிபூஜை. இந்நிகழ்ச்சியில் ஜம்மு மேதகு துணைநிலை ஆளுநர் திரு மனோஜ் சின்ஹா, அமைச்சர்கள் திரு. கிஷன் ரெட்டி மற்றும் திரு.ஜிதேந்திர சிங், தி.தி.தே. பொறுப்பாண்மைக்குழுத்தலைவர், செயலாட்சித்தலைவர் மற்றும் பிற அதிகாரிகள் பங்கு கொண்டனர்.




24 ஜூன் 2021 அன்று தி.தி.தே. செயலாட்சித்தலைவர் டாக்டர் கே.எஸ்.ஜவஹர் ரெட்டி ஐ.ஏ.எஸ். அவர்கள் ஸ்பெசிபைட் அதாரிடி தலைவராகவும், தி.தி.தே. கூடுதல் செயலாட்சித்தலைவர் திரு. ஏ.வி. தர்மா ரெட்டி ஐ.டி.இ.எஸ்.அவர்கள் ஸ்பெசிபைட் அதாரிடி கன்வீனராகவும் பொறுப்பேற்றனர்.செயலாட்சித்தலைவருக்கு தீர்த்தப்பிரசாதங்களை வழங்கும் கூடுதல் செயலாட்சித்தலைவர் மற்றும் திருப்பதி இணைச்செயலாட்சித்தலைவர் திருமதி சதா பார்கவி ஐ.ஏ.எஸ். அவர்கள்.




தி.தி.தே. செயலாட்சித்தலைவர் டாக்டர் கே.எஸ்.ஜவஹர் ரெட்டி ஐ.ஏ.எஸ். அவர்கள் மற்றும் பிற உயர் அதிகாரிகளுடன் 30 ஜூன் 2021 அன்று எஸ்.வி. கோ சம்ரக்ஷணை கூடத்தை தணிக்கை செய்தபோது. பின்னர் திருப்பதி தேசிய சமஸ்கிருத பல்கலைக்கழகத்தில் ஓலைச் சுவடிகளை பார்வையிட்ட போது



# வீடுகள்தோறும் துளசி வளர்ப்போம்

திரு. ப. சரவணன்,
கும்பகோணம், 9443171383.

அருளும் திருமாலின் தசாவதாரங்களில் ஒன்றான ஸ்ரீகிருஷ்ணாவதாரத்தில் துளசியின் மகிமையை இறைவனுக்கு நிகராகக் கூறியிருப்பார்கள். இதற்கு காரணம், துளசி விஷ்ணு பகவானின் அருளைப் பெற்ற உயர்வான பொருள் என்பதால் மட்டுமல்ல, உலக உயிர்கள் வாழ வகை செய்யும் மூச்சுக்காற்றில் கலந்து (ஆக்சிஜன்) உயிராற்றலாக விளங்குவதுதான்.

உயிர்வாழத்தேவையான சுவாசக் காற்றின் மேன்மையை உணராத இன்றைய தலைமுறையினர், நவநாகரீக உலகில் பொருளாதாரத்தை மட்டுமே யாசித்து வருங்கால சந்ததியினருக்குக் கிடைக்க வேண்டிய இயற்கை வாழ்வாதாரத்தை சிதைத்து வருகிறார்கள் என்றால் அது மிகை ஆகாது. நீர்நிலைகளான ஆறுகள், வாய்க்கால்கள் யாவும் இன்று கழிவுகளை கடத்திச் செல்லும் வழித்தடங்களாகவும், குளங்கள், ஏரிகள் யாவும் பிளாஸ்டிக் குப்பைகளை கொட்டும் குப்பைத் தொட்டிகளாகவும் மாற்றப்பட்டு விட்டன.

தொடரும் இந்த மாசுபாடுகளால் மண்ணும் (பூமியின் மகத்துவமும்), விண்ணும் (காற்று மற்றும் ஓசோன் மண்டலங்களும்) பெரும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளன. இதனை பாதுகாக்க ஒவ்வொருவரும் வீட்டில் துளசிச் செடியை வளர்க்க வேண்டும். ஓசோன் மண்டலத்தைப் பாதுகாக்க மரங்கள் வளர்க்க வேண்டும் என்ற கருத்து உருவாக்கப்பட்டு உலகெங்கிலும் இது நடைமுறைபடுத்தப்பட்டு வருகிறது. ஆனால் இது போதாது. ஸ்ரீராமபிரான் சீதையை மீட்க இலங்கை செல்ல சேது சமுத்திரத்தில் பாதை அமைத்தபோது அணில் பிள்ளை தன்னாலான உதவியை செய்தது போல, வீடுகள் தோறும் துளசிச் செடியை வளர்த்தால் இயற்கையை பாதுகாக்கலாம்.

அரசமரம், மூங்கில் மரம், துளசிச்செடி மூன்றும் காற்று மண்டலத்திலுள்ள கரியமில வாயுவை உள்வாங்கிக் கொண்டு 24 மணி நேரமும் ஆக்சிஜனை வெளியிடுபவை. இவைகளில் அரசமரம், மூங்கில் மரம் ஆகியவற்றை வளர்க்க பெரிய அளவிலான இடம் தேவை, அவைகளிலிருந்து ஆக்சிஜனைப் பெற அதிக ஆண்டுகள் காத்திருக்க வேண்டும். ஆனால், துளசிச் செடியை வளர்க்க சிறிய தொட்டியும், ஜன்னல் பகுதியுமே போதுமானது. விதை போட்டு முளைக்க வைத்தாலும் சரி, கன்றாக நட்டு வளர்த்தாலும் சரி 2 முதல் 4 மாதங்களில் வளர்ந்து முழுமையான ஆக்சிஜனைத் தரும். துளசிச் செடியை வீடுகளில் வளர்த்தால் சுத்தமாக இருக்க வேண்டும் என்ற பிற்போக்குத் தனமான பேச்சுக்களை புறந்தள்ளிவிட்டு வீடுகள் தோறும் துளசிச் செடியை வளர்க்க முன் வரவேண்டும்.

ஆக்சிஜனை உற்பத்தி செய்வது ஒவ்வொருவரின் கடமையாகும். அதில் நமது பங்களிப்பாக ஒவ்வொருவர் வீட்டிலும் 16 துளசிச் செடிகளை வளர்த்தால் வருங்காலம் வளமாகும் என்பது திண்ணம். வீடுகளில் துளசி வளர்த்து வணங்கி வந்தால் துர்மரணம் ஏற்படாது என்பது ஐதீகம். மேலும் இன்று உலகை மிரட்டும் கொரோனா போல அன்று பலவித தொற்று நோய்கள் மிக வேகமாக பரவி வந்ததை தடுக்க அன்றைய காலகட்டத்தில் நமது முன்னோர்கள் பயன்படுத்திய யுக்திதான் துளசிச் செடி வளர்ப்பாகும். மறந்து போன இந்த விஷயத்தை மதியில் நிறுத்தி துளசி செடியை வளர்ப்போம், சுத்தமான காற்றை சுவாசிப்போம்.

*சென்ற இதழின் தொடர்ச்சி...*

**1. உத்கர்ஷனாசனம்**

உத்கர்ஷன என்றால் மேல் நோக்கி எழுப்புதல் என்று பொருள். எலும்பு மண்டலத்திற்கு வலுவூட்டுகிறது. உடல் உயரமாக வளர உதவுகிறது. தொந்தியை குறைய வைக்கிறது. முதுகு எலும்புகளுக்கு சக்தியூட்டி அவை வளைந்து கொடுக்கும் அளவிற்கு மிகுதிப்படுத்துகின்றது.

**2. ஊர்த்வமுக ஸ்வாசனம்**

ஊர்த்துவ என்றால் மேல் நோக்கிய என்றும், "முக" என்றால் முகம் என்றும், "ஸ்வாசனம்" என்றால் நாய் என்றும் பொருள். இந்த ஆசன நிலை முதுகையும் தலையையும் பின்னோக்கி வளைத்து நிற்கும் நாயைப்போல் இருப்பதால் இந்த ஆசனம் "ஊர்த்துவ முக ஸ்வாசனம்" என்று அழைக்கப்படுகிறது. உயரம் தாண்டுவோர், நீளம் தாண்டுவோர் தங்கள் வெற்றிக்கு இந்த ஆசனத்தை நம்பலாம்.

**3. திரிகோணாசனம் :**

ஆசனநிலை பார்ப்பதற்கு முக்கோணம் போன்று தோற்றம் தருவதால் திரிகோணாசனம் எனப்படும்.

திரிகோணாசனம் உடலில் அஜீரணப் பகுதியை தூண்டி சரியாக செரிமானம் நடைபெற உதவும். இடுப்பு தொடைப்பகுதிக்கு நெகிழ்வு தன்மையை அளிக்கிறது. இந்த ஆசனம் செய்வதால் இடுப்பு மற்றும் தொடைகளில் இருக்கும் கொழுப்புகளை நீக்கி விடும். சிறுநீரகச் செயல்பாட்டை சரி செய்ய பெரிதும் உதவும்.

**4. சுகாசனம் :**

சுகமாகவே அமர்ந்து இருப்பதே சுகாசனம் ஆகும். சுகாசனம் இடுப்பு, முகுதுக் தண்டை வலிமையாக்கும். உட்கார்ந்து செய்யும் ஆசனங்களில் சுகாசனம் எளிமையானது.

இந்த ஆசனம் மார்புப் பகுதியில் விரிவு படுத்தக் கூடியது. சுவாசத்தை சீர்படுத்த பெரிதும் உதவக் கூடிய ஆசனம் சுகாசனம், மனதை அமைதியில் நிலைப்படுத்தவும், மனதை மேம்படுத்தவும் உதவுகிறது.


**5. பாலாசனம் :**

குழந்தை நிலை (பாலாசனம்). இந்த ஆசனம் நமது ஒட்டுமொத்த உடலையும் மன அழுத்தத்திலிருந்து பாதுகாத்து மன அமைதியை தருகிறது. நரம்பு மண்டலத்தை உறுதி செய்கிறது.

இந்த ஆசனம் செய்வதால் ரத்த ஓட்டம் அதிகரிக்கும். மன அழுத்தம் மற்றும் உடல் சோர்வை குறைத்து உடலை ஆரோக்கியமாக வைத்திருக்க உதவும்.

# பதஞ்சலியின் ஆரோக்கிய ஆசனங்கள்

டாக்டர் கி.ஜ. நிகிலா வெங்கட்
கோயம்பத்தூர், 8940991234



# கண்ணன் கருத்துரை



*கர்மண்யேவாதி காரஸ்தே மா பலேஷு கதாசன ।*
*மாகர்மபலஹேதுர்ப்பூர்மா தே ஸங்கோऽஸ்த்வகர்மணி ॥* (2-47)

**பலன் கிடைக்குமா கிடைக்காதா என்ற சிந்தனை இன்றி கடமையைச் சரியாகச் செய்வதே உன் தருமம். வினையின் பயன் உன் கையில் இல்லை. எனவே விளைவை எதிர்பார்க்காதே. அப்படிக் கருதி கடமை செய்யாது சோம்பியும் இராதே.**



**தொகுப்பு :**
**பேராசிரியர் அமரர் பொன் சௌரிராஜன், திருப்பதி.**

### 6. புஜங்காசனம் :

புஜங்காசனம் என்பது யோகக் கலையின் ஆசனங்களில் ஒன்று. புஜங்காசனத்தில் உடலின் ஒவ்வொரு பகுதியும் பங்கேற்கிறது. இந்த ஆசனம் செய்யும்போது பாம்பு படமெடுப்பது போல உடல் வளைந்து நிமிர்ந்து முகம் நேராக நோக்குகிறது. அதனால் இது சர்ப்பாசனம் என்றும் அழைக்கப் படுகிறது.

### 7. சேதுபந்தாசனம் :

பாலம் போன்ற அமைப்பை உடைய ஆசனம். எலும்புகளுக்கு மத்தியில் உள்ள ஜவ்வுகள் நன்கு வலிமையாவதற்கு இந்த ஆசனம் உதவி செய்யும்.

மார்பு பகுதி, கழுத்து, முதுகெலும்பு, இடுப்பு பகுதிகளை உறுதி செய்கிறது. தசை மண்டலத்தை வலுவடையச் செய்கிறது. சேதுபந்தனம் ஆசனத் தால் உடலில் சிலருக்கு ஏற்படும் தமனி அடைப்பு பிரச்சனை ஏற்படாமல் பாதுகாக்கும். இதயத்திற்கு சிறந்த ஆசனம்.

### 8. ஹலாசனம் :

ஹலா, ஆசனம் என்ற இரு வடமொழிச் சொற்களின் கூட்டுச் சொல்லாகும். ஹலாசனம் என்பது "ஹலா" என்றால் கலப்பை என்று பொருள். ஆசனம் என்றால் யோக நிலை. இந்த யோகாசன நிலை இந்திய விவசாயத்தின் கலப்பை போன்று அமையும் என்பதால் இதற்கு இப்பெயர் ஏற்பட்டுள்ளது.

இரத்த ஓட்டத்தை அதிகப்படுத்தும். பெண் களின் மாதவிடாய் பிரச்சனைகளை சரிசெய்யும். மலச்சிக்கலையும் போக்கும். இதயத்திற்கு வலிமை ஊட்டுகிறது. சுறுசுறுப்பும் சக்தியும் நிறைந்த தேகத்தை கொடுக்கிறது.

### 9. அர்த்த மத்ஸ்யேந்த்ராசனம் :

"அர்த்த" என்றால் பாதி. இந்த ஆசனம் உல குக்கு முதலில் ஹடயோகத்தை போதித்த மத்ஸ் யேந்திர நாதர் பெயரில் அழைக்கப்படுகிறது. இதில் முழு நிலை மத்ஸ்யேந்திராசனம் ஒன்று உள்ளது. அதன் பாதி நிலை ஆசனமாக இது இருப்பதால் அர்த்த மத்ஸ்யேந்திராசனம் என்று அழைக்கப் படுகிறது.

நரம்பு மண்டலத்திற்கு சிறந்த ஆசனம். இளமையை தக்க வைக்கும் நிகரற்ற ஆசனம்.

## சாஸ்த்திர நீதிகள்–90

அம்ருதம் சிசிரே வா அக்னி:
அம்ருதம் ப்ரிய தர்சனம் |
அம்ருதம் ராஜ சன்மானம்
அம்ருதம் க்ஷீர போஜனம் ||

குளிர் காலத்தில் உஷ்ணம் அம்ருதம் ஆகிறது. நல்ல குணமான நண்பர் கிடைத்தால் அம்ருதம். ராஜா பரிசு கொடுத்து புகழ்வதும் அம்ருதம். பசும் பால் சாதம் சாப்பிடுவதும் அம்ருதமே!

தொகுப்பு : திருநாங்கூர் உ.வே. ஸௌந்திரராஜபட்டர், புதுடில்லி.



தோள்களைத் திரட்டி வலுவூட்டுகிறது. வயிற்று வலியைப் போக்கக்கூடியது.

**10. சவாசனம் :**

சவாசனம் செய்வது மிகவும் எளிது. மேலும் பலருக்கும் மிகவும் பிடித்தமான ஆசனமாகவும் இருக்கும். ஏனெனில் இந்த ஆசனம் செய்வதற்கு உடலை வளைக்க வேண்டிய அவசியம் இல்லை.

இதற்கு பிணம் போன்று படுத்திருந்தால் போதும். ஆனால் இந்த ஆசனம் செய்யும்போது மனதால் உடலின் ஒவ்வொரு பாகத்தையும் ஓய்வு நிலையடையச் செய்தல் வேண்டும்.

எந்த ஆசனம் செய்வதானாலும் இறுதியில் சவாசனம் கண்டிப்பாக செய்ய வேண்டும். நாம் பயிற்சி செய்யும் போது இழந்த ஆற்றலை மீண்டும் பெற உடலை ஓய்வு நிலையில் வைத்திருக்க வேண்டும். நரம்பு மண்டலத்திற்கு சிறந்த பலன் தரும்.

**11. தாடாசனம் :**

தாடாசனம் ஓர் யோகாசன வகை. மலைபோல் நிமிர்ந்து நிற்பதால் இதற்கு தாடாசனம் என்று பெயர்.

இந்த ஆசனம் செய்வதால் இரத்த ஓட்டம் சீரடைகிறது. உடலை புத்துணர்ச்சியாக வைத்திருக்க உதவுகிறது.

தொடரும்...

# வடுக நம்பி இயற்றிய ஸ்ரீயதிராஜ வைபவம்



*தாமக்$_3$ரஹீத$_3$க்$_3$ரஜபூ$_4$மிதே$_3$வீம் ஹ்ருஷ்யந்மநா: கேசவஸோமயாஜீ|*
*தாம் சாநுஜாதாம் கமலாக்ஷப$_4$ட்ட: ஸ்ரீதே$_3$விகாம் தௌ ச துதோஷ பூர்ண: ||*
(4)



**கேசவஸோமயாஜியானவர் அந்த சஹோதரிகளில் மூத்தவளான பூமி தேவியை மிகவுகந்து மணம் புரிந்து கொண்டார். அவ்வண்ணமே இளையவளான ஸ்ரீதேவியைக் கமலநயபட்டர் மணம் புரிந்து கொண்டார். இத்திருமணங்களாலே திருமலை நம்பியும் அவ்விரு மணவாளப் பிள்ளைகளும் ஆநந்தமடைந்தனர்.**

–“ஸுதர்சனம்” ஆசிரியர் இயற்றியது

# பூர்வாசார்ய ஸ்தோத்ரங்கள்

## ஸ்ரீவேதாந்த தேசிகர் அருளிய ஸ்ரீஸுதர்சநாஷ்டகம்

மா பெரும் தொற்று நோயான கொரோனா உலகை ஆட்டிப்படைத்துக் கொண்டிருக்கும் சமயமிது. பலரும் இந்நோய்க்கு ஆளாகி என்ன செய்வதென்று தெரியாமல் தவிக்கின்றனர். இப் படிப்பட்ட சமயங்களில் எம்பெருமான் ஸ்ரீமந் நாராயணனே நமக்கு புகலாகத் திகழ்கிறான். மருத்துவனாகவும், மருந்தாகவும் இருந்து நம்மை என்றும் காத்து அருள்பவன் எம்பெருமான் ஒருவனே.

பரமாத்மா தன் ஆயுதங்களைக் கொண்டு பகைவர்களை அழிக்கிறான். அதே ஆயுதங்கள் அவனுக்கு ஆபரணங்களாகவும், அவனுடைய பக்தர்களைக் காக்க வல்லதாகவும் விளங்குகின்றன. மேலும் இந்த ஆயுதங்கள் பக்தர்களை துன்பத்திலிருந்து காக்கின்றன. எம்பெருமானின் ஆயுதங்கள் பக்தனுக்கு மன தைரியத்தை அளித்து துன்பத்திலிருந்து விடுபட வழி வகுக்கின்றன.

திருமாலின் திருக்கரங்களில் சங்கும் சக்கரமும் என்றும் இருப்பதை நாம் காண்கிறோம். எம்பெருமான் திருக்கரத்தில் விளங்கும் சக்கரத்தையே சுதர்சன சக்கரம் என்று கூறுகிறோம். ஸ்ரீவைஷ்ணவ சம்பிரதாயத்தில் சுதர்சன ஆழ்வார் என்றும், சக்கரத்தாழ்வார் என்றும் கொண்டாடு கிறோம். பெரும்பாலும் விஷ்ணு ஆலயங்களில் சக்கரத்தாழ்வாருக்கு தனி சன்னதியும் உண்டு. சக்கரத்தாழ்வார் பதினாறு ஆயுதங்களை திருக்கரத்தில் ஏந்தி பக்தர்களுக்கு அருள்புரிகிறார். பதினாறு திவ்ய ஆயுதங்களாவன. சக்கரம். மழு, ஈட்டி, தண்டம், அங்குசம், சதமுக அக்னி, கத்தி, வேல், சங்கம், வில், பாசம்(கயிறு), கலப்பை, வஜ்ரம், கதை, உலக்கை, சூலம் ஆகியவையாகும். திருமாலின் கையிலுள்ள சக்கரமும், சக்கரத்தாழ்வாரின் கையி லுள்ள 16 ஆயுதங்களும் பக்தர்களை காத்து ரக்ஷிக்கின்றன.

முக்தி தரும் நகர் ஏழில் ஒன்று காஞ்சி. பிரம்மன் செய்த யாகத்தால் ஆவிர்பவித்த வரதராஜபெருமாள் நித்யவாசம் புரியும் புண்ய தலம் காஞ்சி நகராகும். இந்த திவ்ய தேசத்தின் அருகில் திருத்தண்கா என்ற மற்றொரு அழகிய திவ்ய தேசம் உள்ளது. தீபப்பிர காசர் சன்னதி திருத்தண்கா திவ்யதேசத்தில் உள் ளது. அங்கு தூப்புல் என்று ஒரு அக்ரஹாரம் இருக்கி றது. தூப்புல் என்றால் பரிசுத்தமான புல் – விச்வாமிர் தம் (தர்பம்) எனப்படும். இந்த அக்ரஹாரத்தில் விச்வாமித்ர கோத்திரத்தில் பிறந்த பெரியோர் வாழ்ந்தனர்.


பகவத் இராமாநுஜருக்குப்பின்னர் வைணவக் கோட்பாடுகளைப் பரவச் செய்த பெருமைக்குரியவர் வேங்கடநாதன் என்னும் சுவாமி வேதாந்த தேசிகனா வார். திருமலை மலையப்ப சுவாமியின் பிரம் மோத்சவ தீர்த்தவாரி திருநன்னாளான புரட்டாசி ச்ரவணத்தன்று திருமலையப்பனின் திருமணியின் அவதாரமாக தூப்புலில் திருமலையப்பனின் அம்சமாகவும் வேங்கடநாதனாக சுவாமி தேசிகன் 750 ஆண்டுகளுக்கு முன்னர் அவதரித்தார்.

சுவாமி தேசிகன் அவரின் மாமா மற்றும் குருவான அப்புள்ளாரிடம் சகல சாஸ்திரங்களையும் கற்று உலகின் மிகச் சிறந்த மேதையாக விளங்கினார். அப்புள்ளாரின் அருளினால் கருடமந்திரம் கற்ற

வேங்கடநாதன், கருடனின் அருளையும், ஹயக்கீரிவனின் அருளையும் பெற்றார். ஸ்ரீ வைஷ்ணவ சம்பிரதாயத்துக் கோட்பாடுகளின்படி காஞ்சியில் வாழ்ந்து வந்தார்.

பிறவி முதல் தெய்வீக அருளுடன் திகழ்ந்த தேசிகர் ஒரு முறை மகாலட்சுமி ஸ்தோத்திரம் பாடியபோது ஆகாயத்திலிருந்து தங்ககாசு மழை பொழிந்தது. தனக்கென்று எதையும் ஆசைக் கொள்ளாத அம்மகாத்மா , ஒரு ஏழை இளைஞனுக்கு அதை வாரி வழங்கினார். தத்துவ ஞானியாக மட்டுமன்றி கவிஞராகவும், சமுதாயத்திற்கு வழி காட்டியாகவும், எளியோருக்கு இரங்குபவராகவும், மிகச்சிறந்த சீர்திருத்தவாதியாகவும் வேங்கடநாதன் திகழ்ந்தார். தேசிகன் காஞ்சியில் இருந்தபோது காஞ்சிக்கு அருகே திருப்புட்குழி என்னும் கிராமத்தில் பெரும்பாலான மக்கள் குளிர் ஜுரத்தால் மிகவும் துன்புற்றனர். இன்று நாம் கொரோனா என்னும் கொடிய தொற்றுநோயின் தாக்கத்தில் இருப்பதுபோல் அன்று திருப்புட்குழி மக்கள் நோய் தொற்றின் காரணத்தால் தவித்தனர். குழந்தைகள், பெரியோர், பசுவினங்கள் என்று அனைவரும் பாதிக்கப்பட்டதால் அந்த கிராமமே என்னசெய்வது என்று தெரியாமல் தவித்துக் கொண்டிருந்தது.

சுவாமி தேசிகனின் தவபலத்தை அறிந்த திருப்புட்குழி மக்கள், தேசிகனிடம் தங்களுக்கு உதவுமாறு பிரார்த்தித்தனர். மக்கள் துன்புற்றதைக் கேட்ட வேங்கடநாதன் கருணை சுரந்து திருவாழியாழ்வானை பற்றிய எட்டு சுலோகங்கள் மூலம் அந்த மக்களின் குறை தீர வேண்டும் என திருச்சக்கரத்தினை பிரார்த்தனை செய்தார். வேங்கட நாதனின்





வேண்டுதலின் பயனாக ஸ்ரீஸுதர்சநாஷ்டகம் என்னும் சக்கரத்தாழ்வானை குறித்த சுலோகத்தின் மகிமையாலும், ஸ்ரீஷோடஷ ஆயுத ஸ்தோத்திரம் என்று சுதர்சனரின் கையிலுள்ள பதினாறு ஆயுதங்களின் மேல் செய்த ஸ்தோத்திரங்களினாலும் கொடிய விஷ ஜுரத்திலிருந்து திருப்புட்குழி மக்கள் காக்கப் பட்டனர்.

சுதர்சன பெருமாளைப்பற்றிய ஸ்ரீசுதர்சநாஷ்டகம் என்னும் எட்டு சுலோகத்தில் திருமாலின் சுதர்சன சக்கரத்தின் பெருமைகள் பாடப்பட்டுள்ளன.

எதிரிகளுக்கு பயங்கரமாயிருப்பவர், வேதங்களால் போற்றப்படுபவர், உலகின் நிலைப்பாட்டிற்கு காரணமாக இருப்பவர், ஆபரணமாக பெருமாள் கையில் விளங்கி எம்பெருமானுக்கு அழகு சேர்ப்பவர். பிரம்மன் முதலிய தேவர்களால் போற்றப்படுபவர், எம்பெருமானுக்கு பலவகையிலும் துணை புரிபவர், நம்மைப் போன்றோர் சம்சார பந்தம் நீங்கி மோட்சம் பெற வழி வகுப்பவர், யந்திர வடிவில் பக்தர்களுக்கு அருள்பாலிப்பவர், உலகத்தின் அச்சத்தை நீக்குபவர் என்று இந்த சுலோகங்களில் சக்கரத்தாழ்வார் துதிக்கப்படுகிறார்.

ஸ்ரீசுதர்சநாஷ்டகம் என்னும் இந்த ஸ்தோத்திரத்தை பாராயணம் செய்து வந்தால் எல்லா காரியங்களிலும் வெற்றிக்கிட்டுவது நிச்சயம். இதை சுவாமிதேசிகன் இந்த ஸ்தோத்திரத்தில் பல ஸ்ருதி பாடலில் விளக்கியுள்ளார். அதாவது பல சாரமான விஷயங்களைக் கொண்ட ஸ்ரீசுதர்சநாஷ்டகம் என்னும் சுலோகத்தை சேவிப்பவர்கள் பெற முடியாத பயன்களை விரும்பினாலும் திருச்சக்கரத்தாழ்

**வாசகர்களே...**

ஏழு மலைகள் நிறைந்த திருமலையில் நித்திய வாசம் செய்யும் கலியுக கண்கண்ட தெய்வமான திருவேங்கடவன் தங்களுடைய வாழ்வில் நிகழ்த்திய திருவிளையாடல்கள் அதாவது ஸ்வாமியின் திருலீலைகளை ஸப்தகிரி பத்திரிகையில் வெளியிடுவதற்கு ஏதுவாக அதை எழுதி ஸப்தகிரி அலுவலகத்திற்கு அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறோம்.

*எங்கள் முகவரி :*
**பிரதான ஆசிரியர்,**
**"ஸப்தகிரி", தி.தி.தே.,**
**கபிலத்தீர்த்தம் சாலை, திருப்பதி - 517 507.**
**0877- 2264543, 2264359.**

வானின் அருளால் அவைகளனைத்தையும் உறுதியாகப் பெறலாம். அவர்களின் விருப்பம் எந்நாளும் தடைபடாது என்று குறிப்பிட்டுள்ளார்.

அன்று திருப்புட்குழி மக்களை துன்பத்திலிருந்து விடுபட வழிவகுத்த ஸ்ரீசுதர்சநாஷ்டகம் என்னும் இந்த ஸ்தோத்திரத்தை *"ஜய ஜய ஸ்ரீசுதர்சந! ஜய ஜய ஸ்ரீ சுதர்சந!"* என்று திருச்சக்கரத்தாழ்வானின் பெருமை கூறும் வரிகளை கொரோனா தொற்றால் உலகமே துயரத்தில் ஆழ்ந்த இந்த வேளையில் நாம் பாராயணம் செய்து பலன் பெறுவோமாக

ஆனிமாதம் சித்திரை நட்சத்திரத்தில் அவதரித்த திருச்சக்கரத்தாழ்வானின் பெருமைகளை சுவாமி தேசிகன் பாடியபடி நாமும் பாடி கொண்டாடுவோமாக. ஸ்ரீ விஷ்ணுசக்கரத்தின் அருளால் நோய் தொற்று, பேய், பிசாசு, சத்ரு, ஆயுதம் முதலியவைகளால் உண்டாகும் பயத்திலிருந்து நிவர்த்தி பெற்று அவரின் அருளை இந்த சுதர்சன ஜெயந்தி மாதத்தில் பிரார்த்தித்து பெறுவோமாக. உலகம் முழுவதும் உள்ள ஆயுத கூட்டங்களுக்கு பிறப்பிடமான ஸ்ரீசுதர்சனம் உலகு அனைத்தையும் ரக்ஷிக்கட்டும்.

**ஸ்ரீவேதாந்த தேசிகன் அருளிச் செய்த ஸ்ரீசுதர்சநாஷ்டகம்**

*ஸ்ரீமாந் வேங்கடநாதார்ய: கவிதார்க்கிக கேஸரீ ।*
*வேதாந்தாசார்யோ மே ஸந்நிதத்தாம் ஸதா ஹ்ருதி ॥*

*ப்ரதிபட ச்ரேணி பீஷண வரகுண ஸ்தோம பூஷண*
*ஜநிபய ஸ்த்தாந தாரண ஜகதவஸ்த்தாந காரண ।*
*நிகில துஷ்கர்ம கர்சந நிகம ஸத்தர்ம தர்ஸந*
*ஜயஜய ஸ்ரீ ஸுதர்சந ஜயஜய ஸ்ரீ ஸுதர்சந ॥ -1*

*சுப ஜகத்ரூப மண்டந ஸுர கண த்ராஸ கண்டந*
*சத மக ப்ரஹ்ம வந்தித சதபத ப்ரஹ்ம நந்தித ।*
*ப்ரதித வித்வத் ஸபக்ஷித பஜத ஹிர்புத்ந்ய லக்ஷித*
*ஜயஜய ஸ்ரீஸுதர்சந ஜயஜய ஸ்ரீஸுதர்சந॥ -2*

*ஸ்புட தடிஜ்ஜால பிஞ்ஜர ப்ருதுதர ஜ்வால பஞ்ஜர*
*பரிகத ப்ரத்ந விக்ரஹ படுதர ப்ரஜ்ஞ துர்க்ரஹ।*
*ப்ரஹரண க்ராம மண்டித பரிஜந த்ராணபண்டித*
*ஜயஜய ஸ்ரீ ஸுதர்சந ஜயஜய ஸ்ரீஸுதர்சந॥ -3*

*நிஜ பத ப்ரீத ஸத்கண நிருபதி ஸ்ப்பீத ஷட்குண*
*நிகம நிர்வ்யூட வைபவ நிஜ பர வ்யூக வைபவ।*
*ஹரிஹய த்வேஷி தாரண ஹர புர ப்லோஷ காரண*
*ஜயஜய ஸ்ரீ ஸுதர்சந ஜயஜய ஸ்ரீ ஸுதர்சந॥ -4*

*தநுஜ விஸ்தார கர்த்தந ஜநித மிஸ்ரா விகர்த்தந*
*தநுஜ வித்யா நிகர்த்தந பஜத வித்யா நிவர்த்தந।*
*அமர த்ருஷ்டஸ்வ விக்ரம ஸமர ஜுஷ்ட ப்ரமிக்ரம*
*ஜயஜய ஸ்ரீ ஸுதர்சந ஜயஜய ஸ்ரீ ஸதர்சந॥ - 5*

*ப்ரதி முகாலீட பந்துர ப்ருது மஹா ஹேதி தந்துர*
*விகட மாயா பஹிஷ்க்ருத விவத மாலா பரிஷ்க்ருத।*
*ஸ்த்திர மஹாயந்திர தந்த்ரித த்ருட தயா தந்த்ர யந்த்ரித*
*ஜயஜய ஸ்ரீ ஸுதர்சந ஜயஜய ஸ்ரீ ஸுதர்சந॥ -6*

*மஹித ஸம்பத் ஸதக்ஷர விஹித ஸம்பத் ஷடக்ஷர*
*ஷடர சக்ர ப்ரதிஷ்டித ஸகல தத்வ ப்ரதிஷ்டித।*
*விவித ஸங்கல்ப கல்பக விபுத ஸங்கல்ப கல்பக*
*ஜயஜய ஸ்ரீ ஸுதர்சந ஜயஜய ஸ்ரீ ஸுதரசந॥ -7*

*புவந நேத்ர த்ரயீமய ஸவந தேஜஸ் த்ரயீமய*
*நிரவதி ஸ்வாது சிந்மய நிகல ஸக்தே ஜகன்மய।*
*அமித விச்வ க்ரியாமய ஸமித விஷ்வக் பயாமய*
*ஜயஜய ஸ்ரீ ஸுதர்சந ஜயஜய ஸ்ரீ ஸுதர்சந॥ - 8*

*த்விசதுஷ்கமிதம் ப்ரபூதஸாரம்*
*படதாம் வேங்கடநாயக ப்ரணீதம்।*
*விஷமோபி மநோரதர் ப்ரதாவந்*
*ந விஹந்யேத ரதாங்க துர்ய குப்த॥ -9*

*கவிதார்க்கிக ஸிம்ஹாய கல்யாண குணசாலிநே।*
*ஸ்ரீமதே வேங்கடேசாய வேதாந்த குரவே நம:॥*

## 108 திவ்விய தேச வைபவம் 60

# திருமோகூர்

**புராணவரலாறு :**

நாரதருக்கு, மார்க்கண்டேயர் திவ்ய தேசங்களில் மிக உயர்ந்த திவ்ய தேசம் என்று "திருமோகூரை"ப் புகழ்கிறார்.

பரமன், தேவர், அசுரர் உதவியோடு பாற்கடலைக் கடைந்தபோது கிடைத்த அமிர்தத்தை மோகினி அவதாரம் எடுத்துத் தேவர்களுக்கு விநியோகித்த திருத்தலம். தேவர்களின் பிரார்த்தனையின்படி.

*சங்க சக்ர கதாஹஸ்தம்*
*ஸர்வாபீஷ்ட வரப்ரதம் |*
*அந்வபூவந்நநிமிஷை:*
*நயனைஸ்தம், திவௌகஸ: ||*

என்று அர்ச்சாவதாரப் பெருமானாக இங்கு எழுந்தருளியதாகத் தல வரலாறு சொல்கிறது. தேவர்கள் "காள மேகப் பெருமாள்" என்று திருநாமமிட பிரம்மாவால் அளிக்கப்பட்ட சதுர்முக விமானத்தில் எழுந்தருளியுள்ளார். திருப்பாற்கடலைக் கடைந்த சமயத்தில், அமிர்தத்தின் சிறுதுளி இங்கு தெறித்து திருக்குளமாக மாறியது என்பர். குளத்தின் கரையில் திருப்பாற்கடலைப் போல, ஆதிசேஷன் மீது சயனத்திருக்கோலம்.



**சிறப்புகள் :**

ஸ்ரீமணவாள மாமுனிகள் "நம் இறுதிப் பயணத்தில் ஆத்மா, பகவானை அடைவதற்காகச் செல்லும் வழியில் – அர்ச்சிராதி மார்க்கத்தில் – இவன் (இந்த பெருமான்) நமக்குத் துணையாக வருவான்" என்கிறார்.

*ராஜாக்கள் போம்போது, முன்னமேகர் நீர் விடுமாப் போலே, முன்னால் காளமேகம் சௌந்தர்ய அமுதத்தை வர்ஷித்துக் கொண்டு போக...." -* இது நம்பிள்ளை என்கிற ஆசார்யரின் வியாக்யானம். எம்பெருமான் முன்னே செல்கிறார்; பின்னாலே நம்மாழ்வார் வருகிறார் என்று திரும்பிப் பார்ப்பாராம். இவர் – சுடர்கொள் சோதி.

"அவன் முன்னே போகப் பின்னே போகா நின்றால் அவ்வடிவழகு (நான்கு திருத்தோள்கள், திருவடி, திருமுக சௌந்தர்யம் – தேஜஸ், கரிய கூந்தல், கனிவாய், சுடர் கொள் சோதி வடிவம்) தன்னை அநுபவித்துக்



– திரு. உருப்பட்டூர் சௌந்தரராஜன்,
சென்னை.

கொண்டுபோம், அதுவே ப்ரயோஜனமாகப் போகும்படியாய் இருப்பது” ஸ்ரீ அழகிய மணவாளப் பெருமாள் நாயனார். ஸ்ரீ ஆசார்ய ஹ்ருதயத்தில் இப்படி அருளியுள்ளார்.

*“மார்க்கபந்து சைத்யம், மோஹனத்தே மடுவிடும்”*

–ஆசார்ய ஹ்ருதயம்.

| | | |
|---|---|---|
| பெருமாள் | : | மூலவர் : காளமேகப் பெருமாள் (கிழக்கு நோக்கிய நின்ற திருக் கோலம்) சங்கு, சக்ரதாரியாக – வரதஹஸ்தம் – இடது ஹஸ்தத் தில் கதாயுதம்) |
| உத்ஸவர் | : | திருமோகூர் ஆப்தன், குடமாடு கூத்தன், தயரதன் பெற்ற மரகத மணித்தடம், சுடர்கொள் சோதி, படர்காள் பாம்பணைப் பள்ளி கொள்வான். |
| தாயார் | : | மோகூர்வல்லித் தாயார், மோகன வல்லி, மோகவல்லி, |
| விமாநம் | : | சதுர்முக விமாநம், கேதக விமாநம் |
| தீர்த்தம் | : | க்ஷீராப்திபுஷ்கரணி, தாள தாமரைத்தடம் |
| ப்ரத்யக்ஷம் | : | பிரம்மா, ருத்ரன், அஜருத்ரன் |
| ஆகமம் | : | பாஞ்சராத்ரம் |
| மங்களாசாஸனம் | : | நம்மாழ்வார், திருமங்கை ஆழ்வார். |

விசேஷம்: சக்கரத்தாழ்வார் சன்னதி பிரசித்தி பெற்றது. எல்லா லக்ஷணங்களும் பொருந்திய பீஜாக்ஷரங்கள் உள்ள ஸ்ரீஸுதர்சனர். வேண்டு வோர்க்கு, வேண்டுவதை அருளும் வள்ளல். ஸ்ரீஸுதர்சன ஹோமம் – மிகவும் விசேஷமாக நடை பெறுகிறது. (ஒரே கல்லில் ஒருபுறம் ஸ்ரீநரசிம்மர். இன்னொரு புறம் ஸ்ரீஸுதர்சனர்) ஸ்ரீ ஆளவந்தாரின் சிஷ்யர்கள் திருமோகூர் அப்பன், திருமோகூர் நின்றார் இவ்வூரைச் சேர்ந்தவர்கள். ஊரின் அருகே “யானைமலை” புராணப்ரசித்தி பெற்றது.

*“வருமோ கூன்தொழுத்தையால் இவ்வல்வினை,*
*வள்ளல் வந்து பொரும் ஓர்கூர் வாளியாலே*
*இராவணன் பொன்ற வென்றி*
*தருமோகோ என்ற மின்னின் சிறை தவிர்த்து*
*அவன் தன்னோடும்*
*திருமோகூரில் இலங்க நின்ற செழுஞ்சிலை*
*இராமன் வாழி”*

– வரதராச பாகவதம்

**த்யான சுலோகம்**

*மோஹூராக்ய புரேரமாபதிரயம் ஸ்ரீகாள மேகாஹ்*
*வய:*
*தேவீமேகலதா விமாநமபி வைதத் கேதகம் நாமத:*
*தீர்த்தம் க்ஷீரபயோநிதி: ச்ரித ஜநா நந்தாவஹஸ்*
*ஸர்வதா,*
*பாஸ்வத் பாஸ்கர திங்முகஸ் ஸுரகணாபீஷ்ட*
*ப்ரதோ பாஸதே*

– ஸ்ரீவிஷ்ணு ஸ்தலாதர்சம்

**பாசுரம்**

*கூத்தன் கோவலன் குதற்ற வல்லசுரர்கள் கூற்றம்*
*ஏத்தும் நங்கட்கும் அமரர்க்கும் முனிவர்க்கும்*
*இன்பம்*
*வாய்த்த தண்பணை வளவயல் சூழ் திருமோகூர்*
*ஆத்தன், தாமரை அடி அன்றி மற்று இலம்*
*அரணே.*

– நம்மாழ்வார்

*“சீராரும் மாலிருஞ்சோலை - திருமோகூர்*
*பாரோர் புகழும் வதரி, வடமதுரை”*

– திருமங்கையாழ்வார் பாசுரம்

*“வாயால் மலர்கோதி வாவி தொறும் மேயுமோ !*
*மேயாமல் அப்பால் விரையுமோ! - மாயன்*
*திருமோகூர் வாய் இன்று சேருமோ! நாளை*
*வருமோ கூர்வாய் அன்னம் வாழ்ந்து”*

– பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் பாசுரம்

**நாமாக்கள்**

*551 ஓம் வேதா: நம:*

எண்ணற்ற பலப்பல லீலைகளைச் செய்பவனே

*ஓம் ரத க்ராந்தாயை நம:*

பெருமாள் திருமேனியில் இருந்து கொண்டு, தன் காந்தியால் அவர் திருமேனி முழுதும் வ்யாபிப்பவளே

*552. ஓம் ஸ்வாங்க: நம:*

சத்ரசாமரங்கள் – பரிச் சின்னங்களை உடையவனே

ஓம் விஷ்ணு க்ராந்தாயை நம:

சர்வசக்தியுள்ள பெருமாளால் சமுத்ரத்தைக் கடைவது, சிவதநுஸ்சை முறிப்பது போன்று ஆற்றல் மிக்க செயல்களால் தமக்கே உரியவர் என்று செய்து கொள்ளப்பட்டவளே.

553. ஓம் அஜித: நம:

அஜித் என்கிற வைகுந்த நகர வாஸனே

ஓம் உருசாரிண்யை நம:

பெருமாளுக்கும் முன்பாக காட்சி அளிப்பதற்காக, பெரிய நடையை உள்ளவளே

554. ஓம் க்ருஷ்ண: நம:

நீலமேக ச்யாமளனே

ஓம் வைரோசிந்யை நம:

சரணாகதனுக்கு ஜ்ஞானமென்னும் ஒளியை உண்டாக்குபவளே.

555. ஓம் த்ருப: நம:

அசைக்க இயலாத த்ருடமானவனே

ஓம் நாரஸிம்ஹ்யை நம:

நரம் கலந்த சிம்மமாகப் பெருமாள் அவதரித்தபோது அதே பதற்றத்துடன் தானும்

## மங்கள சுலோகங்கள்



ப்ராதர் வதாமி லலிதே தவ புண்ய நாம
காமேச்வரீதி கமலேதி மஹேச்வரீதி ।
ஸ்ரீசாம்பவீதி ஜகதாம் ஜனனீ பரேதி
வாக்தேவதேதி வசஸா த்ரிபுரேச்வரீதி ॥

லலிதே! உன் புண்ணிய நாமங்களை காமேச்வரி, கமலா, மகேச்வரி, ஸ்ரீசாம்பவி, உலகைப் பிறபித்தவள், பரா, வாசுதேவி, திரிபுரேச்வரி என்று வாயினால் காலையில் சொல்லுகிறேன்.

அவர் திருமார்பில் காட்சி தந்து கொண்டே தோன்றியவளே.

556. ஓம் ஸங்கர்ஷண: நம:

சேதன, அசேதனங்களைத் தன்னிடம் இழுப்பவனே

ஓம் ஜீமுதாயை நம:

திருமார்பில் நித்ய வாஸம் செய்து அவரது சீற்றத்தைப் போக்கியும், அடியார்கள் தாபத்தை அருள்மாரி பெய்தும் உதவுபவளே.

557. ஓம் அசயுத: நம:

தன் நிலையிலிருந்து வழுவாதவனே

ஓம் சுப தேஷணாயை நம:

மங்களத்தைத் தரும் கடைக் கண்பார்வை உடையவளே

558. ஓம் வருண: நம:

எல்லாவற்றையும் மறைத்து இருப்பவனே

ஓம் தீக்ஷாவிதாயை நம:

கல்யாண குணங்களை என்றும் விடாது உறுதியாகப் பற்றி இருப்பவளே.

559. ஓம் வாருண: நம:

தன்னை விரும்பும் பக்தர்களிடம் இருப்பவனே

ஓம் விச்வ சக்த்யை நம:

எல்லாவற்றிலும் உட் புகுந்து நியமிக்கும் பெருமாளிடம் இணை பிரியாது அவருக்கு அந்த சக்தியைப் போல இருப்பவளே

560. ஓம் வ்ருக்ஷ: நம:

அன்பர்களுக்கு நிழல்தரும் வ்ருக்ஷமே

ஓம் நிஜசக்த்யை நம:

பிறர் தயவின்றி, சொந்தமான சக்தியை உடையவளே.

ஸ்ரீமதே மோஹனவல்லிநாயிகா ஸமேத
ஸ்ரீகாளமேக பரப்ரஹ்மணேநம ஸ்ரீமதே ஸ்ரீ பூ,
ஸமேதாய ஸ்ரீக்ஷீராப்தி நாத பரப்ரஹ்மணே நம:

**குறிப்பு :**

மதுரையில் இருந்து பேருந்து உள்ளது. திருவாதவூர் செல்லும் சாலை. சுமார் 12 கி.மீ.

பாண்டிய நாட்டு திவ்ய தேச வைபவம் முற்றிற்று.

திவ்ய தேச வைபவம் வளரும்...

# அப்பிள்ளை அருளிய ஆழ்வார் ஆசார்யர்கள் வாழித்திருநாமமும் உரையும்

உ.வே. டாக்டர் மாடபூசி வரதராஜன் ஸ்வாமி, சென்னை, 9841884972

## ஸ்ரீமந்நாதமுனிகள் வாழித்திருநாமம் தொடர்ச்சி...

(பராங்குசனார் சொல் பிரபந்தம் பரிந்து கற்றான்) பராங்குசன் – நம்மாழ்வார் திருநாமம். தடையற்ற சுதந்த்ர னான எம்பெருமானை தம்முடைய பாசுரங்களாலே வசீ கரிக்க வல்லவர். கல்வி, செல்வம், குடிப்பிறப்பு ஆகிய வற்றால் உண்டான மும்மதச் செருக்கால் திரியுமவர்கள் தலை வணங்கும்படி உபதேசமாகிற அங்குசத்தை இட்டவர் என்பர். பராங்குசனார் சொன்ன பிரபந்தமாவது திருவாய் மொழியும் மற்ற மூவாயிரமுமாகும். இவற்றைப் பரிந்து கற்கையாவது – ஒரு சமயம் மேல் நாட்டிலிருந்து சில ஸ்ரீவைஷ்ணவர்கள் வீரநாராயணபுரத்தில் மன்னனாரைச் சேவிக்கும் போது “ஆராவமுதே” (5–8) என்கிற திருவாய் மொழியை அநுஸந்தித்தார்கள்.

அதனைக் கேட்ட ஸ்ரீமந் நாதமுனிகள் மிகவும் சந்தோஷ மடைந்தவராய் அவர்களிடம் “ஆயிரத்துள் இப்பத்தும்” என்று சேவித்தீர்களே, இப்பிரபந்தம் முழுவதும் தெரியுமா உங்களுக்கு” என்றார். அவர்கள் “இப்பத்துப் பாட்டு மட்டுமே தெரியும்” என்றனர். உடனே அவர்களுக்கு தீர்த்த ப்ரஸாதம் கொடுத்து அனுப்பினார். இந்த பிரபந்தம் சடகோபர் அவத ரித்த திருக்குருகூர் என்னும் ஆழ்வார் திருநகரி திவ்ய தேசத்திலே இருக்க வேண்டும் என்று நினைத்து ஆழ்வார் திருநகரிக்குச் சென்றார். ஆழ்வாரையும் பொலிந்து நின்ற பிரானையும் சேவித்தார்.

அங்கே மதுரகவிகளின் சீடரான ஸ்ரீபராங்குச தாஸரை சேவித்து, “இவ்விடத்தில் திருவாய்மொழி ஓதினவர்கள் உண்டோ? ஸ்ரீகோசங்கள் உண்டோ?” என்று கேட்டார். அவரும் “அவையெல்லாம் மறைந்து போயிற்று. இப்போது மதுரகவிகள் அருளிய கண்ணிநுண் சிறுத்தாம்பு என்ற திவ்ய பிரபந்தம் உள்ளது. இதனை பன்னீராயிரம் தடவை ஏக சிந்தையராய் ஆழ்வார் திருவடிகளை தியானித்து அநுஸந்தித்தால், ஆழ்வார் மனக்கண்ணிலே தென்படுவார்” என்று அருளினார். ஸ்ரீமந் நாதமுனிகளும் இப்படி நம்மாழ்வார் விஷயமாக மதுரகவிகள் அருளிய கண்ணிநுண் சிறுத்தாம்பை பன்னீரா யிரம் உரு சொல்லவே, நம்மாழ்வாரும் ஸ்ரீமந்நாதமுனிகளுக்கு அறியாமையைப் போக்கி பக்தியையும் ஞானத்தையும் அருளி, திவ்யமான கண்ணைக் கொடுத்து, மூன்று இரகசியங்களையும், திருவாய்மொழியை யும், மற்றுமுள்ள மூவாயிரப் பிரபந்தங்களை யும், எல்லா தர்சன கருத்துக்களையும் அஷ் டாங்க யோக ரகசியத்தையும் உபதேசித்தார்



என்று குருபரம்பராப்ரபாவம் கூறுவது அறியற்பாலதாகும்.

மேலும் இவருடைய தனியனில் ***''ய: ஸ்ரீசடாரே: ச்ருதவாந் ப்ரபந்தம் அகிலம் குரோ:''*** என்று அருளியதற்கு ஏற்ப நம்மாழ்வாரை ஆசார்யராகப் பற்றி திவ்ய பிரபந்தம் முழுவதையும் கேட்டவர் என்று அருளியது காண்க. இதற்குச் சேர, ***''தண் தமிழ்க் கண்ணிநுண் சிறுத் தாம்பைப் பண்டை உருவால் பன்னீராயிரம் உரு உரை செய்ய, ஒண் தமிழ் மாறன் திருவுள்ளமுகந்து திவ்ய ஞானம் நாதமுனிக்கு நயந்தருள் புரிந்தாரன்றோ''*** என்று உரைப்பர் பிள்ளைலோகம் சீயர். இவற்றை விரும்பி ஸ்ரீமந் நாதமுனிகள் கற்றதனால் "பரிந்து கற்றான்" என்றபடி.

(கானமுறத்தாளத்தில் கண்டு இசைத்தான்) கானம் உற – கானம் நிலைக்க, தாளம் – கைத்தாளக் கருவி, ஸ்ரீமந்நாதமுனிகள் தம்முடைய திவ்ய ஸ்தலமான வீரநாராயணபுரத்துக்கு வந்து, அங்கு எழுந்தருளியிருக்கும் எம்பெருமானான மன்னனாரிடம் நம்மாழ்வார் தமக்கு திவ்ய பிரபந்தங்களை அருளினதைச் சொன்னார்.

மன்னனாரும் மிக்க உகப்புடனே இவர் கனவில் வந்து இந்த திவ்வியப் பிரபந்தங்களை ஓருரு நாதமுனிகளுடன் அருளிச் செய்து, "இவ்வுலக மக்களைத் திருத்த நீர் இந்த பிரபந்தங்களை இயலும் இசையுமாக்கும்" என்று அர்ச்சகர் வாயிலாக நியமித்தார். தம்முடைய மருமக்களான கீழை அகத்தாழ்வாரையும் மேலை அகத்தாழ்வாரையும் கூட்டிக் கொண்டு இத்திவ்வியப் பிரபந்தங்களை, வேத வியாஸர் வேதங்களை நான்கு ஸ்வரங்களோடு உச்சரிப்பது போல, ஸ்ரீமந்நாதமுனிகளும் இவற்றை திவ்ய தேவகானத்திலே சேர்த்து நன்கு இசைக்கும்படி செய்வித்தார்.

பின்னர் இருவரும் இனிய குரலையுடையவர்களாய், முற்காலத்திலே குசலவர்கள் இராமனுக்கு முன்னால் ஸ்ரீராமாயணத்தைப் பாடியது போல, வீரநாராயணபுரம் ஸ்ரீராஜகோபாலன் ஸந்நதியில் திவ்ய பிரபந்தங்களை ஆர்வத்துடன் பாடினார்கள்.

தாளத்தில் கண்டு இசைத்தலாவது – ஸ்ரீமந்நாதமுனிகள் காலத்தில் சோழ ராஜாவின் அரண்மனை வாசலிலே தேவகானம் பாடுவாள் ஒருத்தியும், மனுஷ்ய கானம் பாடுவாள் ஒருத்தியும் சேர்ந்து தங்களில் தேவகானமே உயர்ந்தது என்று ஒருத்தி சொல்ல மற்றொருத்தி மனுஷ்ய கானமே உயர்ந்தது என்று சொல்ல, இதனால் வாதம் முற்றி ராஜாவிடம் அறிவிக்க, அவனும் வித்வான்களைத் திரட்டி இவ்விருவரையும் பாடுவித்து, மனுஷ்ய கானம் செய்தவளை பாராட்டி வெகுமதி அளித்தான்.

தேவகானம் பாடுபவள் மிகவும் மனம் நொந்து இந்த கானத்தை தேவர்களே அறிவர். மனிதர்கள் அறியார் என்று எண்ணி, கோயில் தோறும் சென்று பாடி, இறுதியில் மன்னனார் கோயிலிலே பெருமாள் முன் பாடினாள்.

வாழித்திருநாமம் வளரும்...

## வைணவக் குறுக்கெழுத்துப் புதிர் - 59க்கான பதில்

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 தி | ரு | ப் | பு | லி | யூ | ர் | சி | த | வா | 2 து | 3 தி |
| | | 4 வீ | | | ரி | கி | ள | க | ங் | 5 ம | ரு |
| | 6 பி | ர | ம் | ம | லோ | க | ம் | | | | ப் |
| | | ல | ண | த | 7 ப | க | வ | த் | கீ | தை | பா |
| தி | | ட் | ஷ் | மு | பி | ம் | ந | க | டு | 8 வ | வை |
| த் | | சு | மு | 24 கு | 9 பி | ர | க | லா | த | ன் | |
| ர் | மி | மி | 10 ஸ்ரீ | தை | ந் | ட | வ | ரு | 11 தி | ர | |
| மூ | ண | னை | | லி | சை | ஜா | ர | 12 வி | | தி | |
| ஞ | ர் | த | | ப | வா | | ம் | க | நா | ந் | 13 மை |
| க் | 23 பௌ | 14 பூ | | கா | 15 மா | ர் | க | ழி | | பே | |
| 16 ய | 17 ப | ல | ரா | 18 ம | 19 அ | வ | தா | ர | ம் | 20 உ | |
| 21 தி | ரு | வ | ல் | லி | க் | கே | ணி | 22 சு | ப | த் | ரை |



ஆயுர்வேதம்

# தேங்காய்

தெலுங்கு மூலம் : டாக்டர். சி.மதுசூதன சர்மா, 90007 61390
தமிழாக்கம் : திருமதி வி.உஷா, 99850 02156

இந்திய கலாச்சாரத்தில் ஒரு தனித் தன்மை வாய்ந்த மங்கலப் பொருள் தேங் காய். மங்கலப் பொருட்களில் முதன்மை இடத்தைப் பெற்ற தேங்காய் இல்லை யென்றால் எவ்வித சுபகாரியமும் இல்லை.

சமஸ்கிருதத்தில் "நாரிகேளா" என்னும் தேங்காய் மிகவும் திடமாக இருப்பதால் இதனை "திருடபலா" என்றும், எக்காலத்தி லும் கிடைக்கப் பெறுவதால் இதனை "சதா பலா" என்றும், "லாங்கலி" என்றும் பல்வேறு பெயர்களால் அழைக்கின்றனர். இம்மரத் தின் காய், பூ, இலை, பட்டை அனைத்தும் நமக்கு உபயோகப்படுகின்றன. ஆகையால் இம்மரத்தை கல்பவிருக்ஷம் என்றும் கூறுவர்.

கேரளாவில் பேசப்படும் மலையாள மொழியில் "கேர" என்றால் தென்னை மரம் என்றும், "ஆளம்" என்றால் "நிலம்" என்றும் பொருள். இங்கு தென்னை மரங்கள் அதிகமாக இருப்பதால் "கேரளா" என்ற பெயர் ஏற்பட்டது.

நம் நாட்டில் கேரளா, மஹாராஷ்டிரா ஆகிய மாநிலங்களில் தேங்காயை உபயோகித்து "நார்ளி பூர்ணிமா" என்கிற பண்டிகையைக் கொண்டாடுகின்றனர்.

* * * * * * * * * * * * * * * *

அரெகேசி என்ற தாவரக் குடும்பத்தைச் சேர்ந்த இதன் அறிவியல் பெயர் கோகஸ் ந்யூசிபெரா. இதனை இந்தியில் நாரியில் என்றும், தெலுங்கில் கொப்பரிக் காய என்றும், ஆங்கிலத்தில் கோகநட் என்றும் அழைக்கின்றனர். இந்திய பண்பாட்டின் படி திருமணத்தின் போது தேங்காயின் மேல் திருமாங்கல்யம் வைப்பது வழக்கம். இவ்வழக்கம் பவித்ரமான செயல் என்பதைக் குறிக்கும்.

ஹோமம் முதலிய நிகழ்ச்சிகள் செய்யும்போது "பூர்ணாஹுதி" என்ற பெயரில் தேங்காயை சமர்ப்பிப்பது ஆசாரம்.

எவ்வளவோ ஆன்மீக முக்கியத்துவத்தைக் கொண்ட இத்தேங்காய் பல வகைகளில் நமக்குப் பயன்படுகிறது. ஆரோக்கியப் பொருளாகவும், அழகுப் பொருளாகவும், பலவித நோய்களைத் தீர்க்கும் மருந்துப் பொருளாகவும் பயன்படும் தேங்காய் பற்றி அறிந்து கொள்வோம்.

**தலைமுடி நன்கு வளர்வதற்கு :**

காய்ந்த தேங்காய் துருவல், கருப்பு எள், நெல்லிப் பொடி, வெல்லம் ஆகிய ஒவ்வொன்றினையும் 50 கிராம் வீதம் எடுத்துக்கொண்டு நன்கு கலந்து, மிருதுவாக இடித்து ஒரு சீசாவில் வைத்துக் கொண்டு, இரண்டு வேளை ஒரு டீஸ்பூன்

அளவு வாயில் போட்டு சாப்பிட்டு பின் 1 கப் பால் குடித்து வந்தால் தலைமுடி நன்கு அடர்த்தியாக வும், கருமையாகவும் பளபளப்பாகவும் வளரும்.

**வாய்ப்புண் குறைய :**

நாள்தோறும் 1–2 முறை, வேளைக்கு 100 மி.லி. தேங்காய் பாலினால் வாய் கொப்பளித்து வந்தால் வாய்ப்புண் குறையும்.

**சிறுங்குடலில் ஏற்படும் புண்கள் குறைய :**

நாள்தோறும் ஒருமுறை 100–200 மி.லி. (தேங்காய்நீர்) இளநீரில் 10 கிராம் தேங்காய் துருவல், 5 கிராம் கல்கண்டு பொடி, ஏலக்காய் பொடி ஆகியவற்றை சேர்த்து சூரணம் போன்று தயாரித்து உட்கொண்டால் சிறுங்குடலில் ஏற்படும் அல்சர், புண் போன்றவை குறையும்.

**பலவிதமான தலைவலி நீங்க :**

நாள்தோறும் வெறும் வயிற்றில் 100 மி.லி. தேங்காய் பாலுடன் ஒரு டீஸ்பூன் கற்கண்டு பொடி கலந்து உட்கொண்டால் நல்ல பலன் கிட்டும்.

**வேர்க்குரு குறைய :**

தேங்காய் பாலில் தகுந்தளவு சீரகப் பொடி சேர்த்து கடலைமாவுடன் கலந்து குளித்து வந்தால் வேர்க்குரு குறையும்.

**பொடுகுத் தொல்லை நீங்க :**

வாரம் 1 அல்லது 2 முறை தேங்காய் பாலை தலைக்கு பூசி 1 மணி நேரம் கழித்து, வெது வெதுப் பான நீரில் தலைக்குளியல் செய்தால் பொடுகுத் தொல்லை நீங்கி முடி நன்கு வளரும்.

**தீப்புண், கொப்பளங்கள் :-**

இளநீர், தெளிந்த சுண்ணாம்பு நீர் ஆகியவற்றை சம அளவு கலந்து அதில் மஞ்சள்





சேர்த்து பூசு மருந்தாக தீப்புண் மீது பூசினால் தீப்பூண் குறையும். மேலும் கொப்பளங்கள், எரிச்சல், கை கால் எரிச்சல் ஆகியவையும் நீங்கும்.

**சிறுநீரகம் கழிக்கும் போது எரிச்சல் :**

நாள்தோறும் காலை மாலை ஆகிய 2 வேளையில் 100 – 200 மி.லி. தேங்காய் நீரில் ஒருடீஸ்பூன் இஞ்சி இரசம் சேர்த்து குடித்து வந்தால் சிறுநீர் கழிக்கும் போது உண்டாகும் எரிச்சல், வலி ஆகிய உபாதைகள் நீங்கும்.

**உறக்கத்திற்கு :**

உலர்ந்த கொப்பரை, கசகசா, கற்கண்டு ஆகிய வற்றை சம அளவில் கலந்து வைத்துக் கொண்டு நாள்தோறும் இரவு படுக்கும் முன் 100 மி.லி. வெது வெதுப்பான பாலில் 1 டீஸ்பூன் அளவு சேர்த்து குடித்து வந்தால் நல்ல உறக்கம் வரும்.

**கை கால் வெடிப்பு குறைய :-**

தேங்காய் பால், கிளஜரின் ஆகிய ஒவ்வொன் றையும் 10 மி.லி. அளவு எடுத்துக்கொண்டு, இரண்டி னையும் நன்கு கலந்து பூசிக்கொண்டால் கை காலில் ஏற்படும் வெடிப்பு குறைந்து மிருதுவாக இருக்கும்.

**குறிப்பு :**

மருந்துகளை உபயோகிப்பதற்கு முன்பு ஆயுர் வேத மருத்துவரை அணுகி, ஆலோசனைப் பெறவும். இக்கட்டுரை வாசகர்கள் பொது அறிவை வளர்த்துக் கொள்ளவே தவிர நோய்களுக்கு நிரந்தர தீர்விற்கு அல்ல.

# ஸ்ரீமத் பகவத்கீதை



**தெலுங்கு மூலம் :**
**திரு.கே.விஸ்வநாத சர்மா**

**தமிழாக்கம் :**
**டாக்டர் சி. கோவிந்தசாமி, 94445 82356**

*சென்ற இதழின் தொடர்ச்சி...*

தர்மக்ஷேத்ரம் என்றால் தர்மத்தை வளர்த்தெடுக்கும் க்ஷேத்திரம் என்று பொருள். மனிதர்கள் பொதுவாக சிந்திப்பது என்பது வேறு. தர்ம க்ஷேத்திரத்தில் நின்று சிந்திப்பது என்பது வேறு. நாம் கூட அனுபவித்து இருப்போம். ஏதாவதொரு திவ்விய தேசத்திற்குச் செல்லும்போது நல்ல நல்ல சிந்தனைகள் தோன்றுவதும், நல்ல நல்ல பாவனைகள் உண்டாகுவதும் உண்டு. இதன் காரணமாக திட்டமிடாத பல சிறப்பு தரிசனங்கள் செய்ய முற்படுவதும், தெய்வ கைங்கர்யங்களில் ஈடுபடுவதும் உண்டு. அதற்குக் காரணம் அந்த க்ஷேத்திரத்தின் மகிமை-சிறப்பு ஆகும். பாண்டவர்கள் பொதுவாகவே தர்மத்தின் சார்பு உடையவர்கள். அவர்கள் இப்போரை விரும்பாமல் உங்கள் நாட்டை நீங்களே வைத்துக் கொள்ளுங்கள் என்று சொல்லிச் சென்றார்களா அல்லது என் மகன் தர்ம க்ஷேத்ரத்திற்குச் சென்ற பின்பு மனம் திருந்தி இந்தப் போர் வேண்டாம். அவர்களுடைய நாட்டை அவர்களுக்கே கொடுத்து விடலாம் என நினைத்து திரும்பி வந்து விடுவானா? என் மகன் அப்படி வர மாட்டான் என்ற நம்பிக்கை உள்ளது. இருந்தாலும் சிறிய பயம்.

இவர்கள் இருவரிடையிலும் என்ன நடந்தது என்பதை தெரிந்துக் கொள்ளும் எண்ணமே அவர் கேள்வியில் "தர்ம க்ஷேத்ர" என்ற வார்த்தையின் உள் கருத்தை நன்றாக உணர்ந்து கொண்டான் சஞ்ஜயன். பொதுவாக ஒரு நாட்டின் அரசனுடைய எண்ண ஓட்டத்தை எள்ளளவும் பிசகாமல் உற்றுணர வல்லவனே நல்ல சேவகனாவான். அவனாலேயே நாட்டில் தர்மத்தையும் நிர்வாகத்தையும் சிறப்பாகக் காத்து வர இயலும். எனவேதான் பதில் கூறத் தொடங்கிய சஞ்ஜயன் "நீங்கள் ஒன்றும் அஞ்ச வேண்டியதில்லை. உன் மகனுக்கு போரை நிறுத்தும் யோசனை ஒன்றுமில்லை. போரைத் தொடரவே எண்ணிக் கொண்டிருக்கிறான்". ஆகையால் அந்த விஷயத்தில் நீங்கள் தைரியமாக இருக்கலாம்.

ஒருவருக்கு பிடித்த ஒன்றையே முதலில் எடுத்து சொல்வது என்பதும் ஒரு நற்குணமேயாகும். அது சஞ்ஜயனிடம் இருந்தது. மூன்றாவதாக என்ன செய்து கொண்டிருக்கிறான் என்றால் *"ராஜா வசனகுப்ரவீத்"* என்றார். திருதராஷ்டிரர் வாழ்நாள் முழுவதும்

வருத்தப்பட்டது எதற்கு என்றால் துரியோதனனை அரசனாக்கிப் பார்க்க வேண்டும் என்பதே. அந்த ஆசையை நிறைவேற்றுவதற்காகவே துரியோதனனை அரசன் என சம்போதித்து அவர் மகிழ்ச்சி அடையும் படி செய்தார். மேலும், அங்கு உள்ள நிகழ்வுகளை எடுத்துக் கூறும் முகமாக *''த்ருஷ்டவாது பாண்டவானீகம் வ்யூடம் துர்யோதனஸ்ததா''* என்றார்.

*''ஆசார்யமுபஸங்கம்ய ராஜா வசனமப்ரவீத்''* எவரிடம் சென்று பேசினான். பீஷ்மர் சேனாதிபதியாக இருந்தும், அவரிடம் செல்லாமல் துரோணரிடம் செல்ல காரணம் என்ன? என்ற ஐயம் உண்டாகலாம். அதற்குக் காரணம் துரோணர் இவருக்கு குரு. குருவிடம் சென்றால் என்ன? பீஷ்மரிடம் சென்றால் என்ன? துரோணரும் சேனாதிபதியாகும் தகுதி படைத்தவர் தானே. எனவே அவர் குருவிடம் சென்றார் என்று சொல்வதில் துரியோதனின் சுபாவத்தை அறிந்தவரான குருவிடம் சென்றான் என சஞ்ஜயன் அவரிடம் கூறினான்.

இதன் வாயிலாக நாம் அனைவரும் நுணுக்கமாக அறிந்து கொள்ள வேண்டிய செய்தி என்னவென்றால், நாம் எதை நினைத்து செயல் பட முனைகிறோமோ அப்போது முதல் மரியாதையாக குரு வணக்கம் செய்தல் வேண்டுமென்றும், அதன் பின்னரே ஸ்ரீநிவாசனை வணங்குதல் வேண்டும் என அறிதல் வேண்டும்.

அதாவது ஸ்ரீநிவாசனை வணங்குவதற்கு முன்பே குருவை வணங்குதல் வேண்டும். ஏனெனில் குருவே நம்மை ஸ்ரீநிவாசனிடம் அழைத்துச் செல்கிறார். இறைவனே அந்த குருவாக நம்மிடம் வந்து நமக்கு வழிகாட்டுகிறார். இந்த விஷயத்தை எவ்வாறு நாம் அறிய முடிகிறது என்பதற்கு பகவத்கீதையே எடுத்துக்காட்டாகும். பகவத்கீதையின் தொடக்கமே கேள்வியும் பதிலுமாகத் தொடங்குவதாக அறிகிறோம். முதல் சுலோகத்தில் திருதராஷ்டிரன் கேள்வி கேட்க, அதற்கு பதில் *''ஆசார்ய மு பஸங்கம்ய''* என்று கூறுவதினால் அறியலாம்.

மேலும், இது பார்ப்பதற்கு மிகவும் சிறிய தொடராக இருந்தாலும், *''குரூப சதனம், குரூபகமனம்''* என்றும், இத்தொடர்கள் உபநிஷத்தில் மிகவும் பெரிய விஷயமாக சொல்லப்பட்டுள்ளது. முதலில் குருவை வணங்குதல் வேண்டும். குருவை வணங்கினால் மட்டுமே நமக்கு தத்துவ ஞானம் உண்டாகும் என உபநிஷதம் உறுதியாகப் போதிக்கிறது.

குருவிடம் செல்வது மட்டும் போதாது. குருவிடம் சென்றால் என்ன செய்ய வேண்டும் என்பதும் பிரதானமாகும். இவை அனைத்தையும் உபநிஷதமும் பகவத்கீதையும் விரிவாக எடுத்துரைத்துள்ளன. ஆனால் இதில் எதையொன்றையும் துரியோதனன் கடைபிடிக்கவில்லை. எனவே குருவிடம் சென்றும் அவனுக்கு அதனால் பயன் உண்டாகவில்லை. குருவாகிய துரோணரிடம் சென்ற துரியோதனன், குருவே நான் இந்த போரில் வெற்றி பெறுவதற்கான உபாயம் ஒன்றை கூறுங்கள் எனக் கேட்டிருந்தால் நிச்சயமாக அவனுக்கு வழிகாட்டியிருப்பார்.

ஆனால் துரியோதனனோ தனக்கு தத்துவ ஞானத்தை உபதேசிக்கும்படியாவது கேட்டானா என்றால் அதுவும் இல்லை. எதையுமே குருவிடம் கேட்டுப் பெறவில்லை. எனவே குருவை சந்திக்கும்போது மிகவும் பணிவாகவும் பக்தியோடும் சென்று வணங்கி அவர் சொல்கின்ற உபதேசங்களை மனதை ஒருமுகப்படுத்தி கேட்டு உணர்ந்து அதை அன்றாட வாழ்வில் கடைபிடித்து நம் காரியங்களை நல்லபடியாக வெற்றி பெற செய்தல் வேண்டும்.

ஸ்ரீமத்பகவத் கீதையை நாம் "கீதாம்ருதம், கீதாம்ருதம்" என்று கூறுகிறோம். காரணம், பகவத் கீதையில் உள்ள ஒவ்வொரு சொல்லிலும், ஒவ்வொரு வார்த்தையிலும், ஒவ்வொரு எழுத்திலும் வாழ்க்கைக்குத் தேவையான முக்கியமான விஷயங்கள் சொல்லப்பட்டுள்ளது. அதனால் நாம் சிறப்பாக "கீதாம்ருதம்" என அழைக்கின்றோம்.

இப்படிப்பட்ட கீதாம்ருதத்தை "ஆசார்யோபசதநம்'', "குருபபததநம்" என்று சொல்லி தொடங்கப்பட்டுள்ளது. இந்த குருவும் "குரூப சதனம்" மூலமாக துரியோதனன் எவ்விதமான பயன் பெற்றான். சிஷ்யர்களோடு சம்பாஷனைகள் எம்முறையில் நடந்தது என்பதையெல்லாம் அறிந்து கொள்வோம்.

தொடரும்...

அலசுவோம்...... அறிவோம்.... ஆதிகாவிய நாயகர்களை......

# வேத வியாசர்

உலகத்தின் பிரம்மாண்ட காவியமான மஹாபாரதம் எனப்படும் அற்புதமான காவியத்தையும், ஸ்ரீமத்பாகவதம் உள்பட பதினெட்டு புராணங்களையும் உலகிற்கு வழங்கியவர்

திரு. சத்யதாரா, சென்னை,
99445 61775.

காலத்தினால் அளவிட முடியாத மிகப் பழமையான வேதங்களை ரிக், யஜுர், சாம, அதர்வண என நான்கு பிரிவுகளாக தொகுத்தும், இணையற்ற பொக்கிஷங் களாக மானுட வர்க்கத்திற்கு அருளிச் செய்து மாபெரும் சிறப்புடன் இன்று வரை போற்றப்பட்டு துதிக் கப்படுபவர் வேத வியாசர். யார் இந்த வேத வியாசர்?... வியாசர் எனப் படும் வார்த்தையின் பொருள் கோர்வையாக துல்லியமாகத் "தொகுத்த வர்" என்று பொருள். அது ஒரு தனி மனிதருடைய பெய ரல்ல. ஒரு பதவியின் பெயர். (நம்மில் பலர் சிறுவயதில் பள்ளியில் பயிலும்போது வியாச நோட்டு (Composition Note) என்று ஒரு பயிற்சி செய்ததை நினைவுக் கொள்ள லாம். வேதங்களை முறைப்படுத்தி ரிக், யஜுர், சாம, அதர்வண என நான்காகத் தொகுத்து அருளியதால் "வேத" என்ற அடை மொழியுடன் வேதவியாசர் என்றழைக்கப்பட்டார்.



**வியாசரின் ஜனனம் :**

இவரது இயற்பெயர் கிருஷ்ண துவைபாயனர் என்றே அறியப்படுகிறது. அவ்வாறு ஏன் பெயர் வந்தது? அலசுவோம். கிருஷ்ண என்ற சொல் கருப்பு நிறம் கொண்ட என்ற பொருள்படும். பகவான் ஸ்ரீகிருஷ்ணன் கருமை நிறம் கொண்டவரே. துவைபாயனர் என்றால் தீவு போன்ற இடம். இவர் பிறந்த இடம் யமுனை நதி. இவர் எவரது புத்திரராக அவதரித்தார் என்பது மிகவும் சுவையான ஒரு நிகழ்வு. முதல்படியாக இவரது ஜனனம் பற்றிய வரலாறே ஆச்சரியம் கொண்டதாகும்.

பிரம்ம ரிஷி வசிஷ்ட மாமுனிவரின் புத்திரன் சக்தி, சக்தியின் புத்திரன் பராசரர். பராசரரின் புத்திரன்தான் கிருஷ்ண துவைபாயனர் எனப்படும் வேதவியாசர். பராசரர் என்ற மகரிஷி அபா ரமான தவவலிமை கொண்ட மகாஞானி. இவருக்கும் யமுனை நதிக்கரையில் பட கோட்டியாக இருந்த மச்சகந்தா என்ற பெண்ணுக் கும் பிறந்தவர் தான் வேதவியாசர்.

**கிருஷ்ண துவைபாயனர் வேதவியாசர் ஆன பெருமை:**

துவாபர யுகத்தில் வியாசர் வாழ்ந்த காலத்தில் வேதங்கள் எனப்படும் அரிய அறிவுப் பெட்டகம் பலவாறாக சிதறிக்கிடந்தன. அப்போதைய சமுதாயத்தில் வாழ்ந்த குறிப்பாக வேதம் பயின்ற வேதியர்கள் மனம் போன போக்கில் வேதத்தை கற்பித்து வந்தனர். எனவே தர்ம நெறிகளின் வலிமை குறைந்து அதர்மம் மேலோங்கியது. இந்நிலையில் வேதங்களை சீராக தொகுத்து சரியான



பொருளையும் பிரயோகங்களையும் கற்பிக்க ஒரு தீர்க்கமான சங்கல்பம் செய்துக் கொண்டார் வியாசர். அவருடைய சிஷ்யர்களில் முறையான தகுதியும் ஞானமும் கொண்ட பைலர், வைசம்பாயனர், ஜைமினி, சுமந்து என்ற பெயர்கள் கொண்ட நான்கு சிஷ்யர்களை அடையாளம் கண்டார். வரி வடிவங்களின்றி பரம்பரையாகச் செவிகளினால் கேட்டு ஒலி வடிவம் சிறிதும் அணுவளவும் பிறழாமல் பாதுகாத்து வருவதே ஸ்ருதி எனப்படும்.

பைலர் என்ற சிஷ்யரின் மூலம் ரிக் வேதத்தை யும், வைசம்பாயணர் என்ற சிஷ்யர் மூலம் யஜுர் வேதத்தையும், ஜைமினி என்ற சிஷ்யர் மூலம் சாம வேதத்தையும், சுமந்து என்ற சிஷ்யர் மூலம் அதர்வண வேதத்தையும் கற்பித்து, தொடர்ந்து முறையாக வேதங்கள் கற்பிக்கப்பட ஒரு சிஷ்ய பரம்பரையினரையும், அதற்குரிய கட்டுப்பாடுக ளுடன் உருவாக்கினார். இப்படிபட்ட சேவைகளினா லேயே வேதவியாசர் என்ற சிறப்பான பெருமை கொண்ட பெயருடன் அறியப்பட்டார்.



திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

## திருப்பதியில் தரிசிக்க வேண்டிய ஆலயங்கள்

**ஸ்ரீ கோவிந்தராஜ ஸ்வாமி கோயில் :**

இங்கு எழுந்தருளியுள்ள மூல மூர்த்தி வைணவத் திலகமான ஸ்ரீராமாநு ஜரால் பிரதிஷ்டை செய்யப்பட்டதாக புராணங்கள் கூறுகின்றன. இங்கு உள்ள மூலவர் கிடந்த கோலத்தில் காட்சியளிக்கிறார். ஸ்ரீஆண்டாள், ஸ்ரீபார்த்தசாரதி மற்றும் ஸ்ரீவேங்கடேஸ்வர ஸ்வாமியும் இக்கோயிலில் இடம் பெற்றுள்ள னர்.

☎ 0877–2264592.

**ஸ்ரீ கோதண்டராம ஸ்வாமி கோயில் :**

இக்கோயில் திருப்பதி இரயில் நிலையத்திலிருந்து சுமார் ஒரு கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இக் கோயில் ஸ்ரீராமர் லக்ஷ்மணர் மற்றும் சீதை இலங்கை யிலிருந்து திரும்பி வரும்போது திருப்பதிக்கு வந்ததின் நினைவாக எழுப்பப்பட்டதாகும். ☎ 0877–2264584.

**ஸ்ரீ கபிலேஸ்வர ஸ்வாமி கோயில் :**

இங்கு அமைந்திருக்கும் சிவன் கோயில் திருப்பதி நகரத்திலிருந்து சுமார் 3 கி.மீ. தொலைவில் உள்ளது. கபிலமஹரிஷி யால் இங்குள்ள சிவலிங்கம் தோற்று விக்கப்பட்டதால் இந்த மூலவருக்கு கபிலேஸ்வரர் என்று பெயர் வந்தது. இங்கு உள்ள தீர்த்தமும் கபிலதீர்த்தம் என்றே அழைக்கப் படுகிறது. ☎ 0877– 2264587.

**அலர்மேல்மங்காபுரம் (திருச்சானூர்) :**

இது திருப்பதிக்கு 5 கி.மீ. தொலை வில் அமைந்துள்ளது. இதுவும் பழமை வாய்ந்த புனிதத் திருத்தலமாகும். திருவேங்கடவனின் தேவியான ஸ்ரீபத்மாவதி தாயார் மூலவராக இக் கோயிலில் எழுந்தருளியுள்ளார்.

☎ 0877–2264586.

## திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

## திருமலையில் பார்க்க வேண்டிய முக்கிய இடங்கள்

**ஸ்வாமி புஷ்கரணி :**

இந்தத் திருக்குளம் திருமலையில் திருமலையான் சந்நதியின் அருகிலுள்ளது. பக்தர்கள் கோயிலுக்குள் நுழையும் முன்னர் இந்தப் புனிதமான திருக்குளத்தில் நீராடினால் தனது உடல் சுத்தத் துடன் மனசுத்தியும் ஆகிறது.

**ஆகாஸகங்கை :**

இந்தத் தீர்த்தம் ஆலயத்தின் வடக்கு திசையிலிருந்து 5 கி.மீ. தூரத்தில் உள்ளது.

**பாபவினாசம் :**

இந்தத் தீர்த்தம் ஆலயத்தின் வடக்கு திசையிலிருந்து 5 கி.மீ. தூரத்திலுள்ளது.

**வைகுண்ட தீர்த்தம் :**

இந்தத் தீர்த்தம் ஆலயத்தின் வடக்கு திசையில் 5 கி.மீ. தூரத்திலுள்ளது.

**தும்புரு தீர்த்தம் :**

இந்தத் தீர்த்தம் ஆலயத்தின் வடக்கு திசையிலிருந்து 16 கி.மீ. தூரத்திலுள்ளது.

**தி.தி.தே. வனத்தோட்டம் :**

தேவஸ்தானத்தினர் திருமலையில் கண்களுக்கு விருந்தளிக்கும் விதத்தில் வனத்தோட்டம் வளர்க்கின்றனர். இந்தத் தோட்டத்தில் மிகவும் அழகான செடிகள், மரங்கள் அதிகமாக வளர்க்கப்படுகின்றன.

**புவியியல் வளைவு (சிலாதோரணம்) :**

புவியியல் அமைப்பில் இயற்கையாக அமைந்த இந்த சிலாதோரணம் ஆலயத்தின் வடமேற்கு திசையிலிருந்து 1 கி.மீ. தூரத்திலுள்ளது.

**நாதநீராஜன மண்டபம் :**

தர்ம பிரசார பரிஷத்தின் கீழ் இயக்கப்படுகிற இந்த மண்டபத்தில் சொற்பொழிவுகள், ஹரிகதைகள், சங்கீத பஜனைகள் இன்னும் பல கலைநிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன.

**ஸ்ரீவேங்கடேஸ்வரா தியான மண்டபம் :**

அபூர்வமான புராண பொருட்களோடு மட்டுமல்லாமல் சித்திர, சிலை கைவண்ண கலை வேலைப்பாடுகளோடு தியானத்திற்கு ஏற்றவாறு அமைந்த மண்டபம் இது. திருமலை எஸ்.வி. மியூஜியம் அருகே தியான நிலையத்தில் அமர்ந்து பக்தர்கள் பகவானை தியானித்து மனதில் ஏற்பட்ட மனச்சுமைகளை குறைத்துக் கொள்ளலாம்.

**மகாபாரத காவியம் உருவாக்கம்**

இதிகாசம் என்றால் இவ்வாறு நிகழ்ந்தது என்று பொருள். மகாபாரத காவிய நிகழ்வுகளின் இறுதியில், திருதராஷ்டிரன், விதுரர் ஆகியோரின் மறைவுக்குப் பின்னரே வியாசர் மூலம் பாரத காவியம் உருவாக்கப்பட்டுள்ளது. ஒரு கட்டத்தில் நாரத மகரிஷி அறிவுரைப்படி காவியத்தை எழுத வேதவியாசர் பிரம்மதேவரை வழிபட்டார். பிரம்மதேவர் தோன்றி இந்த காவியத்தைப் படைப்பதற்கு ஸ்ரீமகாகணபதியின் பரிபூரண அருளைப்பெற வேண்டி வழி காட்டினார். அதன்படி வியாசர் விநாயகரை வழிபட, விநாயகரின் அருள் வித்தியாசமாகக் கிட்டியது. மகாபாரத காவியத்தை எழுத்தில் வடித்திட விநாயகர் உதவ வேண்டும் என்ற பிரார்த்தனை செய்து நின்றார் வியாசர். விநாயகப் பெருமானோ ஒரு நிபந்தனை விதித்து தன் சம்மதத்தினை அளித்தார். அதன்படி விநாயகர் தன் எழுதுகோல் நிற்காது என்றும், அந்த வேகத்திற்கு ஈடு கொடுத்து காவியத்தை உரைப்பதானால், தான் எழுத்தினால் வடித்திட தயாராக இருப்பதாகவும் அருளினார்.

வியாசரோ தனது பங்கிற்கு ஒரு பிரார்த்தனை செய்தார். (நிபந்தனை என்ற வார்த்தை முறையாக இருக்காது) தன்னால் உரைக்கப்படும் காவியத்தினை எழுதும்போது அதன் பொருளையும் உணர்ந்துக் கொண்டே எழுத வேண்டும் என்று பிரார்த்தனை செய்தார். விநாயகப் பெருமானும் அதை ஏற்றுக் கொள்ள மகாபாரத காவியம் உருப்பெறத் தொடங்கியது.

காவியத்தில் மகாபாரத முடிச்சுக்கள் என்று சில இடங்கள் காணப்படுகின்றன. அதாவது வியாசர் காவியத்தினை உரைக்கும் போது சில கடினமான சுலோகங்களை கூறுவாராம். அவற்றின் பொருளை விநாயகப் பெருமான் உணர்ந்து தெளிவுக் கொள்ள எடுத்துக் கொள்ளும் நேரத்தினை, மேலும் பல சுலோகங்களை உருவாக்குவதற்கு பயன்படுத்திக் கொள்வாராம். மகாபாரத காவியம் உருவாவதற்கு மூன்றாண்டு காலம் எடுத்துக் கொண்டதாக அறியப்படுகிறது. மூன்றாண்டு காலமும் பரிசுத்தமான நியதிகளுடன் இருந்து ஆதிமுதல் முழு மகாபாரதத்தினை உரைத்ததாகக் காணப்படுகிறது. (ஆதாரம்: ஆதிபர்வத்தில் 62வது அத்தியாயமாகக் காணப்படும்

**திருப்பதி சுற்றுப்பகுதிகளில் உள்ள தி.தி.தே. ஆலய அமைவிடம்**
**திருப்பதி ஆர்.டி.சி. பேருந்து நிலையத்திலிருந்து கி.மீ.களில்**

1) ஸ்ரீபத்மாவதி தாயார் ஆலயம், திருச்சானூர் ...05 கி.மீ.
2) ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி ஆலயம், ஸ்ரீநிவாச மங்காபுரம்...12 கி.மீ.
3) ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி ஆலயம், திருப்பதி ...01 கி.மீ.
4) ஸ்ரீகோதண்டராம ஸ்வாமி ஆலயம், திருப்பதி...2.3 கி.மீ.
5) ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி ஆலயம், திருப்பதி...03 கி.மீ.
6) ஸ்ரீபிரசன்ன வேங்கடேஸ்வர ஸ்வாமி ஆலயம், அப்பளாய குண்டா...18 கி.மீ.
7) ஸ்ரீவேதவல்லி சமேத ஸ்ரீவேத நாராயண ஸ்வாமி ஆலயம், நாகுலாபுரம்...65 கி.மீ.
8) ஸ்ரீபத்மாவதி சமேத ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி ஆலயம், நாராயண வனம்...37 கி.மீ.
9) ஸ்ரீவேணுகோபால ஸ்வாமி ஆலயம், கார்வேடி நகரம்...48 கி.மீ.
10) ஸ்ரீகோதண்டராமாலயம், ஒண்டிமிட்டா, கடப்பா மாவட்டம்...116 கி.மீ.

அம்ஸாவதரண பர்வம்). இன்றும் பாரத நாட்டின் வடகோடியில் பத்ரிநாத் ஆலயத்திற்கு சிறிது தூரத்தில் ஒரு விநாயகரின் சிலையோடு வியாசர் குகை என்று ஒரு பகுதி உள்ளது. அதுவே மகாபாரதம் உருக் கொண்ட புண்ணிய பூமியாகும்.

இவ்வாறு வேதவியாசரால் உருவாக்கப்பட்ட மகாபாரத காவியத்தின் அளவு நம்மை பிரம்மிக்க வைக்கும். மொத்தம் 60 லக்ஷம் சுலோகங்கள். வாசகர்கள் யாரும் அதிர்ச்சி அடைய வேண்டாம். இவற்றில் 30 லக்ஷம் சுலோகங்கள் தேவலோகத்தில் மகரிஷி நாரதரால் சொல்லப்பட்டு நின்றது. 15 லக்ஷம் சுலோகங்கள் பித்ருலோகத்தில் அசிதர் மற்றும் தேவலர் போன்ற ரிஷிகளால் சொல்லப்பட்டு நின்றது. 14 லக்ஷம் சுலோகங்கள் ராக்ஷஸர்கள் மற்றும் யக்ஷர்கள் லோகத்தில் சுகமுனிவரால் சொல்லப்பட்டு நின்றது. ஒரு லக்ஷம் சுலோகங்கள் மனுஷ்ய லோகத்தில் பரீக்ஷித் என்ற மன்னனின் மகன் ஜனமேஜயன் சர்ப்ப யாகம் செய்யும்போது வியாசரால் ஏவப்பட்ட அவரது சிஷ்யர் வைசம் பாயணரால் சொல்லப்பட்டு நின்றது. இவ்வாறு மகத்தான பின்னணி கொண்ட வேத வியாசரின் பிறந்த தினத்தையே குரு பூர்ணிமாவாகக் கொண்டாடி வருகின்றோம். தொடர்ந்து அலசுவோம். ஆதி காவிய நாயகர்களை... தொடரும்...

# ஸ்ரீவாரி பாதங்கள்



**ஸ்ரீமந்நாராயணனை திருப்பாதங்களிலிருந்து ஆரம்பித்து, திரு முகம் வரை தரிசனம் செய்தல் வேண்டும் என்பது பெரியோர்களின் வாக்கு. "பாத தரிசனம் பாபவிமோசனம்" என்பதற்கிணங்க, ஸ்ரீமந் நாராயணன் வைகுண்டத்திலிருந்து மஹாலக்ஷ்மி தாயாரை தேடிக் கொண்டு இப்பூவுலகில் தன்னுடைய திருப்பாதங்களை வைத்த இடமே திருமலையிலிருக்கும் இந்த நாராயணகிரி. அலிபிரியில் "பாதால மண்டபம்" என்று ஸ்ரீவாரி பாதங்களுக்கு தனி ஆலயமே அமைந்துள்ளதை காணலாம். அதுமட்டுமின்றி திருவேங்கடமுடையானின் வலது திருக்கரம் (கடி ஹஸ்தம்) தன்னுடைய திருப்பாதங்களை சுட்டிக்காட்டும் வண்ணம் அமைந்துள்ளதை காணும்போது "ஸ்வாமி திருப்பாதங்களை பற்றினால் நாம் நம் வாழ்வில் அனைத்து துன்பங்களிலிருந்தும் விடுபட்டு சுகமான வாழ்வு வாழ்ந்து, வைகுந்த பதவியை அடையலாம் என்பதை உணர்த்துவது போல் அமைந்துள்ளது.**

# மனம் ஒரு தெய்வக்கருவூலம்

திருமதி. கே. சுப்புலெட்சுமி, பரமகுடி

ஒவ்வொரு மனித மனமும் தெய்வீகம். அவ்விடமே இறையுறையும் கோயில். மனமும் கருவூலமாகும். இது மனிதருக்கு மட்டுமே கிடைத்தற்கரியதாகும். இதில் தேவையற்ற குப்பைகள் சேர்ந்துவிடாது தூய்மையும் தூயவன் இருப்பிடமாகவும் அமைத்துக் கொள்வதே மாந்தரின் நற்பணியாகும். கவனமுடன் பாதுகாப்பது அவசியம் ஆகும்.

உலகைப் படைத்த இறைவன் அதை உணர்த்துவதற்காக மனிதனுக்கு மனத்தை அமைத்தான். மனித மனத்தில் இறையுறைந்திருப்பதை உணர்ந்தால் மட்டுமே நல்லன நாளும் நிரம்பச் செய்து கருவூலம் பொற்கலசமாக்க முடியும். கோயிலில் வழிபாடு செய்யும் போது மட்டும் மனத்தூய்மை கொள்ளுவது இயல்பு.

அந்நிலையை எப்போதும் கைக்கொள்வது அவசியமாகும். அதற்குரிய செயல்கள் அன்பு, அரவணைப்பு, சின மின்மை, நட்பு பாராட்டல், ஏழ்மைக்கு இரங்கல், துயர் களைதல், அறிவின் மேம்பாடு, செய்தொழிலில் நிதானம், கவனம், மேம்பாடு, கல்வி, கலை வளர்த்தல் போன்றவையே இறை விரும்புவான் என்பதால் இவற்றை மனக் கருவூலத்தில் சேமிக்க வேண்டும்.

சேமித்தவற்றைப் பாதுகாக்க வேண்டும். அவ்வாறு பாதுகாப்பதே கருவூலப் பொன்னாகும். நாம் வாழும் வீடு, அறைகள், உடைகள் தூய்மையாக வைத்திருக்கிறோம். ஆனால் உள்ளே இருக்கும் மனம் தூய்மையுடையதாக இருக்க வேண்டாமா? "மனமது செம்மையானால் மந்திரம் செபிக்க வேண்டாம்" என்ற முதுமொழி. எதைக் காட்டுகிறது? தூய்மையான உள்ளத்தில் தான் தாயின் கருணை போன்ற அன்பின் ஊற்று அமுதமாக வெளிப்போந்து எல்லா இதயங்களிலும் போய் சேரும்.

பக்தியும் சேவையும் இரு கண்களெனக் கொண்டால் மனத்தூய்மைதானே வந்தனையும். பக்தியால் சேவையும், சேவையால் பக்தியும் சிறப்படையும். இருகண்களும் ஒன்றையே நோக்கும். அதுபோல் பக்தியும், சேவையும் ஒன்றாகி தெய்வ நிலையாகும். இவை சிறப்படையவே மனமென்னும் கருவூலத்தைப் பாதுகாக்க வேண்டும். கடவுள் நிலை இதயத் தாமரையில் அலைபாயும், ஆசைகளால் ஆழ்கடலில் அமிழ்ந்து விடாமல் கல்வி, அறம், கலைகள் மூலம் ஓங்கி உயர்ந்த நீர்மேல் நிலைபெறும் தாமரை மலர்போல் அமைய வேண்டும். புறத் துருப்புகளைப் பேணுவது போல் அகம் எனும் மனத்தைப் பேணிப் பாதுகாக்கப் படல் வேண்டும். இதைத்தான் வள்ளுவப் பெருந்தகையும்

"புறத்துருப் பெல்லாம் எவன் செய்யும் யாக்கை
அகத்துறுப்பு அன்பிலவர்க்கு"

என்பர். இதனை ஆய்ந்து நோக்கினால் அகத்துறுப்பு என்பது மனம் என்னும் தெய்வீகக் கருவூலமாகும்.

"அருள்சேர்ந்த நெஞ்சினார்க் கில்லை இருள்
சேர்ந்த இன்னா உலகம் புகல்"

அறியாமை என்னும் இருள் சூழ்ந்த உலகில் நுழையமாட்டாமல் நல்வாழ்வு பெற அருள் நிறைந்த மனத்தவர்கள் என்பது எதைக் காட்டுகிறது. அருள் நிறை மனக்கோயிலில் அமைந்த இறையுறை கருவறையை அன்பின் பண்பால் நலம் பெருக வைக்க வேண்டும். நல்லன நாளும் சிந்திக்கவும், நல்லன பேசவும், நற்றொண்டாற்றவும், பற்றோடு பயனாக்கவும் கருவூலம் பயன்படுதல் வேண்டும். கருவறை தெய்வமானது கருவூலப் பொருளாகி அரும் பணியாற்ற அனுதினமும் பயனாகும். மனமென்னும் கருவூலம் மாண்புடையதாக அமைய தூய்மையும், வாய்மையும் கருவூலக் காப்பாக அமைய வேண்டும். மெய்மையுள் அமைந்த உயிர் மேவிய இறையே கருவூலப் பொருள் என உணர்ந்து உள்ளம் உவகை கொள்ள வாழவுள்ள நற்செயல். மனமென்னும் கருவூலத்தைக் காப்பதே கடவுளின் கருணை பெற்று வாழ்வாங்கு வாழ உதவும்.

மனமென்ற கருவூலம் மாண்புடைய தெய்வமென உணர்ந்து செயல்பட, வாழ்வு வளமோங்கி வல்லோனாக்க உதவும். இனங்காணா இன்பம் இனிதே நிறையும்.

# வேத வியாசர்

சித்திரக் கதை

கதை மூலம் : திரு. டி. ஸ்ரீநிவாசதீக்ஷிதுலு.
சித்திரம் : திரு. கே. துளசி பிரசாத்

மீனவ அரசன் தாசராஜன். அவனின் வளர்ப்பு மகள் மச்ச கந்தா. யமுனை நதிக்கரையில் மக்கள் நதியினை கடக்க படகோட்டுவது அவன் வேலை. ஒரு நாள்...





மச்சகந்தா ஆலோசித்தாள். அவசரப்படாமல் நல்ல முடிவுக்கு வந்தாள். மகரிஷியிடம் இரண்டு கோரிக்கைகளை முன் வைத்தாள். அவற்றை நிறைவேற்றினால் தங்கள் கோரிக்கையை நான் ஏற்பேன் என்றாள்.
ஐயா! என் மேனியோ மீன் வாடை கொண்டது. தாங்கள் ஏற்பீரா?
இன்று முதல் உன் மீதுள்ள மீன் வாடை அகன்று நறுமணம் வீசும். உன் பெயர் மச்ச கந்தா அல்ல. யோஜன கந்தா. இதுவே என் வரம்.
ஐயா! என்றும் நான் இளமையோடு இருத்தல் வேண்டும்.
அப்படியே. இரண்டாவது வரமும் அளிக்கின்றேன்.
மகரிஷி அருளால் யோஜன கந்தா திவ்ய தேஜசுடன் படகை ஓர் தீவிற்கு செலுத்தினாள்.
இவ்விடம் மிகவும் அழகாக உள்ளதே!
உலக நன்மை பொருட்டு மகரிஷி அருளால் கர்ப்பத்திலிருந்து யௌவனத்துடன் வேதவியாசர் பிறந்தார்
அன்னையே! வணங்குகிறேன். தவத்திற்குச் செல்கிறேன்.
மகாபாரதம், பாகவதம், 18 புராணங்கள் மற்றும் வேதத்தையும் தொகுத்து அளித்ததால் வேதவியாசர் "ஆதி குரு"வானார்.
"குருவே நம:"
முற்றும்.

## பல்சுவை பகுதி

1. சுதர்ஷனாஷ்டகம் இயற்றியவர் யார்?

   அ) தேசிகர்　　ஆ) அப்புள்ளார்　　இ) எம்பார்

2. வேதவியாசர் இயற்றிய புராணங்கள் எத்தனை?

   அ) 15　　ஆ) 17　　இ) 18

3. திருமலையில் ஜுலை மாதம் நடைபெறும் ஆஸ்தானம்?

   அ) தீபாவளி　　ஆ) ஆடி ஆஸ்தானம்　　இ) ஆனிவர ஆஸ்தானம்

4. திருவேங்கடமுடையான் யாரிடம் கடன் பெற்றார்?

   அ) மகாலட்சுமி　　ஆ) குபேரன்　　இ) இந்திரன்

5. "மார்கழி திங்கள்" என்று பாடியவர் யார்?


   அ) பெரியாழ்வார்　　ஆ) நம்மாழ்வார்　　இ) ஆண்டாள்

**விடைகள்**
1) அ, 2) இ, 3) இ, 4) ஆ, 5) இ

### பொருத்துக...

1. யோக நிலை - அ. ஆக்சிஜன்
2. பஜகோவிந்தம் - ஆ. பாண்டியநாடு
3. துளசி - இ. பதஞ்சலி
4. மகாபாரதம் - ஈ. ஆதிசங்கரர்
5. திருமோகூர் - உ. வேதவியாசர்

1.இ, 2.ஈ, 3.அ, 4.உ, 5.ஆ.



### தெரிந்து கொள்ளலாமே...

அர்த்தா விஷண்ணா: ச்சிதிலாச்ச பீதா:
கோரேஷு ச வ்யாதிஷு வர்த்தமாநா:
ஸங்கீர்த்தய நாராயண சப்த மாத்ரம்
விமுக்த துர்க: சுகினோ பவந்தி

உடல் நலம் கெட்டாலும் மனம் துன்பமடையும் போதும் "நாராயணா" என்று சொன்ன உடன் துக்கம் தீர்ந்து சுகம் கிடைக்கும்.

- விஷ்ணு சகஸ்ர நாமம்

### வார்த்தைகளை சரியாக அணிவகுத்து வாக்கியம் அமைக்கவும்...


எம்பெருமான் துணை நமக்கு ஆட்கொள்ளாவிட்டாலும் நம்மை அவனே ஆட்கொண்டாலும்

எம்பெருமான் நம்மை ஆட்கொண்டாலும் ஆட்கொள்ளாவிட்டாலும் அவனே நமக்கு துணை

## சித்திரம் வரைதல்

இந்த சித்திரத்திற்கு வண்ணம் தீட்டுவோமா...

பக்கத்தில் உள்ள படத்தை இந்த கட்டத்தில் வரையுங்கள்...



### விடுகதை பகுதி...

1. இவன் வாலுக்கு வைய கமே நடுங்கும்.
2. கசக்கிப் பிழிந்தாலும் கடைசி வரை இனிப்பவன்.
3. மரத்திலிருந்து தொங்கு வான் ஆனால் பாம்பல்ல.

1.தேள், 2.கரும்பு, 3. விழுதுகள்



Printed by Sri P. Ramaraju, M.A., Special Officer (Press & Publications), T.T.D. Press, Tirupati and Published by Prof. K. Rajagopalan, Ph.D. on behalf of Tirumala Tirupati Devasthanams and Published at Tirupati – 517 507. Editor : Dr.V.G. Chokkalingam, M.A., Ph.D.





திருமலை ஆகாச கங்கை அருகில் முதன் முறையாக
நடைபெற்ற ஹனுமத்ஜெயந்தி விழா



திருமலை வஸந்த மண்டபத்தில் ஆகம முறைப்படி 2021, ஜூலை 20 அன்று
சுக்ல ஏகாதசி முன்னிட்டு நடைபெற்ற விஷ்ணு அர்ச்சனை நிகழ்ச்சியில் பங்கு
கொண்ட தி.தி.தே. கூடுதல் செயலாட்சித்தலைவர் திரு. ஏ.வி. தர்மா ரெட்டி அவர்கள்

# ஸ்ரீநிவாசமங்காபுரம்
# ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி சாக்ஷாத்கார வைபவோத்ஸவம்,
# 2021 ஜூலை 13 முதல் 15 வரை

